ஸ்ரீஜிநாய நம:

ஸ்ரீ 108, ஆசாரிய நிர்மல ஸாகர
அடிகளார் சங்கத்தாரின்

# தமிழ்நாடு விஜயம்

தொகுத்து எழுதியவர்
ஸ்ரீ 108, வர்த்தமான சாகர சுவாமிகள்

சீர்தூக்கி அமைத்தவர்
மல்லிநாத் ஜெயின் சாஸ்திரி
சென்னை.

வெளியிட்டவர்:
ஸ்ரீ ஆசாரிய நிர்மல ஸாகர சங்கம்.

ஸ்ரீ ஜிநாய நம :

ஸ்வஸ்தி ஸ்ரீ லக்ஷ்மி சேனபட்டாரக பட்டாசார்யவர்ய சுவாமியார் அவர்கள் (மேல்சித்தாமூர்) நல்கிய

# அணிந்துரை

ஸ்ரீ 108 ஆசாரிய நிர்மல ஸாகர அடிகளார் சங்கத்தினரின் தமிழ்நாடு விஜயம் என்ற புஸ்தகம் ஸ்ரீ 108 வர்த்தமான ஸாகர முனி அவர்களால் சங்க சுற்றுப் பயணத்தில் கண்ட கோவில்கள், க்ஷேத்திரங்கள், மலைகள், குகைகள், கிராமங்கள், நகரங்கள் ஆகிய இவைகள் விரிவாக எழுதப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகத்தில் எழுதியுள்ள விஷயங்கள் அனைத்துடன் விவரிக்கப்பட்டுள்ள கிராமங்கள், க்ஷேத்திரங்கள், மலைகள், குகைகள், நகரங்கள் ஆகியவைகளை தரிசனம் செய்வதற்கு இது உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆகவே அனைவரும் இப்புஸ்தகத்தைப் படித்து பயன் பெறுமாறு ஆசீர்வதிக்கின்றோம்.

பத்ரம்பூயாத், வர்த்ததாம் ஜினசாஸனம்,

ஜினகஞ்சிமடம்
மேல்சித்தாமூர்
16-2-78

ஸ்வஸ்திஸ்ரீ லக்ஷ்மி சேன
பட்டாரக பட்டாசார்யவர்ய
ஸ்வாமியார் அவர்கள்

பாரி அச்சகம் 127, பிராட்வே சென்னை-1

ஸ்ரீ ஜினாய நம:

உயர்திரு பரதசக்ரவர்த்தி ஜெயின் சாஸ்திரி,
'நியாய தீர்த்தா' அவர்கள் நல்கிய

# அணிந்துரை

நம் பாரத நாட்டின் பழம் பெரும் சமயங்களில் ஜைன சமயம் மிகப்பழமையானது என்ற உண்மையை நடுநிலை கொண்ட வரலாற்று வல்லுனர்கள் அனைவரும் அறிவர். இவ்வுண்மையை வைதீக நூல்களான ருக் வேதம், யஜுர் வேதம், மனுஸ்ம்ருதி, அக்னிபுராணம், நாகபுராணம், பிரம்மாண்டபுராணம் போன்ற பல் வேறு நூல்களில் தீர்த்தங்கரர்கள், சக்ரவர்த்திகள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதிலிருந்து நன்கு அறிந்து கொள்ள முடிகிறது. சுருங்கச் சொன்னால் ஜைன சமயம் வேத காலத்திற்கும் முற்பட்டது என்ற உண்மையை எவராலும் மறைக்க வியலாது.

ஜைன சமய வரலாற்றிலே தமிழகத்திற்கு ஒரு தனிப்பெருமை உண்டு. காரணம் இங்கு தோன்றிய அகளங்கர், குந்தகுந்தர் சமந்தபத்திரர், பூஜ்யபாதர் போன்ற ஜைன சமயத் துறவிகள் இயற்றிய தத்துவ நூல்கள், இருபாலருக்கான (இல்லறம், துறவறம்) ஒழுக்க நெறி நூல்கள், இலக்கணம், ஜோதிடம், தர்க்கம், போன்ற எண்ணற்ற நூல்கள் அன்றுபோல் இன்றும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன. இவைகள் யாவும் விலை மதிக்கமுடியாத இரத்தினங்களாகப் போற்றப்படுகின்றன.

இப்படிப்பட்ட முனிபுங்கவர்கள் தோன்றிய தமிழகத்தில் இன்று ஜைன சமயம், தாழ்ந்திருப்பதற்கும், உணர்வின்றிக் காணப்படுவதற்கும் பின்னர் துறவிகள் தோன்றாதது ஒரு காரணமாகும்; வடநாட்டில் திகழும் துறவிகள் சங்கம் தமிழகத்திற்கு வருகை தராதது மற்றொரு காரணம்; மூன்றாவதாக மொழிப் பிரச்னையும் ஒரு காரணமாகக் கொள்ளலாம்.

இத்தகைய சூழ்நிலைக்கிடையில் தவத்திரு பூஜ்ய ஸ்ரீ 108 ஆசார்ய நிர்மல சாகர சுவாமிகளின் முனிசங்கம் இரண்டாண்டிற்கு முன் தமிழகத்திற்கு விஜயம் செய்தது. இந்நிகழ்ச்சி தமிழகம் செய்த நல்வினைப் பயன் எனில் மிகையாகாது. இப்பெருமகனின் வருகையால் உறங்கிக் கிடந்த ஜைனர்களின் உள்ளங்கள் பெரியதொரு மறு மலர்ச்சியைக் கண்டன. நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் அடிகளார் அறவுரை பகன்று அறவழி யைக் கடைபிடிக்கச் செய்துள்ளார். பண்டைய காலத் தைப் போன்றே இங்கு இவருக்கு பல தொல்லைகள் ஏற் பட்டன. அப்போதெல்லாம் உண்மைத் துறவிக்கே உரித்தான சமதாபாவத்துடன் காட்சியளித்த நிகழ்ச்சி அனைவரையும் வியப்பிலாழ்த்தியது.

பூஜ்யஸ்ரீ ஆசார்ய 108 நிர்மல சாகர சுவாமிகள் சங்கம் தமிழகமெங்கும் விஜயம் செய்து அறவுரை மூலம் பல்வேறு சமயத்தவர்களையும் ஈர்க்கச் செய்த பெருமை போற்றுதற்குரிய செயலாகும். இதை தவத்தின் பெருமை என்று கூறினாலும் மிகையாகாது. இத்தகைய நிர்க்ருந்த முனிவர்களைவரவேற்றுப் போற்றும் பாக்கியத்தை தமிழகம் சுமார் 50 ஆண்டுகால இடைவெளிக்குப்பிறகு பெற்றது என்பதைப் பூரிப்போடு,கூறிக்கொள்ளுகிறேன்.எல்லாவற் றிருக்கும் சிறப்பாக ஜினதீக்ஷை ஏற்கும் விதிமுறைகள் பல பவ்யர்களின் உள்ளத்தை நெகிழச் செய்துள்ளன. இக் காட்சி வாழ்நாளிலே சுலபமாக காணப் பெருவது அரிது.

மேலும் இந்நூலில் உள்ளத்தை உருக்கும் ஜின தீக்ஷை விதிமுறைகளும், அரிய பல சம்பவங்களும், பல் வேறு க்ஷேத்திரங்களின் பெருமைகளும், அறிவுரைகளும் சுருக்கமாக உணர்த்தப்பட்டுள்ளதை அனைவரும் படித்து, மகிழ்ந்து, சதுர்த்தகாலத்து முனிவரைப் போல் தற்கால முனிவர்களை வணங்கி, துதித்து நற்காட்சி பெற்று வீடு பேறுபெற வழி காணுமாறு அனைவரையும் தாழ்மையுடன்

கேட்டுக்கொள்ளுகிறேன். மதிப்புரை வழங்க என்னை ஊக்குவித்த திரு. மல்லிநாத் ஜெயின் சாஸ்திரியார் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் வாழ்க நல்லறம்! வளர்க ஜைனம்!! வாழ்க துறவறம்!!!

ஸ்ரீ ஜிநாய நம:

உயர்திரு. N. J. நாக குமார சாஸ்திரி

'நியாய தீர்த்தா' அவர்கள் நல்கிய

# அணிந்துரை

பூஜ்ய ஸ்ரீ108 ஆசாரிய நிர்மல சாகர அடிகளார் தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்தது தமிழகத்தின் தவப்பயனேயாகும். அடிகளார் உத்தரப் பிரதேசத்தில் பிறந்தவராயினும் தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்து, சங்கம் அமைத்து, தமிழ் நாடு பூராவும் சென்று திருவறப் பிரசாரம் செய்தது பாராட்டத்தக்க விஷயமாகும்

அடிகளாரின் விஜயத்தை விளக்கும் இந்நூல் நம் முன்னோர்களாகிய அறவோர்களின் தொண்டையும், அவர்கள் விட்டுச் சென்ற சிறப்புமிக்க குகைகள், கல்வெட்டுகள், கற்படுக்கைகள் ஆகியவைகளின் பெருமைகளையும் நினைவுறுத்துகின்றது. அவ்விடங்களை நாம் நேரில் சென்று காண முடியாவிடினும், நூல் வாயிலாகக் காண வழிசெய்த சாது சங்கத்தின் செயலை போற்றாமலிருக்க முடியாது. ஆகவே அடிகளாருக்கும், அடிகளாரின் சங்க சாதுக்களுக்கும் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூலுக்கு அணிந்துரை வழங்குமாறு ஊக்குவித்த திரு மல்லிநாத் ஜெயின் சாஸ்திரியாருக்கும் என் அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியில் தமிழகத்து ஜைன பெருமக்களனைவரையும் கேட்டுக்கொள்வதாவது: இந்நூலை ஒரு முறையாவது அவசியம் படித்து பயனடைய வேண்டும் என்பதாகும்.

ஸ்ரீஜிநாய நம :

# முன்னுரை

## தென்னாட்டில் (தமிழகத்தில்) ஜைன சமயம்

ஜைன சமயத்தின் தீர்த்தங்கரர்களான பகவான் விருஷப தேவர் முதல் மகாவீர வர்த்தமானர் இறுதியாக இருபத்து நால்வரும் வடநாட்டிலேயே தோன்றி, தவமியற்றி முக்தி எய்தினர். ஆனால் அவர்களின் ஸமவஸரண விஹாரம் (அறவுரை) தென்னாட்டிலும் நடைபெற்றது என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஏனெனில் அவர்கள் சஞ்சாரம் செய்த நாடுகளுள் திராவிடமும் ஒன்று என்பதை நூல்கள் வலியுறுத்துகின்றன. இருப்பினும் தற்கால சரித்திர ஆசிரியர்கள் இறுதி சுருத கேவலியான பத்ரபாகு சுவாமிகளின் வருகைக்குப் பின்னரே தென்னாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் ஜைனம் பரவியது எனக் கூறியும் எழுதியும் வருகின்றனர்.

அதாவது :—மௌரியப் பேரரசரான சந்திரகுப்தர் காலத்தில் வடநாட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அதன் காரணமாக பத்ரபாகு சுவாமிகள் தம் பன்னீராயிரம் சீடர்களுடன் தென்னாடு நோக்கிப் பயணமானார். அவருடன் அவருடைய ஒப்பற்றச் சீடரான சந்திரகுப்த மாமன்னரும், தம் அரச பதவியைத் துறந்து, தம் குருவுடன் செல்லலானார். கர்நாடகத்திலுள்ள சிரவண பௌகுளா வந்ததும் பத்ரபாகு சுவாமிகள் தம் ஆயுளின் முடிவு நெருங்கியுள்ளதை அறிந்து, தம் சீடர்களானத் துறவிகளைச் சேர, சோழ, பாண்டிய நாட்டிற்குச் செல்லுமாறு பணித்தார். பின்னர் அவர் சல்லேகனையை (வடக்கிருத்தல்) ஏற்று நற்கதி எய்தினர். சந்திரகுப்தரும் துறவியாகி குருவின் அடிச் சுவட்டைப் பின்பற்றினர்.

இக்கருத்தை வலியுறுத்தும் கல்வெட்டுகள் சந்திரகிரி மலையில் (சிரவண பௌிகுளா) உள்ளன. மேலும் சந்திரகுப்த மன்னர் ஜைன தருமத்தைப் பின்பற்றி ஒழுகினர்

என்பதை அறிஞர் லூயிஸ் ரைஸ், ஆர். நரசிம்மாசாரியார், டாக்டர் ப்ளீட், டாக்டர் பி. எ ஸ்மித் ஆகியோர் வலி யுறுத்துகின்றனர்.

இக்கருத்தைக் கொண்டு ஆராயுமிடத்து பத்ரபாகு அடிகளாரின் தென்னாட்டு விஜயம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த தென ஆராய்ச்சி வல்லுநர்கள் கணிக் கின்றனர்.

ஆனால் அடிகளார் தென்னாட்டிற்கு விஜயம் செய்யும் முன்னரே தென்னாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் ஜைன சமயம் தழைத்தோங்கி இருந்திருக்க வேண்டும். ஏனெனில் திகம்பர ஜைன சமய சாதுக்கள் கண்ட இடங் களில் உணவு ஏற்கமாட்டார்கள். விதிமுறைப்படி கொடுத் தால் மட்டுமே ஏற்பார்கள். இந்நிலையை பத்ரபாகு அடி களார் அறியாதவரல்ல. பல்லாயிரக் கணக்கான துறவி கள் வருகைத் தருவார்களாயின் அவர்களை ஏற்று உபசரிக் கத்தக்க ஜைனர்கள் இருந்திருக்க வேண்டும் என்பதைப் பேராசிரியர் A. N. உபாத்யாயே அவர்கள் தம் பிரவசன ஸார முன்னுரையில் வலியுறுத்துகின்றார்.

நமக்கு அருகிலுள்ள இலங்கையிலும் ஜைன சமயம் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே விளங்கியதாக பௌத்த நூலான 'மகாவம்சம்' கூறுகிறது. அதில் கூறப்படுவதாவது:—நிருக்ருந்த சமண முனிகளுக்காக 'கிரி' என்ற கட்டம் கட்டப்பட்டது. அதில் பல ஜைனத் துறவிகள் வசித்து வந்தனர். அத்துறவிகளுக்காக அரசன் ஜிநாலயம் ஒன்றையும் நிறுவினான் என்பதாகும். ஜைனத் துறவிகள் கப்பல் முதலிய வாகனங்களில் பிரயாணம் செய்யமாட்டார்கள். அவர்கள் இலங்கைக்குத் தமிழ்நாட் டின் வழியாகத்தான் சென்றிருக்கவேண்டும். மேலும் அத்துறவிகள் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களாகவே இருந்திருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை.

அத்துடன் 'மெக்டோநல்' என்ற பேராசிரியர் சமஸ்கிருத இலக்கண இலக்கிய வரலாற்றைக் கூறுகையில் தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியத்தையும் குறிப்பிடுகிறார். 'இந்திரம்' என்ற சமஸ்கிருத இலக்கணத்தின் காலமும் தொல்காப்பியத்தின் காலமும் ஒன்றாகும் என்பது அவரது கருத்தாகும். இந்திரத்தின் காலம் கி. மு. 350 ஆண்டாகும். ஆகவே தொல்காப்பியமும் கி. மு. 350 ஐச் சார்ந்தது என்பது அவரது முடிவாகும்.

மேலும் யூனான் நாட்டைச் சார்ந்த அலெக்சாண்டர் மன்னர் பாரத நாட்டின் மீது படை எடுத்தபோது அவருடன் அவருடைய ஜோதிஷியும் வந்திருந்தார். அவர் தமது குறிப்பில் தொல்காப்பியத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அலெக்சாண்டரின் படையெடுப்பு கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகையால் தொல்காப்பியமும் அக்காலத்தைச் சார்ந்த தென்பது தெற்றென விளங்குகின்றது. தொல்காப்பியம் ஒரு ஜைன இலக்கண நூல் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட விஷயமாகும். மேலும் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள ஓரறிவு முதல் ஐயறிவு வரை ஆறு பிரிவுகளான உயிரினங்கள் உண்டென போன்றதும், 'வினையின் நீங்கி விளங்கிய அறிவன் முனைவன் கண்டது முதல் நூலாகும்' என்ற கருத்தும் ஜைன சமயத்தையே சார்ந்ததாகும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது. அன்றியும் அந்நூலில் ஜைன சமயக் கொள்கைகள் கூறப்பட்டுள்ளதால், அதற்கு முன்னரே தமிழகத்தில் ஜைன சமயம் நிலவி இருந்ததென்பது ஒப்புக்கொள்ள வேண்டிய கருத்தாகும்.

இதைத் தவிர தமிழகத்திலுள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் கிடைத்துள்ள மிகப் பழைய கல்வெட்டுகள் பிராம்மி எழுத்துக்களில் உள்ளன. அவை அசோகருடைய கம்பங்களிலுள்ள எழுத்துக்களோடு ஒத்திருக்கின்றன. ஆகவே அவை கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச்

சார்ந்தவைகளாகவும், ஜைன சமய சார்புடையவைகளாக வும் கருதப்படுகின்றன. அத்துடன் தமிழ்நாட்டின் பழைய கல்வெட்டின் பிராமி எழுத்துக்களும் இலங்கையிலுள்ள கல்லெட்டின் எழுத்துக்களும் ஒத்திருக்கின்றன, ஆதலால் இவை சம காலத்தவை என்பதும், கி. மு. மூன்ரும் நூற் ருண்டிற்கு முற்பட்டவை என்பதும் புலனுகிறது.

ஆகவே இத்தகைய காரணங்களைக் கொண்டும், நம் அண்டைய நாடான இலங்கையில் கி. மு. நான்காம் ஐந்தாம் நூற்ருண்டிலேயே ஜைனம் நிலவி இருந்ததைக் கொண்டும், அங்கு பரவிய ஜைனம் நம் தமிழகத்தைத் தொடாமல் சென்றிருக்க முடியாது என்ற கருத்தைக் கொண்டும், தமிழகத்தில் கி மு. மூன்ரும் நூற்ருண்டிற்கு முன்னரே ஜைன சமயம் நிலவி இருந்தது என்பதில் எவ் வித ஐயமும் கொள்வதற்கில்லை. ஆதலால் பத்ரபாகு அடிகளாரின் சீடர்களான அறவோர்கள் தமிழகத்தில் வருவதற்கு முன்னரே இங்கு ஜைனம் பரவி இருந்தது என்பதாகும். ஆகவேதான் அடிகளார் தம் சீடர்களைத் தமிழகத்திற்கு அனுப்பி வைத்தார் என்பதும் ஏற்கத்தக்க தாகிறது.

## ஜைன அறவோர்களின் தொண்டு

தமிழகத்தில் ஜைன சமயக் கொள்கைகளைப் பரப்பும் பொறுப்பு ஜைன துறவிகளிடமே நிலவி இருந்தது. அத் தூயோர்கள் சங்கங்களை அமைத்துக்கொண்டு ஆங்காங் குச் சென்று தம் சமயக் கொள்கைகளையும், அறத்தையும் பரப்பி வந்தனர். அவர்கள் தூய துறவற ஒழுக்கத்தைப் பின்பற்றி இருந்தமையாலும், பிறந்தமேனியோடிருந்ததா லும், உணவைத் தவிர தேவைகள் ஏதுமில்லாமையாலும், தவத்திற்கேற்ற தனிமையான இடம் வேண்டியிருந்ததா லும் மலைகளையும், குகைகளையும் நாடினர் என்பது கருத் தில் கொள்ளவேண்டிய தாகிறது. ஆனல் மக்கள் அத்

தூயோர்களிடம் சென்று அறங்களைக் கேட்டு யாக்கையின் பயனைப் பெற்று வந்தனர். ஆகவே மலைகளிலும், குகைகளிலும், அத்தவத்தோர்கள் படுத்துறங்கிய கற் படுக்கைகளிலும் அவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. பொறிக்கப்படாதவைகளோ கணக்கில. இத்தகைய அறவோர்கள் கட்டுப்பாடுடன் தமிழகமெங்கும் அறக் கொள்கைகளைப் பரப்பி வந்தனர் என்பதைக் கல்வெட்டுகள் பறைசாற்றுகின்றன.

பண்டைய காலத்தில் சென்னைமாநகர் முக்கிய நகரமாக விளங்கவில்லை. காஞ்சி, மதுரை போன்ற நகரங்களே சிறப்புற்றிருந்தன. ஆகவே அக்காலத்தில் சமண அறவோர்கள் சமணர் மலை, கழுகுமலை, திருச்சாரணத்து மலை ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு பல இடங்களில் கல்வி நிலையங்களை அமைத்து, சமணக் கல்வியான ஜைன சித்தாந்தத்தையும், அறத்தையும் பரப்பி வந்தனர் என்பதை கழுகுமலை போன்ற இடங்களிலுள்ள கல்வெட்டுகள் வலியுறுத்துகின்றன. இவர்கள் உடலையும், ஆவியையும் அறத்திற்காகவே அற்பணித்து அல்லும், பகலும் ஓயாது அறப்பணியில் ஈடுபட்டு வந்தனர். முற்காலத்தில் இங்கு ஜைன சமயம் சிறப்புற்றிருந்ததற்கு இத்தூயோர்களே காரணமாவர் இவர்கள் மக்களுக்கு அறத்தை உரைத்தும், நூல்களைப் படைத்தும் அறத் தொண்டாற்றி வந்தனர்

ஆரிஜை (பெண் துறவி)கள் :—தமிழகத்தில் பண்டைக் கால பெண்பால் துறவிகளான ஆர்யாங்கனைகளும் (ஆரிகை) ஜைன சமய கொள்கைகளைப் பரப்புவதில் பெரும் பங்கு கொண்டிருந்தனர். பெண் துறவிகள் பெண்பாலோருக்கு அறம் புகட்டுவதில் பெரிதும் ஈடுபட்டனர். ஏனெனில் சாதுக்கள் பிறந்த மேனியோடிருந்ததாலும், அவர்களிடம் அணுகி அறம் கேட்பதைவிட பெண் துறவிகளான ஆர்யாங்கனைகளிடம் நெருங்கி பழகி அறங் கேட்

பது இல்லத்தரசிகளுக்கு ஏற்றதாக இருந்தது ஆகவே ஆரிகைகளின் அறத்தொண்டு பெரிதும் போற்றப்பட்டு வந்தது. இத்தகைய பெண் அறவோர்களான ஆரிகைகளும் பற்பல இடங்களில் கல்வி நிலையங்களை அமைத்து அறத்தையும், சமூகக் கல்வியையும் போதித்து வந்தார்கள் என்பதை அக்கால கல்வெட்டுகள் நமக்கு நினைவூட்டுகின்றன. இதற்கு எடுத்துக் காட்டாக தொண்டூருக்கு அருகிலுள்ள 'விடால்' என்னுமிடத்தில் கனவீர குரத்தி என்ற (குரத்தி எனில் பெண் துறவி எனப் பொருள்படும்) ஆர்யாங்களை யொருவர் ஐந்நூறு பெண் துறவிகளுக்கு கல்வி போதித்து கலாசாலை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இங்ஙனம் ஆண், பெண் துறவிகள் அனைவரும் ஜைன சமய வளர்ச்சிக்காக செய்த தொண்டு அளவிடற்பாலதன்று. நாம் இவ்வாறு ஐயம் கொள்ளவும் இடமளிக்கிறது; யாதெனில் ஜைனத் துறவிகள் இருப்பதாலேயே ஜைன சமயம் மேன்மேலும் பரவுகின்றது. ஆகவே எவ்வகையிலாவது அத்துறவிகளை ஒழித்துக்கட்டவேண்டுமெனத் திட்டமிட்டு மதுரையில் எண்ணாயிரம் சமணத் துறவிகளைக் கழுவிலேற்றிக் கொன்றூர்கள் போலும்! அவ்வறவோர்கள் நம் அறத்திற்காகவே தம் உடலையும், உயிரையும் பலி இட்டார்கள். இன்றும் அவர்களின் தியாகம் மேருமலைபோல் ஒப்பற்று உயர்ந்து நிற்கின்றது என்னே அவர்களின் தியாகம்! என்னே அவர்களின் சமயப் பற்று! அதற்கு ஒப்புவமையாக எதையுமே கூற இயலாது. அத்தகைய அறவோர்கள் குன்றியதாலேயே நம் அறமும், சமயமும் குன்றியது என்பது இன்றும் என்றும் மறக்க முடியாத ஒன்ருகும்.

## அரசு உதவி

எந்த ஒரு மதமும் அரசாங்க உதவி இல்லாமல் முன்னேற முடியாது. 'அரசன் எவ்வழியோ மக்கள் அவ்வழி'

என்பது நினைவுகொள்ளத் தக்கது. பண்டைக் காலத்தில் பல்லவ, சேர சோழ, பாண்டிய மன்னர்களுள் சிலர் ஜைன சமயத்தைப் பின்பற்றினர். சிலர் ஜைன சமயத்திற்குப் பெரிதும் ஆதரவளித்தனர். அவர்களுள் பல்லவ மன்னரான மகேந்திர வர்மர் ஜைன சமயத்தைத் தழுவி இருந்ததோடு 'மந்தவிலாஸ பிரஹஸனம்' என்ற நூலை எழுதி ஜைன சமயத்தைப் பரப்பினர். பல்லவ ராஜ குடும்ப பெண்மணி யொருவர் ஜிநேந்திர பகவானிடம் அதிக பக்தி கொண்டிருந்தாரெனத் திருமலைக் கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கிறது. முதலாம் இராஜ ராஜ சோழருடைய தமக்கையான குந்தவை தேவியார் திருமலை முதலிய பல இடங்களில் ஜைன ஆலயங்களை நிறுவியுள்ளார். கரிகால சோழன் இறுதியில் வடக்கிருந்து உயிர் நீத்தார் என்பதால் அவர் ஒரு ஜைனர் எனக் கருதப்படுகிறது. பாண்டிய மன்னர்களுள் கூன் பாண்டியன் ஜைனனே. அவர் காலத்தில்தான் ஜைன சமயம் அழிக்கப்பட்டது. எண்ணாயிரம் சமண முனிவர்கள் மதுரையில் கழுவிலேற்றிக் கொல்லப்பட்டனர். இத்தகைய கொடிய செயலுக்குத் தூண்டுகோலாயிருந்தவர்கள் அமைச்சர் குலச் சிறை மற்றும் மங்கையர்க்கரசி ஆகிய இருவருமாவர். சேர மன்னர் குடும்பத்தைச் சார்ந்த பலர், பல தலைமுறை வரை ஜைன சமயத்தைத் தழுவி இருந்தனர் என்று திருமலைக் கல்வெட்டு கூறுகின்றது. இங்ஙனம் அரசர்களும், அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களும் ஜைன சமயத்தைப் பின்பற்றியதோடு ஜைன சமயத்திற்குப் 'பள்ளிச் சந்தம்' போன்ற பல தானங்களையும் வழங்கியிருக்கின்றனர். பள்ளிச் சந்தம் எனில் ஜைன சமயக் கோயில், மடம், அறநிலையம் ஆகியவற்றிற்கு உதவியளிப்பதைக் குறிக்கும் சொல்லாகும் என P. B. தேசாய் குறிப்பிடுகிறார். இங்ஙனம் அரசர்கள், அரச குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆகிய பெருமக்களின் ஆதரவாலும் அரவணைப்பாலும் தமிழகத்தில் ஜைன சமயம் நெடுங்காலம் சிறப்புற்று விளங்கி வந்தது என்பது நன்கு புலனாகின்றது.

## தமிழுக்கு ஜைனர்களின் தொண்டு

ஜைன அறவோர்கள் ஓதுவதையும், நூல் எழுதுவதையும் கலையாகக் கொண்டவர்கள். தமிழுக்கு அத்தூயோர்கள் செய்த தொண்டு அளவிட முடியாதது. அவர்களின் படைப்பு சொல்நயம், பொருள்நயம் கொண்டது; அழியா வரம் பெற்றது; பேரின்பத்தையளிக்க வல்லது; தமிழுக்கு உயிரூட்டுவது ஆகிய பல சிறப்புக்களைக் கொண்டதாகும். அவைகளுள் பேரகத்தியம், தொல்காப்பியம், யாட்பெருங்கலம், நன்னூல் போன்ற இலக்கண நூல்களும், திருக்குறள், நாலடியார், பழமொழி போன்ற நீதி நூல்களும், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, சூளாமணி போன்ற இலக்கிய நூல்களும் திவாகரம் போன்ற நிகண்டு நூல்களும், கணிதம், இசை, பிரபந்தம், பரணி, அந்தாதி, சோதிடம் போன்ற இதர நூல்களும் ஜைன அறவோர்களின் ஒப்பற்ற தமிழ்த் தொண்டைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்நூல்கள் தமிழ் மக்களின் ஒழுக்கத்தைத் தூய்மையாக்க பெரிதும் உதவின என்பது வரலாற்று வல்லுநர்களின் சீரிய கருத்தாகும்.

தமிழர் ஒழுக்கத்தில் ஜைனரின் பங்கு:—

கொல்லாமை மற்றும் புலாலுண்ணாமை:—வேதங்களும், பிராமணீயமும், அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டவைகளல்ல. வேதங்களில் கூறப்பட்டுள்ள யாகங்களும், கிரியா காண்டங்களும் இம்சையை அடிப்படையாகக் கொண்டவை. அறத்தின் பெயரால் அத்தகைய இம்சையை அறவே செய்யக்கூடாது என்பதை விளக்கவே திருக்குறள் போன்ற நீதி நூல்கள் தோன்றின. குறளில் கூறியுள்ளதாவது:—

> கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா உயிரும் தொழும்.

எனத் திருக்குறளாசிரியர் கொல்லாமையையும் புலால் மறுத்தலையும் அழுத்தந் திருத்தமாக வலியுறுத்திக்

கூறியுள்ளார். ஆகவே இத்தகைய ஜைன நூல்களும், ஜைன அறவோர்களின் பிரசாரமும் தமிழகத்தில் இம்சையை நீக்கி அஹிம்சையைத் தழுவச் செய்தது. மேலும் புலாலுண்ணாமையையும் ஏற்கச் செய்தது எனில் மிகையாகாது.

ஒருசமயம் பகவான் மகாவீரருடைய பிறந்தநாள் விழாவில் சொற்பொழிவாற்றிய உயர் திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியார் தமிழகத்தில் ஜைன சமயம் இல்லையேல் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் புலாலுண்ணிகளாகவே இருந்திருப்போம். சாகபக்ஷிணிகளாக மாறியிருக்க மாட்டோம். கொல்லாமை மற்றும் புலாலுண்ணாமை ஆகிய இரண்டும் ஜைனர்களின் கொடையாகும் என்று கூறினார்.

ஆகவே தமிழகத்தில் கொல்லாமைக்கும், புலாலுண்ணாமைக்கும் அடிகோலியது ஜைன சமயமே என்பது மறுக்க இயலாத ஒன்றாகும்.

**கோயில்களும் உருவ வழிபாடும்:**

ஜைனர்கள் ஆரம்பகால முதலே கோயில்களைக் கட்டி அதில் தீர்த்தங்கரர்களின் திருமேனிகளை (சிலைகளை) நிறுவி வழிபட்டு வந்தனர். ஆனால் பிராமணர்கள் இதற்கு மாறாக இயற்கைத் தெய்வங்களான இந்திரன், வருணன், வாயு போன்றவற்றை வணங்கி வந்தனர். அவைகளுக்கு உருவமோ, கோயிலோ கிடையா. ஆனால் ஜைனர்கள் வழிபட்டு வந்த தீர்த்தங்கரர்களுக்கு உருவ அமைப்பு உண்டு. அத்தூயோர்கள் நம்மைப்போல் தாய்-தந்தையர்களின் வயிற்றில் உதித்தவர்கள். அவர்கள் இல்வாழ்க்கையான நல் வாழ்க்கையில் நலம்பெற வாழ்ந்து, இம்மானிடப் பிறவியில் செயற்கரிய நற்செயல்களைச் செய்து, ஒழுக்க மேம்பாட்டுடன் தவமியற்றி, வினைகளை வென்று, வீட்டுலகை எய்திய வேதநாயகர்கள். ஆகவே

ஒழுக்கத்தால் உயர்வடைந்த உத்தமர்களுடைய உருவங்களை (சிலைகளை) அமைத்து ஜைனர்கள் உருவ வழிபாடு செய்து வந்தனர். அத்தூய உருவ வழிபாடு தமிழக மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது. மக்கள் இவ் வழியை நாடலாயினர். இங்ஙனம் மக்கள் ஜைன வழிபாட்டைப் பின்பற்றுவது இந்துக்களுக்குப் பிடிக்கவில்லை ஆகவே இந்துக்கள் இவ்வுருவ வழிபாட்டைப் பின்பற்றி கோயில்களைக் கட்டியும், சிலைகளை அமைத்தும் பக்தி மார்க்கத்தைப் பரப்பலாயினர் அதற்கென பக்திப் பாடல்களைப் பாடியும், தமிழுக்கென கற்பனை தெய்வங்களைப் படைத்தும் மக்களைத் திசை திருப்பினர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றிய பின்னரே இந்து சமயத்தில் மறு மலர்ச்சியும், கோயில்களும், உருவ வழிபாடும் மிகுதியாயின. பின்னர் பல இந்து ஆலயங்கள் தோற்றுவிக்கப் பட்டன. பல ஜைன ஆலயங்கள் இந்து ஆலயங்களாக மாற்றப்பட்டன. கற்பனை உருவங்களும், தெய்வங்களும் படைக்கப்பட்டன. இத்தகைய பல காரணங்களால் தமிழகத்தில் ஜைன சமயம் பின்னுக்குத் தள்ளப்பட்டு இந்து சமயத்தின் பக்தி மார்க்கம் வலுப்பெற்று வளரலாயிற்று.

**பள்ளிக்கூடங்கள் :** ஜைன அறவோர்கள் வாழ்ந்த இடங்கள் யாவும் கல்வி நிலையங்களாகவே விளங்கின. அந்நிலையங்கள் யாவும் பள்ளிகள் என்று அழைக்கப் பட்டு வந்தன. அத்தூயோர்கள் மக்களுக்கு அறத்தையும், ஒழுக்கத்தையும் போதிப்பதுடன் அறிவையும் மலரச் செய்தனர். அக்காலத்தில் கல்வியறிவு பெறவேண்டுமாயின் ஜைன அறவோர்களிடமே செல்லவேண்டியிருந்தது. அவ்வறவோர்கள் மக்களுக்குக் கல்வி பயிற்சியை ஆரம்பிக்கும்போது 'நம : சித்தேப்ய:' எனக் கடவுள் வணக்கத்துடன் தொடங்குவர். அப்பழக்கத்திற்கறிகுறியாக கெட்டி எண்சுவடியில் வெகுநாட்கள் வரை அச் சொல்லே வழங்கி வந்தது. பின்னர் அது 'அரி நமோஸ்து

சிந்தம்' என மாற்றப்பட்டது. ஆகவே ஜைன சமய தூயோர்களுடைய சிந்தனை மற்றும் கருத்து ஆகிய இரண்டும் அறத்திலும், மக்கள் ஒழுக்க மேம்பாட்டிலுமே பெரிதும் ஈடுபட்டு வந்தன. அதன் காரணமாகத் தற்சமயம் மாணவர்கள் பயிலும் கல்வி நிலையங்கள் இன்றும் அறவோர்களின் வழிவந்த 'பள்ளிக்கூடங்கள்' என்ற பெயரிலேயே வழங்கி வருகின்றன. மேலும் அத்தகைய பள்ளிக்கூடங்கள் சில முகமதியர்களிடம் மாறி மசூதியான பின்னரும் 'பள்ளிவாசல்' என்ற பெயரில் வழங்கி வருவது கவனிக்கத் தக்கது. இவ்வாறு ஜைன சமய அறவோர்களின் அறத் தொண்டும், கல்வித் தொண்டும் தமிழகத்தில் ஒரு புதிய மாற்றத்தையே உண்டாக்கி, தூய நெறியைப் பின்பற்றி ஒழுக வழிகோலியது என்பதை நாம் உணர வேண்டும்.

சமயப் போர்: ஜைனம் பகுத்தறிவுக்கே முதலிடம் கொடுக்கும் சமயம் என்பதை யாவரும் அறிவர் மூட பழக்க வழக்கத்திற்கு முதலிடம் கொடுத்து வந்த இந்து சமயத்திற்கு பகுத்தறிவு சமயம் ஒன்று இருப்பது இடையூறாக இருந்தது. பகுத்தறிவு சமயமாகிய சமணத்தை அழிக்காதவரை தம் வேத வேள்வி மற்றும் பல வைதீகக் கொள்கைகள் ஆகியவைகளை மக்களிடையே நிலைநிறுத்த முடியாது என்பதை இந்து மதத் தலைவர்கள் உணரலாயினர். அதற்காக (சமணத்தை அழிப்பதற்காக) காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். எத்தகைய கருத்துக்களை அடிப்படையாக வைத்து மக்களை சமணக் கொள்கைகளிலிருந்து மாற்றலாம் என்பதை ஆராய்ந்து கொண்டிருந்தனர் குறிப்பாக:—ஜைனர்களின் கொல்லாமை, வாய்மை, திருடாமை, பிறர்மனை நயவாமை, மிகு பொருள் விரும்பாமை, பகுத்துண்டு வாழ்தல், புலாலுண்ணாமை ஆகிய நெறிகளும், தவ ஒழுக்கமும் சாதாரண மக்களுக்கும், அரசர்களுக்கும் கடினமாகக் காணப்பட்டன. எடுத்துக் காட்டாக அசோக மன்னர் 'மிகு பொருள் விரும்

பாமை' என்ற நெறியை மேற்கொள்ள முடியாத காரணத்தால் ஜைன மதத்தைத் துறந்துவிட்டு பௌத்த மதத்தை நாடினர் என்பது இங்கு கருத்தில் கொள்ளத் தக்கது.

சமணர்களின் அறநெறிகளும், ஒழுக்கங்களும் மக்களின் மேம்பாட்டிற்குத் தேவையானதாக இருந்தபோதிலும், அவைகளைப் பின்பற்றி ஒழுகுவது அவ்வளவு எளிதாக இல்லை. எக்காலும் மக்கள் எளிய (குறுக்கு) வழியில் மேம்பாடடைய முயலுவரே யொழிய, கடின வழியைப் பின்பற்றி ஒழுகுவதற்கு முன்வரத் தயங்குவர். ஆகவே சைவர்களும், வைணவர்களும் இத்தகைய தகுந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு மக்களிடையே பக்தி மார்க்கத்தைப் பரப்ப முன் வரலாயினர். அவர்களின் பிரசாரமாவது:— மனிதன் கொடியவனுயினும், கொடிய செயலைச் செய்பவனுயினும் கடவுள்மீது பக்தியை மட்டும் மேற்கொள்வாளுகில் அவன் கடவுள் தன்மையை அல்லது பரம் பொருளான கடவுளிடம் ஐக்யமாகும் நிலையை உறுதியாக அடையலாம் என்பதாகும். அதற்கான பல பக்திப் பாடல்களையும் இயற்றினர். எளிய மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் போல் காணப்பட்டது. ஆகவே சிலர் இக் கொள்கையை மேற்கொள்ளலாயினர். ஆனல் பகுத்தறிவாளர்கள் இக்கொள்கைக்குச் செவி சாய்க்கவில்லை. இதிலும் இந்துக்களுக்கு முழு வெற்றி கிட்டாததால் இறுதியில் சமணர்களை அழிக்கவும் மக்களை மதம் மாற்றம் செய்யவும் முற்படலாயினர். இதில் சைவர்களும், வைணவர்களும் ஈடுபட்டனர். இக்கருத்துக்கு ஆதரவாக சைவர்களின் பெரிய புராணமும், வைணவ நூல்களுமே சாலும். எடுத்துக்காட்டாக 'பிண்டம் அறுப்பீர்காள் அண்டன் ஆருயிரைக்......விண்டுவினை போமே' தேவாரம்; 'சமணர் ...... தலையை ஆங்கே அறுப்பதே கருமங் கண்டாய்' ஆழ்வார் திருப்பாடல்.

இங்ஙனம் வசை மொழியால் பாடல்கள் பாடி, மக்களை திசை திருப்பித் தாக்கச் செய்தனர். மேலும் கலகம்

விளைவித்தும், நிலபுலன்களைக் கவர்ந்தும் கொடுமைப் படுத்தினர். (1) மதுரையில் சமணர்களை வாதுக் கிழுத்து 'அனல் வாதம், புனல் வாதம்' என்ற வாதத்தில் வென்ற தாகக் கூறி அரசரை மதம் மாற்றினர். ஒழுக்கச் செம்மல் களான சமணத் துறவிகளைக் கழுவிலேற்றிக் கொன்றனர். உண்மையில் 'வாதம் எனில் சொற்போர்' ஆகும். சமணர் களுடன் நேருக்கு நேர் சொற்போர் நடத்தியிருந்தால் சைவர்கள் நிச்சயம் வெற்றி பெற்றிருக்க முடியாது ஏனெனில் 'சாவாயும் வாது செய் சமணர்கள்' எனச் சைவர்களே சமணர்களின் வாதத் திறமையை வசை மொழியில் பாராட்டியிருக்கின்றனர். இவ்வாறு பல இன் னல்களை விளைவித்து சமணர்களை அழித்தனர்; மதம் மாற்றினர்.★

இத்தகைய கொடிய சமயப் போர் நிகழ்ந்தது 7, 8, 9-ம் நூற்றாண்டெனச் சிலர் கூறுகின்றனர். ஆனால் சமணர் மலை, கழுகுமலை, திருச்சாணத்து மலை போன்ற இடங்களிலுள்ள கல்வெட்டுகளும், சமண சமய நூல்களும் இக்கருத்துக்கு ஒத்து வரவில்லை. ஏனெனில் இத்தகைய பயங்கர கலகத்தில் சமணர்கள் அழிக்கப்பட்டிருந்தால் 10-ம் நூற்றாண்டில் மேற்கண்ட குகைகளில் சமணத் துறவிகளின் வாசமும், அவர்கள் எழுதிய நூல்களும் தோன்றியிருக்க முடியாது. ஆகவே இத்தகைய கடும் சமயப் போர் 10-ம் நூற்றாண்டின் இறுதியிலும், அதன் பின்னரும் நிகழ்ந்திருக்கவேண்டும். அதன் காரணமாக அறிவுச் சுடராக விளங்கிய சமணப் பெரியார்கள் அழிக்கப் பட்டதும் உண்மையே என்பதை சமண சமய மலைகளும் குகைகளும், உயிரோவியமாக விளங்கும் சமண சமய தீர்த்தங்கரர்களின் திருமேனிகளும், அவைகளின் சிதைவு களும் நமக்குக் கதை கதையாகச் சொல்லுகின்றன.

### தமிழ்நாட்டில் ஜைனர்களின் தற்கால நிலை

மேற்கூறிய மோதல்களுக்கெல்லாம் இலக்காகி அழி வுற்ற ஜைன சமயம் பௌத்த சமயத்தைப் போல் முற்றி

லும் அழிந்து விடவில்லை. மின் மினிப் பூச்சிபோல் சென்னை, செங்கல்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் ஜைன சமயத்தவர் இன்னும் வசித்து வருகின்றனர். அவர்கள் தம் உயிர் போன்ற கொல்லாமை மற்றும் ஊனுண்ணாமை ஆகிய ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து வருகின்றனர். இறந்தவர்களுக்கு சிரார்த்தம் கொடுத்தல், சூரிய-சந்திர கிரண நாட்களில் தலை முழுகுதல், வீடுகளைக் கழுவுதல் போன்ற மூட பழக்க வழக்கங்கள் அவர்களிடம் இன்றும் அறவே கிடையா. இரவு உண்ணாமையையும், முக்கிய கொள்கையாகக் கடைபிடித்து வருகின்றனர். அவர்கள் வாழும் ஒவ்வொரு ஊரிலும் தீர்த்தங்கரர்களுக்கு கோயில் கட்டி உருவ வழிபாடு நடத்தி வருகின்றனர். அவர்களுக்கென மடமும், மடாதிபதியும் செஞ்சி வட்டத்திலுள்ள சித்தாமூரிலிருக்கின்றார். ஜைனர்கள் தற்கால நிலைக்கேற்ப, அறப் பிரசாரமும், அற நூல் வெளியீடும் செய்து வருகின்றனர். அருக தேவருக்கு விழா எடுக்கின்றனர். ஜைன சமயப் பண்டிகையான சிவராத்திரி, தீபாவளி போன்ற பண்டிகைகளைக் கொண்டாடுகின்றனர். இல்லறத்தாரின் ஒழுக்கங்களான கொல்லாமை, வாய்மை, திருடாமை, பிறர் மனை நயவாமை, மிகுபொருள் விரும்பாமை, கள்ளுண்ணாமை ஆகிய அறங்களை சக்திக் கேற்ப ஏற்றுப் போற்றி ஒழுகுகின்றனர். அன்னதானம், அபயதானம், ஔஷததானம், சாஸ்திர தானம் போன்ற தானங்களையும் சக்திக்குத் தக்கவாறு செய்கின்றனர். ஏழை எளியவர்கள் மீது கருணைக் காட்டுதலே அஹிம்சையின் அடிப்படைத் தத்துவமாகும். அதாவது—'தர்மஸ்ய மூலம் தயா' இதன் பொருள்-அறத்தின் அடிப்படை கருணையேயாகும். இத்தகைய இல்லற ஒழுக்கத்தைப் பின்பற்றி வருகின்றனர். ஒரு சிலர் துறவற ஒழுக்கத்தையும் மேற்கொள்ளுகின்றனர். இங்ஙனம் தமிழ் நாட்டில் பண்டைய சமண சமய மூதாதையர்கள் பின்பற்றி வந்த சமய கொள்கைகளைத் தற்காலத்தவர்களும் மாறுபடாது நடத்தி வருகின்றனர் என்பது பெருமைக்குரிய விஷயமாகும்.

★(1) ஆதாரம்—'சமணமும் தமிழும்' மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் எழுதி சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பட்ட நூலில் காண்க

## ஆசாரிய நிர்மல ஸாகர அடிகளாரின் வருகை

அடிகளார் வடநாட்டில் பிறந்து திருமணம் செய்து கொள்ளாமல் இளமையிலேயே துறவறத்தை மேற்கொண்டவர். அவர் பண்டைக் காலத்தில் தமிழகத்தில் ஜைனம் சிறந்து விளங்கி இருந்தது என்பதை அறிந்தார். ஆகவே அத்தகைய திருப்பதிகளையும், அறச் சின்னங்களையும் நேரே காண வேண்டும் என்று ஆர்வங் கொண்டார். ஜைனத் துறவிகள் கார், பஸ், ரயில், ஆகாயவிமானம் போன்ற வாகனங்களில் செல்லமாட்டார்கள். எங்குங் கால் நடையாகவே செல்வார்கள். ஆகவே பல்லாயிரக் கணக்கான மைல்களைக் கால் நடையாகவே கடந்து தமிழ் நாட்டை வந்தடைந்த அப்பெரியாரின் மனோ திடமும் ஊக்கமும், ஆக்கமும் பாராட்டத் தக்கது. இத்தகைய வீரமிக்கச் செயலை வடநாட்டிலுள்ள வேறு எந்தத் துறவியும் மேற்கொள்ளவில்லை. ஆகவே இத்தவப் பெரியாரின் வருகை தமிழ்நாட்டின் தவப்பயனே யாகும் என்பதில் ஐயமில்லை.

சுமார் நூறு ஆண்டுகளாக தமிழகத்தில் சமணத் துறவிகளின் சஞ்சாரம் குன்றியிருந்தது. துறவிகளால் தான் சமயப்பிரசாரத்தைச் செவ்வனே செய்யமுடியும் என்பதில் எவ்விதக் கருத்து வேறுபாடும் இருக்கமுடியாது. ஏனெனில் அறப்பிரசாரம் ஒன்றே அவர்களின் தலையாய கடமையாக இருந்து வந்தது. தவம் செய்தல், நூலெழுதுதல், அறப்பிரசாரம்செய்தல் ஆகியவைகளே அவ்வறவோர்களின் அன்றாடச் செயல்களாகும். இத்தகைய தூயசெயல்களை அக்காலத்துறவிகள் இடைவிடாது செய்து வந்தனர் தற்காலத் துறவிகளும் செவ்வனே செய்கின்றனர். ஆகவே நிர்மலஸாகர அடிகளாரின் சங்கம் தமிழ்நாட்டின் மூலை

முடுக்குகளிலெல்லாம் விஜயம் செய்தது குறிப்பிடத்தக்க தாகும். ஆங்காங்கு சங்கம் விஜயம் செய்ததால் சமணத் துறவிகள் இன்றும் நின்று நிலவிவருகின்றனர் என்பதை அறிய பொது மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்புக் கிடைத்தது அடிகளாரும் பண்டைய அறவோர்களின் தொண்டையும், அவர்கள் விட்டுச் சென்ற சிதைவுகளையும், அவர்கள் சிறப் பாக ஆற்றிய அறத்தொண்டின் பெருமையையும், அத் தகைய அறவோர்களின் உழைப்பு வீணாக்கப்பட்டதையும் அறிய வாய்ப்புக் கிடைத்தது சிறப்புடையதாகும். ஆகவே அடிகளாரின் தமிழகத் தென்னாட்டு விஜயம் பொன்னேட் டில் பொறிக்கப்படவேண்டிய நற்செய்தியாகும்.

*அடிகளாரின் வருகையால் அறவிழிப்புணர்ச்சி*

தமிழ்நாட்டில் நீண்ட காலமாக நிர்வாணத்துறவிகள் இல்லாத காரணத்தால் துறவிகளின் விதிமுறைப்படி ஆகாரதானம் கொடுக்கும் பழக்கவழக்கம் மறந்துவிட்டிருந் தது. அப்பழக்கம் அடிகளாரின் வருகையால் திரும்பவும் மக்களுக்கு நினைவுறுத்தி செயல்படுத்தப்பட்டது. தமிழ் நாட்டிலுள்ள ஜைன கிராமங்களனைத்திற்கும் அடிகளார் தம் சங்கத்துடன் விஜயம் செய்தார்கள். அவர்களுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் சிராவக-சிராவகிகள் முறைப்படி ஆகாரதானம் கொடுத்து புண்யபலனைப் பெற்றனர்கள். மேலும் அடிகளாரும், ஆகாரதானம் கொடுத்தவர்களுக்கு இரவில் சிற்றுண்டி உண்ணாமை, தினமும் ஜிநதரிசனம் செய்தல் முதலிய பல நல்லொழுக்கங்களை மேற்கொள்ள வகைசெய்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இத்தகைய நற்செயலில் பெரியோர் முதல் சிறியோர் வரை பங்கு கொண்டது குறிப்பிடத்தக்கது.

அடிகளார் தம் சங்கத்துடன் சென்ற இடமெல்லாம் இடைவிடாது அறப்பிரச்சாரம் செய்து வந்தார்கள். அதில் ஜைனர்களும், ஏனையோரும் பங்கு கொண்டு பயனடைந் தது பாராட்டதக்கது. எண்ணற்ற ஜைனரல்லாதவர்கள் கொல்லாமை, புலாலுண்ணாமை, மதுபானம் செய்யாமை,

பீடி, சிகரெட், குடியாமை முதலிய விரதங்களை ஏற்று பயனடைந்தனர். இத்தகைய நற்செயல் ஜைன அறத்தின் மாண்புக்கும், அடிகளாரின் அறத்தொண்டிற்கும் பெருமையை உண்டாக்கியதெனில் மிகையாகா.

இங்ஙனம் அடிகளாரின் சங்க விஜயத்தால் தமிழ் நாட்டிலுள்ள ஜைன பெருமக்களும், ஜைனரல்லாதாரும் மிகச் சிறந்த பயனைப் பெற்றனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. எனவே அடிகளாரின் வருகை தமிழகத்தினுடைய ஜைன தருமத்தில் பெரும் புத்துணர்ச்சியை உண்டாக்கியது.

இவ்வாறு அடிகளார் தமிழ் நாட்டில் ஜைனர்கள் வாழும் ஊர்களிலும், ஜைனர்களே இல்லாத இடங்களிலும் விஜயம் செய்ததுடன் பற்றற்ற நிலையில் துறவறத்தை மேற்கொள்ள விரும்பிய சில சிராவகர்களுக்கு துறவற விரதங்களையளித்து அற பரம்பரை இடைவிடாது தொடரவழி செய்தது மிகவும் சிறப்புமிக்க அம்சமாகும். இங்ஙனம் அடிகளார் தமிழக ஜைன பெருமக்களுக்கு ஜைன அறத்தையும், அதன் பெருமையையும் அதன்பால் பற்றுக் கொண்டு ஒழுக வேண்டிய அவசியத்தையும் உணர்த்தி நல்வழி காட்டியுள்ளார்கள். ஆகவே அவ்அறப்பெரியாரின் தொண்டுக்கு ஈடாக எதையும் செய்ய நம்மால் இயலாவிடினும், அவ்வடிகளாரின் அடிகளில் நன்றி கலந்த வணக்கத்தைச் செலுத்தக்கடமைப்பட்டுள்ளோம்.

அடிகளாரின் சீடராகிய வர்த்தமானஸாகர சுவாமிகள், சங்கம் தமிழகம் பூராவிலும் விஜயம் செய்த இடங்களையும் அவ்விடத்தில் காணப்படும் ஜைன சின்னங்களையும் குறிப்பெடுத்து நூலாக எழுதியிருந்தார்கள். அதைக்கண்ணுற்ற நான் அதன் சிறப்பினைக்கண்டு, அதனை வெளியிடவேண்டிய அவசியத்தைக்கூறினேன். பின்னர் அடிகளார் அதை என்னிடமே ஒப்படைத்து சீர்தூக்கி வெளியிடப் பணித்தார்கள். அதற்கிணங்க இந்நூல் வெளிவரலாயிற்று என்பதை வாசகர்களுக்குப் பணிவுடன் கூற விழைகிறேன். இந்

நூல் எந்த அளவிற்கு தமிழக மக்களுக்குப்பயன்படும் என்பதை நான் அதிகம் கூறவிரும்பவில்லை. ஏனெனில் நாம் தமிழ் நாட்டில் பிறந்து, இம்மண்ணிலேயே வளர்ந்து பண்பாடுடையவர்களாகயிருந்தும் நம் பண்டைய மூதாதையர்களான அறவோர்களின் தொண்டையும் அத் தியாகச் செம்மல்கள் விட்டுச்சென்ற பண்பாட்டு சின்னங்களையும் நேரில் கண்டு களிக்க இயலாத நிலையிலிருக்கிறோம். அத்தகைய நிலையிலுள்ள நம்மை ஊக்குவிக்க எண்ணி, நூல்வாயிலாக அதன் சிறப்பை அறிய வகை செய்த அடிகளாரின் நற்செயலை தமிழக ஜைன பெருமக்கள் உளமாற பாராட்டாமலிருக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

ஆசார்ய நிர்மல ஸாகர அடிகளார் தமிழ்நாடு வந்த நாள் முதல் இறுதிவரை ஆகார தானம் முதலிய தொண்டுகளைச் செய்தும், மற்றவகைகளிலும் உதவிய தமிழ்நாடு சிராவக சிராவகிகளுக்கும், இதே போன்று தொண்டாற்றிய மார்வாரி சிராவக - சிராவகிகளுக்கும், குந்த குந்தாஸ்ரமம், சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற சாதுர் மாத காலங்களில் எல்லா ஏற்பாடுகளும் செய்து உதவிய இரு சாதுர்மாத கமிட்டியார்களுக்கும், சென்னையிலிருந்து கழுகுமலை வரை முன்னிருந்து சங்கத்தை அழைத்துச் சென்ற திரு. அனந்த பத்மநாப ஜெயின் (சென்னை) அவர்களுக்கும், உடனிருந்து உதவிய ஏனையோருக்கும், அடிகளாரின் சொற்பொழிவை தமிழில் மொழிபெயர்த்து உதவிய சாஸ்திரிகளுக்கும், கழுகுமலையில் சாதுர் மாசத்துக்கான முழுப் பொறுப்பையும் ஏற்று, ஆறுமாத காலங்கள் வரை ஆகாரதானம் முதலிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்து உதவிய திரு. M. ட. அனந்த ராஜய்யா (பெங்களூர்) அவர்கள் மற்றும் அவர் தம் மனைவியார் திருமதி கௌசல்யா தேவியார் ஆகிய இருவர்களுக்கும், மேற்கண்ட கழுகுமலை சாதுர்மாத காலங்களில் ஆகார தான முதலிய நற் செயல்களில் இடைவிடாது தொண்டு புரிந்த திரு லலிதாங்க ஜெயின், அவருடைய மனைவியார் லீலாதேவி, இவ்விருவர்களின் புதல்வர் திரு. சந்திரநாத் ஜெயின் ஆகியவர்களுக்கும், மற்ற எல்லா வகைகளிலும்

உதவிய ஏனைய ஜைன பெருமக்களுக்கும் நன்றி செலுத்த வேண்டியது முக்கிய கடமையாகிறது. ஏனெனில் இப்பெருமக்களின் ஒத்துழைப்பாலேயே தமிழ் நாட்டில் முனிசங்க விஜயம் சிறப்பாக நடைபெற்றதெனில் மிகையாகாது.

இந்நூலை வெளியிட அறப்பற்றுள்ள பல பெரியார்கள் பொருளுதவி அளித்துள்ளனர். அவர்களின் பேருதவியைப் பாராட்டாமலிருக்க முடியாது. அப்பெரியார்களின் பட்டியல் இந்நூலில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல் வெளியிடும் சமயம் திரு. D. ஜெயகுமாரனார் அவர்கள் (சென்னை) ப்ரூப் மேற்பார்வையிட்டு உதவினார்கள். அன்னாரில் உதவியும் மறக்கற்பாலதன்று. இந்நூலுக்கு மதிப்புரை வழங்கியவர்கள்:—

1. ஸ்வஸ்தி ஸ்ரீ லக்ஷ்மி சேன பட்டாரக பட்டாசார்ய வர்ய சுவாமியாரவர்கள் (மேல் சித்தாமூர்),

2. திரு. பாரத சக்ரவர்த்தி சாஸ்திரியார் அவர்கள், சென்னை.

3. திரு. நாககுமார சாஸ்திரியார் அவர்கள் சென்னை,

ஆகிய இப்பெரியார்களுக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை நன்முறையில் அச்சிட்டு உதவிய பாரி அச்சக உரிமையாளருக்கும் என் அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியில் தமிழக ஜைன பெருமக்களிடம் கேட்டுக் கொள்வதாவது:—இந் நூலைக் கண்ணுறும் ஜைன பெருமக்களனைவரும் ஒரு முறையாவது முழுவதும் படித்து, நம் பண்டைய அறவோர்கள் செய்த தொண்டை அறிவதுடன், அவர்கள் விட்டுச் சென்ற வரலாறுமிக்க புனித இடங்களை நேரில் கண்டுகளிக்கவும், அதன் பெருமையை உணரவும் அவசியம் முயலுவார்களென நம்புகிறேன்.

இங்ஙனம்,

மல்லிநாத் ஜெயின் சாஸ்திரி

சென்னை.

ஸ்ரீ ஜிநாய நம:

கடவுள் வணக்கம்

# 108 ஆசாரிய நிர்மல ஸாகர அடிகளார் சங்கத்தினரின்

# தமிழ்நாடு விஜயம்

## ஸ்ரீ 108 ஆசாரிய நிர்மல சாகரர் வாழ்க்கை வரலாறு

"பதினறுவர் பொன்வண்ணர் பச்சை யிருவர்
மதிவண்ணர் மற்றோ ரிருவர்—கதியடைந்த
செம்மை நிறத்தோரிருவர் சேர்ந்த முகிலிருவர்
எம்மைக்கும் தெய்வம் நமக்கு" (எமக்கு)

"வாசு பூஜ்யனை மல்லியை நேமியைப்
பாச நாதனை வீரனைப் பண்புடன்
மாசிலாத மனத்துட னேத்துவேன்
ஆசிலாத வருட் சுட ராவரே"

16 தீர்த்தங்கரர்கள் பொன்நிறம், சுபார்ஸ்வநாதர், பார்ஸ்வநாதர் பச்சை நிறம், சந்த்ரப்ரபர், புஷ்பதந்த நாதர் வெண்மை நிறம், பத்மப்ரபர், வாசு பூஜ்யநாதர் செம்மை நிறம், முனிசு விரதர், நேமி நாதர் நீலநிறம். ஆகிய 24 தீர்த்தங்கரர்கள் நமக்கு கடவுள், இறைவன் ஆவர்.

வாசுபூஜ்யநாதர், மல்லிநாதர், நேமிநாதர், பார்ஸ்வ நாதர், வர்த்தமானர் இந்த ஐந்து தீர்த்தங்கரர்கள் திருமணம் இல்லாமல் பாலப்ரம்மச்சாரியாகவே முக்தி அடைந்தனர். இவர்களைக் குற்றமற்ற மனதுடன் வணங்குவோர் கருமத்திலிருந்து விடுபட்டு முக்தி இன்பத்தை அடைவார்கள்.

"கடையிலா ஞானத்தோடு காட்சி வீரியமே யின்ப
மிடையுறு நாமமின்மை விதித்த கோத்திரங்களின்மை
அடைவிலா வாயுவின்மை யந்தராயங்களின்மை
உடையவன் யாவன் மற்றிவ் வுலகினுக்
கிறைவனுமே."

—சூளாமணி

அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்த வீர்யம், அனந்த சுகம், நிர்நாமம், நிராயுஷ்யம், நிர்கோத்ரம், நிரந்தராயம் இந்த எட்டு குணங்களை உடையவர் உலகத்தில் அனைவர்க்கும் இறைவன், கடவுளாவார்.

வடநாட்டிலுள்ள உத்திரபிரதேச மென்ற மாநிலத்தில் ஏடா ஜில்லாவின் பகாடிபூருக்கு அருகிலுள்ள கசவா என்ற கிராமத்தில் வசிக்கும் சிராவக சிரோமணி ஆதர்ச-வைத்யராஜ்-சிரமோர் பௌரிலால் சேட்ஜிக்கும், கோமாவதி தேவிக்கும் நிர்மல ஸாகரர் நன்மகனாய்ப் பிறந்தார். இவருக்கு தாய் தந்தையர் இட்ட பெயர் ரமேஷ் குமார் என்பதாகும். இவருக்கு சகோதரர்கள் ஐவர். சகோதரிகள் மூவர். ரமேஷ் குமார் இளமையில் ஐந்து வகுப்புவரை இந்தி படித்தார். பின்னர் சமஸ்கிருதம், பிராக்கிருதம், ஹிந்தி, குஜராத்தி ஆகிய பாஷைகளை நன்கு பயின்றார். ஒருமுறை மஹாவீர கீர்த்தி முனி மகராஜ் அவர்களை தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது அவருடைய வயது 12. அதுசமயம் அம் முனி

வர்களிடம் அஷ்டமூல குணம், இரவு உண்ணுமை முதலிய தூய விரதங்களை மேறகொண்டார். பின்னர் பகவான் சந்திர ப்ரபுவின் கோயிலில் கொல்லாமை முதலிய 12 சிராவக விரதங்களையும், யக்ஞோப வீதத்தையும் முறைப்படி சிவசாகரர் என்ற முனிவரிடம் மேற்கொண்டார்.

ஒரு சமயம் ஸ்ரீ 108 ஆசாரிய சீமந்தரஸாகர முனி மகராஜி அவர்களை கிரனுர் பர்வதத்தில் ரமேஷ் குமார் தரிசித்தார். இவருடைய தகுதியை யுணர்ந்த சுவாமிகள் இவருக்கு சுல்லக் தீக்ஷை கொடுத்து நேமி ஸாகரர் எனப் பெயர் சூட்டினுர். நேமி ஸாகரர் ஒரு வருஷகாலம் சுல்லக் தீக்ஷயில் இருந்து ஒழுக்க முறைகளைப் பின்பற்றி நடந்து வந்தார். அதன் பின்னர் ஸ்ரீ 108 ஆசாரிய விமல ஸாகர முனிமகராஜ் அவர்களை ஆக்ராவிலுள்ள சீப்பி டோலாவில் தரிசிக்க நேர்ந்தது. அச்சமயம் சுல்லக் நேமிஸாகரருடைய தகுதியை யுணர்ந்த சுவாமிகள் அவருக்கு முனி தீக்ஷை யளித்து நிர்மல ஸாகரர் எனப் பெயர் சூட்டினுர். அப்போது நிர்மல ஸாகரருடைய வயது $18\frac{1}{2}$ ஆகும். பர்ராபங்கி என்ற இடத்தில் சதுர்வித சங்கம் நிர்மல ஸாகரருக்கு ஆசாரிய கல்ப பதவியை யளித்தது. பின்னர் டில்லீயில் சதுர்வித சங்கமானது ஆசாரிய சிரோமணி என்ற பதவியையும் அளித்தது. பிறகு தீட்க்ஷா குருவாகிய விமலஸாகர முனி மகராஜ் அவர்கள் புதிய மயிற்பீலியும், கமண்டலமும் கொடுத்து தன்னுடைய ஆசாரிய பதவியையும் கொடுத்தார் அதுமுதல் அவர் ஸ்ரீ 108 ஆசாரிய நிர்மல ஸாகர முனிமகராஜ் என அழைக்கப் பட்டார்.

இங்ஙனம் ஸ்ரீ 108 ஆசாரிய நிர்மல ஸாகர முனிமகராஜ் அவர்கள் ஆசாரிய பதவியை ஏற்று அறத் தொண்டும், ஆன்ம தொண்டும் செய்துவரும் சமயம் உத்திர பிரதேசத்தில் எட்டு முனி தீக்ஷயும், நான்கு ஆர்யகா தீக்ஷயும், ஆறு சுல்லக் தீக்ஷயும், பல பிரம்மச்சரிய

விரதமும் கொடுத்து தருமத்தைப் பரப்ப ஆவன செய்து வந்தார்.

ஒருநாள் ஜிநாகமங்களைப் படித்துக் கொண்டிருக்கும் போது அதில் தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி மலையில் ஸ்ரீகுந்த குந்தாசாரியர் தவம் செய்து விதேக க்ஷேத்திரம் போய் வந்ததாக வரலாறு படிக்க நேர்ந்தது. மேலும் ஸ்ரீ பத்ர பாகு ஆசாரியர் காலத்தில் வடநாட்டில் கடும் பஞ்சம் வரப் போகிறது என்பதை உணர்ந்து தம் பன்னீராயிரம் சீடர்களை தமிழகத்தின் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் சென்று தங்கள் விரதங்களைக் காப்பாற்றுமாறு அனுப்பி வைத்தார். அப்பெரியாரின் சீடர்களான குணபத்ராசாரி யர், அமிர்தஸாகர், அகளங்கர், ஸமந்தபத்ரர் ஆகியோர் சங்கமாக வந்து பலவிடங்களில் சமணப் பள்ளிகளை நடத்தினர்கள் என்றும், சித்தன்ன வாசல், மதுரை, கழுகு மலை, சிதரால், நாகர்கோயில், மகாபலிபுரம், திருப்பருத்தி குன்றம், எண்ணாயிரம் பிரம்ம தேசம் போன்ற பலவிடங் களில் தீர்த்தங்கரர்களுடைய உருவச் சிலையும், கல்வெட்டு களும், படுக்கைகள் முதலியவைகளும் செதுக்கப்பட்டிருக் கின்றன எனவும் ஆராய்ந்தறிந்தார். தமிழ்நாடு சென்று பார்க்கவேண்டும் என்று சதுர்வித சங்கத்தினரிடம் கூறி னர். ஆனல் அவர்கள் அனைவரும் அங்கு போகவேண் டாம் அவ்விடம் முனிவர்கள் இல்லை; மக்களுக்குத் துறவற தர்மம் தெரியாது; சிலர் இடையூறு செய்வார்கள் என்று தடுத்துச் சொன்னர்கள். முனிமகராஜ் அவர்கள் தாம் ஒரு முறை அவசியம் போய்த்தான் வரவேண்டும் என முடிவு கொண்டார்.

உடனே சிராவகர்கள் மத்திய சர்க்கார் அதிகாரிக ளிடம் சென்று எங்கள் நிர்கிரந்த குருமகராஜ் தமிழ்நாடு போக விரும்புகிருர். அங்கு ஒரு சில மக்களால் இடையூறு கள் நேரக்கூடும். ஆதலால் நிர்கிரந்த சமண முனிகள் தமிழ்நாட்டில் எந்த இடங்களில் வேண்டுமானலும் போக

லாம் என்றும், போலிஸ் பாதுகாப்பு முதலியன தரவேண்டும் என்றும் அனுமதி தரும்படிக் கோரினர். சட்டசபையி லுள்ள அமைச்சர்கள் தமிழ்நாட்டில் முனிவிஹாரம் அவசி யம் எனச் சம்மதித்து விளக்கிக் கூறினார்கள். பின்னர் அரசாங்கம் நிர்க்ரந்த சமண முனிகள் தமிழகத்தில் எங்கு வேண்டுமானாலும் போகலாம் என்றும், போலிஸ் அதிகாரி கள் அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் அனுமதி வழங்கியது. அந்த உத்தரவைக் கொண்டுவந்து முனிமகராஜியிடம் கொடுத்தார்கள். ஆசாரிய நிர்மல ஸாகர மகராஜ் சுவாமிகள் அதை எடுத் துக் கொண்டு டில்லியில் இருநது புறப்பட்டு ஜெயப்பூர், கோட்டா, இந்தூர், படவானி, சித்தவர கூடம், மாங்கி-துங்கி, கஜபந்தா, முக்தாகிரி, அந்தரிக்ஷ பாரீஸ்வநாத் சிவபூர் வழியாக ஔரங்காபாத் வந்தடைந்தார்.

அங்கிருந்து புறப்பட்ட சுவாமிகள் ராஜேந்திரகுமார் என்ற மாணவனை சிஷ்யனாக அழைத்துக்கொண்டு எல் லோரா, அஜந்தா, குந்தலகிரி ஷோலாப்பூர், பீஜாபூர், அதிசய க்ஷேத்ரமாகிய பாரீஸ்வநாத், ஹுப்லி, உம்புஜம், வராங்கம், குந்தகுந்தாத்ரி, கார்காளா, மூடுபத்ரி, பேலூர், தர்மஸ்தலம், சிரவண பெல்குளம் வழியாக பெங்களூர் வந்து மூன்றுநாள் தங்கி தர்ம உபதேசம் செய்தார்.

அங்குள்ள ஜைனர்களிடம் மறுநாட் காலை தமிழ்நாடு பிரயாணம் செய்வதாகச் சொன்னர். அங்குள்ள சிராவ கர்கள் தமிழ்நாட்டில் ஆதரவு அளிப்பவர்கள் குறைவு என்றும் சிலர் இடையூறு விளைவிக்கலாம் எனக் கூறி அங்கு போகவேண்டாம் என்றனர். அதற்கு சுவாமிகள் எவரும் என் ஆன்மாவை ஒன்றும் செய்யமுடியாது என்று திடமனத்துடன் கூறி புறப்படுவது நிச்சயம் என்றார்கள்.

பெங்களூர் ஜினசந்த்ரய்யா மற்றும் சமஸ்த ஜைனர் கள் கூடி வழிப்பயணத்திற்கு வேண்டிய ஒரு காரும் ஆகா

ராதி வஸ்துக்களும் ஐந்து நபர்களும் தயார் செய்து காலை பெங்களூரிலிருந்து புறப்பட்டு நடந்து வந்தனர். தமிழ் நாட்டு எல்லையில் ஏழு மைல் வந்ததும் சிலர் நிர்வாண மாக தமிழ்நாட்டில் வரக்கூடாது என்றும் ஆடை அணிந்துகொண்டு முன்னே போகுமாறும் கூறினர் இல்லை எனில் பின்னே திரும்பிப் போகும்படி கூறி வழியில் குறுக்கே பதினைந்து நபர்கள் நின்று கொண்டனர். முனி மகராஜ் அவர்கள் ஆடையும் அணியமுடியாது; பின்னேயும் போகமுடியாது என்று கூறி அருகிலிருந்த புளியமரத்தடி யில் தியானத்தில் அமர்ந்துவிட்டார்

பிறகு பெங்களூரிலிருந்து ஒரு லாரி வந்தது. அதில் உள்ள பனிரண்டு நபர்கள் கீழே இறங்கி ஏன் முனிமகராஜை தடுக்கிறீர்கள். அது அவர்கள் தருமம் அவர்கள் விருப்பிய இடம் போகிறார்கள் என்று கூறினர். இரு தரத்தாருக்கும் சண்டை ஏற்பட்டது. பிறகு கார் ஒன்று வந்தது. அதைப் பார்த்ததும் இடையூறு செய்தவர்கள் சமாதானத்திற்கு வந்து. நாங்கள் தெரியாமல் தடுத்தோம் என்றும், மன் னிக்குமாறும் வேண்டினர். பின்னர் முனிமகராஜ் அவர் களை சாஷ்டாங்கமாக வணங்கி விரும்பிய இடத்திற்குப் போகுமாறு பணிவுடன் கூறினர். முனிமகராஜ் அனை வர்க்கும் ஆசி வழங்கி அங்கிருந்து புறப்பட்டார். அச் சமயத்தில் முனிவருடன் ராஜேந்திரன், பெங்களூர் நபர் ஒருவர் ஆகிய இருவரே இருந்தனர்.

பின்னர் சுவாமிகள் கிருஷ்ணகிரி. திருவண்ணா மலை வழியாக வந்துகொண்டிருக்கும்போது, மளிகைக் கடையில் இருந்த முஸ்லிம் ஒருவர் முனிவரைப் பார்த் ததும் ஓடி வந்து வணங்கினர். முனிமகராஜ் குர்ரானை எடுத்து விளக்கினர். அந்த முஸ்லிம் அதிக சந்தோஷப் பட்டு முனிவருடன் பத்து மைல் நடந்து வருவதென அல்லா சாட்சியாக நியமம் எடுத்துக்கொண்டார். அவ் வாறு சுவாமிகளுடன் பேசிக்கொண்டே புறப்பட்டு வந்

தார். ஆறு மைல் வந்ததும் முசல்மானுக்கு காலில் கொப்புளம் உண்டாகிவிட்டது முனிவர் அதைப் பார்த்ததும் அவரைத் திரும்பிப் போகுமாறு ஆசியுடன் கூறினர். அல்லா சாட்சியாக பத்து மைல் தங்களுடன் நடந்து வருவதாக நியமம் என்று கூறி கஷ்டத்தைப் பாராமல் உடன் வந்து கொண்டிருந்தார். பத்து மைல் ஆனதும் அவர் ஆசீர்வாதம் பெற்றுத் திரும்பிச் சென்றார்.

முனிமகராஜ் மற்றும் சங்கத்தார் அனைவரும் எய்யில் வந்து அப்பாண்டை ராஜ் நைனர் வீட்டில் ஆகாரம் எடுத்துக் கொண்டனர். பின்னர் சுவாமிகள் ஜினலயத்தில் பகவான் தரிசனம் செய்ததும் சிராவக சிராவகியர்களுக்கு தர்ம உபதேசம் செய்தபின் அங்கிருந்து புறப்பட்டு சேத்துபட்டில் அன்று இரவு தங்கினர் காலை அங்கிருந்து புறப்பட்டு 11-6-75 குந்தகுந்தர் மலையை வந்து அடைந்தார். குந்தகுந்தர் மலையில் முனிவரைத் தங்கச் செய்து விட்டு பெங்களூர் சிராவகர்கள் மறுநாள் புறப்பட்டு தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டனர்

மலையின் சத்திரத்தில் ஸ்ரீதர நைனர் அவர்களும் மற்றும் சுற்றிலும் உள்ள சிராவகர்களும் முனிவருக்கு வேண்டிய வசதிகளைச் செய்து வந்தனர். முனிமகராஜ் குந்தகுந்தர் மலையில் வந்திருக்கிறார் என்ற செய்தி தெரிந்ததும் பாண்டிச்சேரி சேட் சம்பாலால், சேலம் சேட் ஹீராலால், சென்னை அனந்த பத்மநாப ஜெயின், வெண்பாக்கம் அருக்க கீர்த்தி ஜெயின் மற்றும் தமிழ் நாட்டிலுள்ள ஜைனர்களும், சேட்களும் வந்து தரிசனம் செய்து முனிவருக்கு வேண்டிய வசதிகளைச் செய்தனர். ஜைனரல்லாத ஏனைய மக்களும் ஏராளமாக வந்து தரிசித்துச் சென்றனர்.

## சுரேந்திரகுமார் ஜெயின் தீக்ஷை

தென்னாற்காடு ஜில்லா, செஞ்சி தாலுக்கா, கள்ளப்புலியூர் கிராமத்தைச் சேர்ந்த சுரேந்திர ஜெயினாகிய நான்

முனிபுங்கவரைப் பார்க்கவேண்டும்என்று 21-6-1975 சனிக் கிழமை மாலை 2 மணி அளவில் புறப்பட்டு சென்றேன். இரவு ஏழு மணி அளவில் முனிவரை தரிசித்து எதிரில் உட்கார்ந்து ஜபம் செய்து கொண்டிருந்தேன். முனிவர் சாமாயிகம் முடிந்ததும் என் அங்க அவயவங்களைப் பார்த்து தீக்ஷை எடுத்துகொள்ளுமாறு ஜாடை காட்டினார். நான் சரி என்று சம்மதித்தேன். முனிதீக்ஷை காலையில் எடுத்துக்கொள் என்றார். நான் முனி தீக்ஷையின் நடை முறைகள் யாதும் தெரியாது எனக் கூறி சிறிய தீக்ஷையைத் தருமாறு கேட்டேன். பிறகு முனிவர் அங்குள்ள ஸமந்தபத்ர சாஸ்திரியை அழைத்து எனக்கு நாளைக் காலை க்ஷுல்லக் தீக்ஷை கொடுக்கவேண்டும் என்று சொன்னார். சாஸ்த்ரி பிரம்மசரிய விரதம் கொடுங்கள் பிறகு க்ஷுல்லக் தீக்ஷை கொடுக்கலாம் என்றார். அதற்கு முனிவர் இப்போது திருமணம் ஆகாமல் அல்லவா இருக்கிறான். பிரம்மச்சாரிதானே; மீண்டும் பிரம்மச்சரியம் என்ன? க்ஷுல்லக் தீக்ஷைதான் கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்தார்.

ஞாயிறு காலை திண்டிவனம் ஜோதி அச்சகத்தார் வந்தனர். பஞ்சாங்கம் பார்த்து 26-6-1975 குருவாரம் பஞ்சமி திதி தீக்ஷை கொடுப்பது என்று பத்திரிகை அச்சிடச் சொன்னார். பிறகு 'மாலை முரசு' பத்திரிகையாளர் வந்தார். அவரிடம் செய்தித் தாளிலும் தீக்ஷைச் செய்தி வெளியிடும்படி சொல்லப்பட்டது.

சுரேந்திரன் தீக்ஷை எடுத்துக் கொள்ளப் போகிறான் என்ற செய்தி, கள்ளப்புலியூரிலுள்ள என் தாய் மற்றும் சகோதரிகளுக்குத் தெரிந்தது. உடனே அவர்கள் அழுது கொண்டே புறப்பட்டு வந்து என்னிடம் கூறியதாவது:— உனக்கு நாங்கள் என்ன தீங்கு செய்தோம். தயவுசெய்து தீக்ஷை எடுத்துக்கொள்ள வேண்டாம். இன்னும் ஐந்து வருஷம் பொறுத்து எடுத்துக்கொள் என்றனர். அதற்கு நான் கூறியதாவது:—யாருக்கு யார் சொந்தம்! நான்

என்ன வீட்டிலுள்ள பொருள்களை எடுத்துக்கொண்டு வந்து விட்டேனா? இன்னும் ஐந்து வருஷகாலம் நான் இருப்பது நிச்சயமா? ஆகவே நீங்கள் வருந்தவேண்டாம். சந்தோஷமாக வீடு செல்லுங்கள் என்று சொன்னேன். பின்னர் அவர்கள் வருத்தத்துடன் வீடு சென்றனர்.

செவ்வாய்க்கிழமை விடியற்காலை கள்ளப்புலியூரில் இருந்து பத்து நபர்கள் சைக்கிளில் வந்து சுரேந்திரா என அழைத்து சொன்னதாவது:—உன் சிற்றப்பாவுக்குக் காய்ச்சல் அதிகம்; உன்னை அழைத்து வரும்படி சொன்னார். இப்போது வந்தால்தான் உயிருடன் பார்க்கலாம் என்றனர். நான் சாஸ்த்திரியாரிடம் சென்று முதலிலேயே இவ்வாறு இருக்கிறது. போகலாமா என்று கேட்டதற்கு, போ என்றால் முனிவருக்குக் கஷ்டம்; வேண்டாம் என்றால் ஊராருக்குக் கஷ்டம். உன் இஷ்டம்! என்று சொல்லி பிறகு போ என்று சொன்னார். மற்றும் அங்குள்ளவர்கள் அனைவரும் போ என்று சொன்னார்கள். நிர்மல சாகர் முனிவர் அவர்கள், சாமாயிகம் முடிந்ததும் எழுந்து வந்து என்ன சமாசாரம் என்று சம்பாலால் மனைவியைக் கேட்டார். அவரை ஊருக்கு அழைக்கின்றார்கள் என்று சொன்னதைக் கேட்டதும், முனிவர் தீக்ஷை உண்டு இல்லை என்று தெரியாத முன் நான் ஆகாரம் எடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டு மேலே குகையில் சென்று அமர்ந்துவிட்டார்.

முனிவருக்கு உபவாசம் என்று தெரிந்ததும் நான் யோசித்ததாவது:—முனிவருக்கு ஆகாரதானம் கொடுத்து புண்ணியம் சம்பாதிக்க அனைவரும் வருகின்றனர். நாம் அந்தராய கர்மத்திற்குக் காரணம் ஆவது கர்மத்தை கட்டிக் கொள்வதாகும். ஆகையால் நான் ஊருக்குப் போய் இறக்கப் போகிறவனை தடுக்க முடியுமா? முடியாது என்று யோசித்து, முனிவரை நாடிச் சென்றேன். ஊரார் தடுத்துக் கையைப்

பிடித்து இழுத்தனர். மலையில் குந்தகுந்தர் பாதத்தை வணங்கிவிட்டு வருகிறேன் என்று மலை ஏறினேன். பாதத்தை வணங்கி குகையில் தவம் புரியும் முனிபுங்கவர் அருகில் அமர்ந்தேன். கிராமத்தார் என்னை அழைத்த னர். நான் ஒன்றும் பேசவில்லை. பலமுறை என்னை அழைத்தனர். அப்போதும் நான் பேசவில்லை. சம்பா லால் மனைவி ஏன் பேசாமல் இருக்கிருய் வாயைத் திறந்து பதில் சொல் என்று சொன்ஞர். முனிவர் ஆகா ரம் எடுத்தால்தான் பேசுவேன் என்று கை ஜாடை காட்டி னேன். முனிவர் நீ தீக்ஷை எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னல்தான் நான் ஆகாரம் எடுப்பேன் என்று சொன் ஞர். நான் தீக்ஷை கண்டிப்பாக எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்ன பிறகு கீழ் இறங்கி ஆகாரம் எடுத்துக் கொண்டார் நானும் போஜனம் செய்தேன் கள்ளப் புலியூர் சிராவகர்கள் சென்று விட்டனர். சுவாமிகள் இவ் வளவு வற்புறுத்தியதன் காரணமாவது:—தீக்ஷை என்ற செய்தியை செய்தித் தாளிலும், பத்திரிகையின் வாயிலாக வும் வெளியிட்ட பிறகு நிறுத்துவது இழுக்காகும் என்ற நோக்கமேயாகும்.

பிறகு மதியம் சாமாயிகம் முடிந்ததும், முனிவர் சுரேந் திர குமாருக்கு மாங்கல்ய ஸ்த்ரிகள் ஐவர் மஞ்சள் நலங்கு வைக்குமாறு பணித்தார். அவ்வாறே ஸ்ராவகிகள் செய் தனர். மறுநாளும் நலங்கு வைக்கப்பட்டது. நலங்கு முடிந்ததும் என்னை புதிய வஸ்திரத்தாலும், ஆபரணங்க ளாலும் அலங்கரித்து காரில் உட்கார வைத்தனர். பின் னர் பொன்னூர் இளங்காடு, சாத்தமங்கலம், வங்காரம் முதலிய ஜைன கிராமங்களுக்கு அழைத்துச் சென்று ஊர் வலம் வந்தபின் மலைக்கு வந்தனர் 26-6-1975 குருவாரம் பஞ்சமி திதியன்று காலை சதுர்வித ஆகாரமின்றி உபவாசத் துடனிருந்தேன். பின்னர் எனக்கு நலங்கு வைத்து ராஜா வைப்போல் அலங்கரித்து உட்கார வைத்தனர். தமிழ் நாடு முழுதிலும் இருந்து சேட்டுகள், ஜைனர்கள், ஜைன

ரல்லாதார் ஆகியோர் டூரிஸ்ட் பஸ், கார், லாரி, டிராக்டர், மோட்டார் சைக்கிள், சைக்கிள், மாட்டுவண்டி, தனியார் பஸ், கால்நடை ஆகிய முறையில் பெருவாரியான மக்கள் வந்தனர். என்னை தரிசித்து பழம், தேங்காய், ரூபாய் ஆகியவைகளை காணிக்கையாக வைத்து பேட்டி கண்டனர்.

ஸ்ரீ ஆசாரிய நிர்மல ஸாகர முனிமகராஜ் ஆகாரம் எடுத்துக்கொண்டு 12 மணிக்கு சாமாயிகத்தை முடித்தார்; பின்னர் 3½ மணி அளவில் குந்தகுந்தர் பாதத்திற்கு பூஜை நடைபெற்றது. தீக்ஷை எடுத்துக்கொள்ள வேண்டிய உபகரண வஸ்துக்கள் ஏலம் விடப்பட்டன. பிஞ்சம், புஸ்தகம், கமண்டலம், வஸ்திரம் முதலியவை முறையே ரூ 400, 375, 200, 150 ஏலம் போயின. குருவானவர் தீக்ஷை எடுத்துக்கொள்ள அனைத்து மக்களிடமும் அனுமதி பெறுமாறு எனக்குக் கட்டளை இட்டார். சுரேந்திரனாகிய நான் எழுந்து இங்கு வீற்றிருக்கும் பெரியோர்களே, தாய்மார்களே, சகோதரர்களே சகோதரிகளே நான் தீக்ஷை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். அனைவரும் மனப்பூர்வமாக அனுமதி அளிக்க வேண்டுகிறேன் என்றேன். மீண்டும் கள்ளப்புலியூர் கிராமப் பெருமக்களே, நம் கிராமத்தில் பல அணுவிரததாரிகள் இருந்தனர். ஆகையால் நானும் தீக்ஷை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் மனப்பூர்வமாக அனுமதி தாருங்கள் என்று பணிவோடு கேட்டேன். அனைத்து ஸ்ராவக ஸ்ராவகிகள் நன்குக விரதத்தை எடுத்து தமிழ்நாட்டிற்கு நல்ல பெயர் வரும் அளவில் நடந்துகொள்வாயாக என ஏகமனதாக ஆரவாரத்துடன் அனுமதி வழங்கினர்.

பிறகு ஸ்ரீ குருமகராஜிடம் நான்— சுவாமிகளே, இந்த யாக்கையும், செல்வமும் நிலையில்லாதவை. சம்சாரம் அசாரமானது, "சம்சாரம் சாகரம் துக்கம் புத்திக் கர்மானுசாரிணி" என்ற முதியோர் வாக்குப்படி சம்சாரத்தில்

கர்மம் அணு அணுவாக வந்தடைந்து ஆத்மாவைப் பிறவிச் சுழற்சியில் சுற்றவைக்கிறது. ஆதலால் நான் ஆத்ம கல்யாணம் செய்ய விரும்புகிறேன். தாங்கள் தயவு செய்து எனக்குத் தீக்ஷை கொடுக்கவேண்டும் என்று வேண்டினேன்

ஸ்ரீ குருமகராஜ் அவர்கள் கூறியதாவது:—நீ, தீக்ஷை எடுத்துக் கொள்வதானால் தினமும் ஒருவேளை ஆகாரம் எடுத்துக்கொள்ள வேண்டும் பிறகு தண்ணீர் கூட அருந்தக்கூடாது. மூன்று வேளை சாமாயிகம் செய்ய வேண்டும் எங்கும் நடந்தே போகவேண்டும். 12 விரதங்களைப் பரிபாலிக்க வேண்டும். 5 சமிதி 5 இந்திரிய-நிரோதம், 3 குப்தி. 6 ஆவச்ய கிரியை. 12 தபம் இவைகளையும் பரிபாலிக்க வேண்டும் 22 பரிஷகங்களையும் ஜெயிக்கவேண்டும் என்று விளக்கினார்கள். தங்கள் ஆணைப்படி அனைத்தையும் ஏற்கிறேன் என்று பாதத்தில் வணங்கி தீக்ஷை கேட்டேன். பிறகு ஆசாரிய மகாராஜ், சுல்லக் தீக்ஷைக்குரிய மந்திரங்களை உபதேசம் செய்து, விதிமுறைப்படி கேசங்களை பஞ்சமுஷ்டியால் எடுத்து, சுல்லக் சன்மதிசாகரர் என்ற புது நாமம் சூட்டினார். பிஞ்சம் புஸ்தகம், கமண்டலம், வஸ்திரம் முதலியவற்றை ஏலம் எடுத்தவர்கள் அவைகளைத் தாமே கொண்டு வந்து கொடுத்தார்கள். பிறகு மக்கள் அனைவரும் குருவின் ஆசீர்வாதம் பெற்று வீடு திரும்பினார்கள். மாலை ஆறு மணி அளவில், குருவும், சிஷ்யனாகிய நானும் சாமாயிகத்தில் அமர்ந்தோம். தினந்தோறும் வருகின்ற பக்த ஜனங்களுக்கு அஹிம்ஸா தர்மத்தையும். துறவற தர்மத்தையும், இல்லற தர்மத்தையும் உபதேசம் செய்து வந்தோம்

சாதுர் மாசம் ஆரம்பிப்பதற்கு முன் திருமலை நேமிநாத பகவானை (சிகாமணி நாதர்) தரிசனம் செய்ய சேத்துப்பட்டு போய் இரவு தங்கினோம். வழியில் கன்னட

தேச ஆதிநாத பிரம்மசாரி வந்து சங்கத்தோடு சேர்ந்து கொண்டார். மறுநாட் காலை, தச்சாம்பாடி சென்று ஆதிநாத பகவான் ஆலயம் தரிசித்தோம். அவ்வாலயம் சலவைக் கல்லினால் அழகாக இழைக்கப்பட்டிருக்கிறது. பஞ்ச உலோகத்தினால் செய்த ஜினபிம்பங்கள் நிறைய உள்ளன அம்மன் பிம்பமும் உள்ளது மானஸ்தம்பமும், பலிபீடமும் உள்ளன. அங்கு அண்ணாசாமி ஜெயின் வீட்டில் ஆகாரம் எடுத்துக்கொண்டு ஜினாலயத்தில் சிராவகர்களுக்கு தர்மம் உபதேசித்தோம். இங்கு 30 ஜெயினர் வீடுகள் உள்ளன.

இங்கிருந்து புறப்பட்டு திருமலை சென்று நேமிநாத பகவானைத் தரிசித்தோம் நேமிநாத பகவானுடைய சிலை 17 அடி உயரம் உள்ளது. மேலே பாரிஸ்வநாத பகவான் ஆலயமும் இருக்கிறது. அதற்கும் மேலே விரஷபசேன ஆசாரியர், வரதத்த ஆசாரியர், ஸமந்த பத்ர ஆசாரியர் ஆகிய முனிவர்களின் பாதங்கள் உள்ளன, மலையின் கீழே பெரிய ஆலயம் இருக்கிறது. மூலவர் நேமிநாத பகவான் ஆவார். மற்றும் அங்கு உலோகததினால் செய்த பிம்பங்கள பல உள்ளன. மலையில் பாகுபலி சுவாமி, பாரிஸ்வநாத சுவாமி, கூஷ்மாண்டி தேவி முதலியவை உள்ளன. பெரிய குகை யொன்று உள்ளது பெரிய சுனையும் உள்ளது கல்வெட்டுகள் உள்ளன பலிபீடமும் உள்ளது இங்கு பத்து ஜைனர் வீடுகள் உள்ளன. இரவு குகையில் தங்கி காலை பகவானை தரிசித்தோம் பின்னர் சிராவகர்களுக்கு தர்ம உபதேசமும் நடந்தது.

பிறகு ஆகாரம் எடுத்துக்கொண்டு ஆரணி சென்று அங்கு ஜினாலயத்தில் தங்கினோம். அங்கு மூலவர் ஆதிநாதர், உலோக பிம்பங்கள் நிறைய உள்ளன. மானஸ்தம்பமும் பலிபீடமும் உள்ளன. வர்ணத்தினால் சுவர்களில் சித்திரங்கள் எழுதப்பட்டுள்ளன. சலவைக் கல்லால் அழகாக தளம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 50 ஜைனர் வீடுகள் உள்ளன.

மறுநாட் காலை தருமோபதேசம் நடைபெற்றது. ஆகாரத்திற்குப் பின் புறப்பட்டு பெரணமல்லூர் சென்று அங்குள்ள ஜினாலயத்தில் தங்கினேம். மூலவர் ஆதிநாத பகவான் உலோக பிம்பங்கள் பல உள்ளன. பலிபீடம் உள்ளது. இங்கு 40 ஜைனர் வீடுகள் உள்ளன. மறுநாட் காலை புறப்பட்டு மழையூர் சென்று, அங்கு ஆகாரம் எடுத்துக் கொண்டோம். மாலை புறப்பட்டு குந்தகுந்தர் ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தோம். இதுவரை சென்று வந்த தூரம் 61 மைல்.

இங்கு வந்தபிறகு (1) கன்னட தேச ஆதிநாத பிரம்மச்சாரி, (2) தமிழ்நாடு எறும்பூர் ஜெயக்கீர்த்தி பிரம்மசாரி, (3) கீழ்வில்லிவலம் அப்பாண்டை நைனர் ஆகியவர்களுக்கு சுல்லக் தீக்ஷை மிக சிறப்பாக நடைபெற்றது. அவர்களுக்கு பின்வருமாறு சுவாமிகளால் புதுப்பெயர் சூட்டப்பட்டது. (1) குந்து சாகரர், (2) ஸ்ரேயாம்ஸ சாகரர், (3) மகாவீர சாகரர் என்பதாகும். ஜனங்கள் தரிசனம் செய்து ஆசீர்வாதம் பெற்று வீடு சென்றனர். பின்னர் உத்தரப் பிரதேசத்திலிருந்து விஜய ஸாகர சுல்லக் என்பவர் வந்து சங்கத்தில் கலந்துகொண்டார்.

## சுல்லக் சன்மதி ஸாகரர் வாழ்க்கை வரலாறு

தமிழ்நாடு தென்னுற்காடு ஜில்லா, செஞ்சி தாலுக்கா, கள்ளப்புலியூர் கிராமத்தில் சம்பத் ராவ் நைனருக்கும், பட்டம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். இவருக்கு தாய்தந்தையர் வைத்த பெயர் சுரேந்திர குமார். இவர் எட்டாம் வகுப்புவரை படித்தவர். தமிழ், கிரந்தம் இரண்டும் படித்தவர். இவருக்கு தமையனார் ஒருவரும் தமக்கை ஒருவரும் இருந்தனர். தந்தை குடும்ப விவசாயத் தொழிலைச் செய்து வந்தார். தந்தை மரணம் அடைந்தபிறகு அண்ணனுக்குத் திருமணம் நடந்தது. அண்ணன் நோய்வாய்ப்பட்டு காலமாகிவிட்டார். சகோதரிக்கு திருமணம் நடந்து

இரண்டு பெண் குழந்தைகள் உள்ளன சகோதரியின் கணவனும் நோய்வாய்ப்பட்டு காலமாகிவிட்டார். கஸ்தூரி (சகோதரி) புருஷன் இறந்தபிறகு இரண்டு பெண் குழந் தைகளையும் அழைத்துக்கொண்டு வந்து கள்ளப்புலியூரி லேயே ஒரே குடும்பமாக வசித்து வரலானார்.

சுரேந்திரனாகிய நான் முன்பு நடந்த சிரவணபெல்குள பாகுபலி சுவாமி முடி பூஜைக்குச் சென்றேன். அச்சமயம் சிம் மனகத்தை மடத்தில் தங்கிவிட நினைத்தேன். அழைத்துச் சென்றவர்கள் என்னை விடாமல் அழைத்து வந்து விட் டனர் இரண்டு வருஷம் கழித்து சம்மேத சிகரம் யாத் திரை சென்றேன். சம்மேத சிகரத்தில் ஸ்ரீ 108 ஆசாரிய நிர்மல சாகர், சுல்லக் நிர்வாண ஸாகரர் இருவரையும் தரி சித்து இரண்டு தினம் ஆகாரம் கொடுத்தேன். முனிமக ராஜ் இங்கே தங்கி விடுமாறும், முனி தீக்ஷை எடுத்துக் கொள்ளுமாறும் பணித்தார். அதற்கு நானும் சம்மதித் தேன். என்னை அழைத்துச் சென்ற புஷ்பதந்த சுல்லக் என்பவரும், சொர்ணம்மாளும் விடாமல் அழைத்து வந்து விட்டனர். மொழி தெரியாத காரணத்தால் நானும் வர வேண்டியதாயிற்று. அங்கு சம்மேத சிகர மலை ஏறி நான்கு தரிசனம் செய்தேன்.

கிராமத்திற்கு வந்த பின்னர் நான் சரீர சுகத் தை வெறுத்து, ஆன்ம சுகத்தைப் பெறவேண்டி இரவு உண்ணாமை, இரவு தங்கிய உணவுப் பொ ருள்கள் உண்ணாமை, கிழங்கு, கீரை நீக்கம், ஓட்டல் உணவு நீக்கம், உப்பில்லா உணவு உண்ணல், ஒரு வஸ்தி ரம் உடுத்தல், பாய் இல்லாமல் படுத்தல், ஜின தரிசனம், அஷ்டமி, சதுர்தசி போன்ற பருவதினங்களில் உபவாசம் அல்லது ஏகபுத்தம் ஆகிய சில விரதங்களைக் கைக்கொண் டிருந்தேன்.

ஆறு ஆண்டு கழித்து சகோதரியின் மகள் வயதுக்கு வந்தாள். அவளை எனக்குக் கல்யாணம் செய்துவைக்க

சிற்றப்பா சொர்ண பத்திர நைனர், தாய் பட்டம்மாள், சகோதரி கஸ்தூரிபாய் ஆகியோர் முயற்சி செய்தனர். அதற்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்தனர். நான் வேண்டாம் என்று தடுத்துச் சொன்னேன். இந்த நிலையில் தான் குந்தகுந்தர் மலையில் முனிபுங்கவர் வந்திருக்கிறார் என்ற தகவல் தெரிந்தது. பார்த்துவிட்டு வர வேண்டும் என்று சென்ற நான் மீண்டும் வீடு திரும்பாமலே தீக்ஷை எடுத்துக் கொண்டேன். அப்போது எனக்கு வயது 29 ஆகும். ஆனால்,

"அடுத்து முயன்றாலு மாகு நாளன்றி
எடுத்த கருமங்களாகா — தொடுத்த
உருவத்தா னீண்டவுயர் மரங்களெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா" —நீதிநூல்

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்"
—பழமொழி

"முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்." —குறள்

"முப்பதாமாண்டளவில் மூன்றிற் றொரு பொருளைத்
தப்பாமற் றன்னுட் பெறுனின்—செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகை யார் தங்கள்
முலையளவே யாகு மாமூப்பு" —ஔவையார்

என்ற முதுமொழிக் கிணங்க எனக்கு முப்பது வயதுக்குள்ளாக மூன்று ஆசைகளாகிய மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை ஆகிய மூன்றையும் துறந்து, நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய மூன்றையும் அடையும் வாய்ப்பு குரு தரிசனத்தால் கிடைத்தது.

## குந்தகுந்தர் மலையில் சாதுர்மாஸம்

ஆசாரிய ஸ்ரீ 108 நிர்மல ஸாகரர் ஸத் சங்கம் குந்த குந்த ஆச்ரமத்தில் சாதுர் மாத ஆரம்ப விழாவை பகவான் ஆதிநாதருக்கு அபிஷேகம் செய்தும், மலைமேல்

குந்த குந்தர் பாதத்திற்கு அபிஷேகம் செய்தும் கொடி ஏற்றி நடத்தியது.

சாதுர்மாஸ கமிட்டித் தலைவர் சேலம் சேட் ஹீரா லால் ஜெயின், உபதலைவர் வெண்பாக்கம் அருக்க கீர்த்தி நைனர், சேட் சம்பாலால் ஜெயின், ஸ்ரீதர ஜெயின், சமந்த பத்ர சாஸ்திரியார், வந்தவாசி சேட் மானக்ராஜ் ஜெயின், சேட் மோதிலால் ஜெயின், சேட் மதன்லால் ஜெயின், தேவ ராஜ் ஜெயின், பத்மராஜ் ஜெயின், ஸமந்த பத்ர ஜெயின், காஞ்சனமாலை அம்மாள் ஆகிய பல சிராவக சிராவகிகள் இந் நற்செயலில் ஒத்துழைத்தனர்.

ஒரு நாள் மலையின் மேல் குருமகராஜ், க்ஷுல்லக் சன்மதி ஸாகரர், க்ஷுல்லக் குந்து ஸாகரர் ஆகிய மூவரும் உட்கார்ந்து கொண்டிருக்கையில். குருமகராஜ் அவ்விருவரையும் முனி தீக்ஷை எடுத்துக் கொள்ளுமாறு கூறினர். அதற்கு குந்து ஸாகரர் தன்னால் இயலாது என்று கூறினர். ஆனால் சன்மதி ஸாகரர் நான் தங்கள் சொல்படி நடக்கத் தயார் என்றேன். தாங்கள் மலையின்மேலே ஏறும்படி சொன்னாலும் ஏறுகிறேன்; கீழேகுதிக்கச் சொன்னாலும் குதிக்கிறேன்; நான் குரு மொழி கேளா சீடன் அல்லன்; குரு இல்லை என்றால் ஞானம் உண்டாகாது. ஆகையால் குரு சொல்படி நடக்கத் தயார் என்று சொன்னேன். பிறகு முனி தீக்ஷைக்கு நல்ல நாள் பார்த்து பத்திரிகை அச்சிடப் பட்டது செய்தித்தாளில் செய்தியும் வெளியிடப்பட்டது. முனி தீக்ஷையுடன் ஒதலவாடி அப்பாண்டை பிரம்மசாரிக்கு க்ஷுல்லக் தீக்ஷையும் கொடுக்க முடிவு செய்யப்பட்டது.

17—8—1975 அன்று ஞாயிற்றுக்கிழமை. பௌர்ணமி திதி தினத்தில் முனி தீக்ஷைக்கு ஏராளமான மக்கள் பஸ், கார், லாரி, டிராக்டர், சைக்கிள், மோட்டார் சைக்கிள், மாட்டுவண்டி முதலிய வாகனங்களிலும், கால் நடையாகவும் பெருவாரியாக வந்தனர். மேல்சித்தாமூர் மடாதி

பதி முதலியோரும் வந்திருந்தனர். மாலை இரண்டு மணி அளவில் தீக்ஷை ஆரம்பம் ஆயிற்று. குருமகராஜ் சன்மதி ஸாகர சுல்லக்கின் கேசங்களை எடுத்துக் கொண்டிருந்த போது கூட்டத்தில் சிலர் எழுந்து முனி தீக்ஷை கொடுக்கக் கூடாது என்றும் இவர் (முனிவர்) வற்புறுத்திக் கொடுக்கிறார் என்றும் கூறினர். அதற்கு குருமகராஜ், சன்மதிஸாகரரே! நானு வற்புறுத்திக் கொடுக்கிறேன் அல்லது உன் விருப்பத்தால் எடுத்துக் கொள்கிறாயா? என்பதைப்பற்றி நீயே பேசு என்று கட்டளை இட்டார். நான் எழுந்து பேசினேன்; அதாவது:-குரு என் வேண்டுகோளுக்கிணங்க தீக்ஷை அளிக்கிறார். இதில் அவர் வற்புறுத்தல் இல்லை. நான் விரும்பி தீக்ஷை எடுத்துக் கொள்வது என் ஆன்ம முன்னேற்றத்திற்காகவே ஆகும். இதில் மற்றவர்கள் தலையிடுவது அவசியமற்றதாகும் என்றேன். குறிப்பாக:-

> ''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
> என்னோற்றான் கொல் எனும் சொல்'' —குறள்

என்ற தேவரின் கூற்றுக்கிணங்க நான் என் தந்தைக்கு நல்லபெயர் உண்டாகும் அளவில் நன் மார்க்கத்தில் போவதில் தங்களுக்கு ஏன் கவலை என்றேன். குருவானவர் மாணவனை நல்வழியில் செல்ல உபதேசம் செய்கிறார். குருவுக்கு சிஷ்யனை அடிக்கவும், அணைக்கவும் உரிமை உண்டு. மற்றவர்களால் அழிக்கமுடியுமே யொழிய ஆக்க முடியாது என்றேன். அதற்குள் ஒரு சிலர் எழுந்து நிர்வாண தீக்ஷை கொடுக்கக் கூடாது; அப்படிக்கொடுத்தால் தமிழர்கள் எல்லாம் எழுந்திருங்கள் போகலாம் என்று உரக்கப் பேசினர். சிலர் எழுந்து சென்றனர். சிலர் அமர்ந்திருந்தனர். பக்கத்திலிருந்த பட்டாச்சாரியர், சாஸ்திரிகள் ஆகியோர் அமர்ந்திருந்தனர். உடனே குருவானவர் மார்வாரி மக்களையும் அமரும்படிக் கூறினர். மார்வாரி மக்கள் அனைவரும் அமர்ந்தனர். கேசலோசம் முடிந்ததும் வஸ்திரத்தை நீக்கி வேறு மயில் பிஞ்சம், கமண்டலம், புஸ்தகம் ஆகியவை கொடுத்து எனக்கு வர்த்தமான ஸாகரர் என மறு பெயர்

சூட்டப்பட்டது. குருவானவர் அப்பாண்டை பிரம்மசாரிக்கு சுல்லக் தீக்ஷை கொடுத்து சுல்லக் சாரித்ர ஸாகரர் என பெயர் வைத்தார். உடனே நாங்கள் எழுந்து பகவானை தரிசனம் செய்துகொண்டு, மலைமேல் ஏறிச் சென்று விட்டோம். வடநாட்டு பிரமுகர்களும் ஏனையோரும் ஆசீர்வாதம் பெற்று திரும்பினர்.

பிரதிதினமும் மக்கள் வெகு தொலைவிலிருந்து ஏராளமாக வந்து கொண்டிருந்தனர். வந்தவர்களுக்கெல்லாம் ஜீவஹிம்சை செய்யக்கூடாது; புலால் உண்ணக்கூடாது; கள், தேன், பஞ்சஉதும்பரம், இரவு உணவு ஆகியவை உண்ணக்கூடாது; தண்ணீர் வடித்து சாப்பிட வேண்டும்; பீடி, சிகரெட், புகையிலை உபயோகிக்ககூடாது; பொய் பேசக்கூடாது; திருடக்கூடாது; பிறர்மனை விழையக் கூடாது; மிகுபொருள் சேர்க்கக்கூடாது என்பதற்கு பல உபமானக் கதைகளைச் சொல்லி மக்களுக்கு விரதம் கொடுப்பதுடன் உபதேசமும் செய்யப்பட்டது.

மலையடிவாரத்தில் திரு. பொன்னுசாமி ஜெயின் (குந்த குந்த கமிட்டித் தலைவர்) திரு. ஆதிராஜ் ஜெயின் (செயலர்) இவர்கள் கீர்த்தி ஸ்தம்பம் கட்டினார்கள். அதன் மேல் தர்மசக்ரத்தை ஸ்ரீ ஆசாரிய நிர்மல ஸாகரர் ஸ்தாபிதம் செய்தார்கள். 2000ம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டு தர்ம சக்ரம் அமைக்கப்பட்டது மேலும் அடியிலிருந்து மலைஉச்சி வரை மேற்கண்ட கமிட்டியினர் இருபுறமும் படிக்கட்டும், கைபிடிச் சுவரும் அமைத்துள்ளனர். மலைக்குக் கீழே பாதையும் மடித்துள்ளனர். மேலும் சில தர்ம காரியங்களைச் செய்து வருகின்றனர். இவர்களின் சலியா உழைப்பைக் கண்டு மக்களின் உதவி பெருவாரியாகக் கிடைத்து வருகிறது.

முனி மகராஜ் மலை அடிவாரத்திற்கு வந்த பிறகு மலையின்மேல் குந்த குந்தர் பாதத்திற்கு கோபுரம் கட்டப்பட்டது. துறவிகள் தங்க புதிதாக குகை ஒன்று கட்டப்பட்டது. பழைய குகையும் சீர்திருத்தப்பட்டது. பாதத்தின் வெளிப்

பக்கத்தில் கடப்பைக்கல் புதைக்கப்பட்டது. கீழே சத்திரத்திலுள்ள வாசலில் கடப்பைக்கல் புதைக்கப்பட்டது. ஆசாரிய சுவாமிகளால் ஸமஸ்கிருத பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு 'குந்த குந்த நிர்மல் வித்யாபீடம்' எனப் பெயரிடப்பட்டது.

பின்னர் ரக்ஷாபந்தன் விழா சிறப்பாக நடைபெற்றது தசலக்ஷண பர்வ விழாவின் பத்து நாளும் தர்ம உபதேசம் நடைபெற்றது. சிலர் தம் சக்திக்கு ஏற்ப 1 நாள், 3 நாள், 5 நாள், 10 நாள், உபவாசம் இருந்தனர். சிலர் பத்து நாட்களும் ஒருவேளை உணவு உண்டு வந்தனர். பத்து நாட்கள் உபவாசம் இருந்தவர்கள் முனி சங்கத்திற்கு ஆகாரதானமும், சிராவகர்களுக்கு போஜனமும், அனைவருக்கும் ஒரு தேங்காயும் கொடுத்தார்கள். வந்த பெரியோர்கள் உபவாசம் இருந்தவர்களுக்கு விலை உயர்ந்த வஸ்திரம், புஷ்பமாலை அணிவித்து ரூபாயும் வழங்கிப் பாராட்டினார்கள். முனி புங்கவர், விரதத்தை இடையூறின்றி முடித்ததற்காக அவர்களுக்குப் பூரண ஆசீர்வாதம் வழங்கினார்.

ஒரு நாள் சாத்த மங்கலம் சிராவகர் ஒருவர் இரவில் சைக்கிளில் வந்தவாசிக்குச் சென்றபோது பயந்து கீழே விழுந்து விட்டார். நான்கு நாட்கள் வரை பேசவில்லை; சரியாகச் சாப்பிடுவதில்லை; சில மந்திரவாதிகள்; வைத்தியர்கள் பார்த்தும் குணமாகவில்லை; பின்னர் முனி மகராஜ் அவர்களின் தரிசனத்திக்கு அழைத்து வந்தனர். குரு மகராஜ் தரிசனம் அளித்தார். மேலும் பஞ்ச நமஸ்கார மந்திரத்தை சொல்லியும் மயில் பிஞ்சத்தால் ஆசீர்வாதம் செய்தும் கமண்டலத் தண்ணீரை உடல்மீது தெளித்தார். மூர்ச்சை யடைந்திருந்த நபர் உடனே மகாவீர பகவானுக்கு ஜே, குரு மகராஜிக்கு ஜே என்று மகிழ்வுடன் கோஷமிட்டதைக் கண்ட மக்கள் ஆச்சரியப்பட்டனர்.

21-9-1975 அன்று 108 ஸ்ரீ ஆசாரிய நிர்மலஸாகர சுவாமிகளின் 30ம் ஆண்டு பிறந்த நாள் விழா சிறப்பாகக்

கொண்டாடப்பட்டது. வித்வான்கள் ஸ்ரீ குரு மகாராஜை பாராட்டிப் பேசினார்கள். சில தினங்கள் கழித்து ஆசாரிய சுவாமிகளின் கேசலோசன விழா நடைபெற்றது. பெருவாரியான மக்கள் கூடி கண்டு களித்தனர்.

நீலகிரி மலையிலுள்ள 108 ஸ்ரீ குந்த குந்த ஆசாரியார் பாதங்களுக்கு யானையின்மேல் ஜலம் கொண்டு வந்து 108 கலசங்களால் பெரிய பூஜை செய்யப்பட்டது. மலை அடிவாரத்திலிருந்த 1008 பகவான் மகாவீர சுவாமிக்கு ரதஉற்சவமும் சிறப்பாக நடைபெற்றது. மக்கள் கண்டு களித்து மகிழ்ந்தார்கள்.

## ஆசாரிய சுவாமிகளின் அறவுரை

"சிதாநந்தைகரூபாய ஜிநாய பரமாத்மனே
பரமாத்ம ப்ரகாசாய நித்யம் சித்தாத்மனே நம;"

"பிரிய தர்ம பந்துக்களே! சித்தபகவான் சித்தசொரூபமாகவும், பரஞ்ஜோதி மயமாகவும், நிரஞ்சன சித்த மயமாகவும் இருக்கிறார். எட்டு கர்மங்களையும் கெடுத்து, எட்டு குணங்களையும் பெற்று இருக்கிறார். பகவான் அகப்பற்று புறப்பற்று அனைத்தையும் நீக்கி, முனி தீக்ஷை எடுத்து, பூர்வ ஜன்ம கர்மங்களை தபத்தினால் நிர்ஜரை செய்து மோக்ஷமாகிய சிவகதியை அடைந்திருக்கிறார். ஆகவே தங்களுடைய ஆத்மாவும் பரமாத்மாவாக ஆவதற்கு ஆசையை நீக்கி நல்லொழுக்கத்தை மேற்கொண்டு நற்கதி அடைய முயலுவீராக."

நீதிக்கதை:—

## வாலிபனின் கதை

ஓர் ஊரில் வாலிபன் ஒருவன் குரு ஒருவரைக் கண்டான். பிறகு ஒருமாத காலம் கழித்து வந்தான். குரு சிஷ்யனை நோக்கி மறந்துவிட்டாயா? இவ்வளவு நாட்களாக

வராத காரணம் என்ன என்ருர்? சிஷ்யன் சுவாமி! என்குடும்பத்தார்கள் என் பேரில் அதிக பாசம் வைத்துள்ளனர். ஆதலால் வர முடியவில்லை என்ருன். குரு அப்படியா? உண்மையில் உன்மேல் அவர்கள் பாசமுள்ளவர்களா, இல்லையா என்பதைக் காண்பிக்கின்றேன். நீ நான்கு நாளைக்கு தொடர்ந்து வரவேண்டும் என்ருர். சிஷ்யன் அவ்வாறே தொடர்ந்து வந்தான். குரு அவனுக்குப் பிராணுயாமம், தியானம் ஆகியவற்றைக் கற்றுக் கொடுத்தார். சீடன் மூச்சு அடக்கி வெளிவிடுவதை சாதகம் செய்து கொண்டான். மூன்று மணி, நான்கு மணி நேரம் மூச்சு பந்தனம் செய்ய அப்பியாசம் பெற்ற பிறகு, ஒரு நாள் குரு சீடனிடம் கூறியதாவது:- சிஷ்யனே, இன்று வீட்டிற்குச் சென்று தலையை வலிக்கிறது என்று உணவு அருந்தாமல் படுத்துக்கொள்; காலை சூரிய உதயத்திற்கு மூச்சு பந்தனம் செய்து கை, கால்களை அசைக்காமல் படுத்துவிடு; பிறகு எட்டு மணி அளவில் நான் அங்கு வருகிறேன். அப்போது ஸம்ஸாரத்தினுடைய மாயை, மோஹம், பாசம், ஆகிய இவைகளைத் தெரிந்துகொள் என்று சொன்ஞர்.

சிஷ்யன் வீடு சென்று தலைவலிக்கிறது என்று அறையில் படுத்துவிட்டான். காலை சூரிய உயத்திற்கு கை, கால் அசையாமல் மூச்சு பந்தனமும் செய்து கொண்டான். குடும்பத்திலுள்ளவர்கள் வைத்தியர்களைக் கொண்டுவந்து காண்பித்தனர்; குணப்படவில்லை. வைத்தியர் போய்விட்டார். குடும்பத்தார்கள், அழுது கொண்டிருந்தனர்; அந்நேரம் எட்டுமணி அளவில் சாமியார் வீதியில் சென்றுகொண்டிருந்தார். எதிர்பாராமல் அவரைக் கண்ட தந்தை ஓடி வந்து சாமியாரை தம் வீட்டிற்கு அழைத்துச் சென்ருர். சாமியார் பையனின் கை, கால்களைப் பிடித்து பார்த்துவிட்டு பெரியவரே ஒரு கோப்பை பாலும், சிறிது சாம்பலும் கொண்டு வாருங்கள் என்ருர். அவ்விரண்டையும் கொண்டு வந்தவுடன் சாமியார் சாம்பலை எடுத்து ஏதோ ஒரு

மந்திரத்தை மௌனமாகச் சொல்லி பாலில் ஊதினர் பிறகு நீங்கள் யாராவது இந்த பாலைக் குடியுங்கள். உங்கள் மகன் பிழைத்துவிடுவான்; ஆனால் இந்த பாலைக் குடிப்பவர் இறந்துவிடுவார் என்றார். யாரும் பாலைக் குடிக்க முன்வரவில்லை. தாயைக் கூப்பிட்டு உங்களுக்கு வயதாகி விட்டதே, நீங்கள் குடித்து உங்கள் மகனைப் பிழைக்க வையுங்கள் என்றார் அதற்கு அந்த அம்மையார்; அய்யா ஒரு மகன் இறந்தால் ஆறு மக்கள் இருக்கிறார்கள். அவர்களோடு நான் இருப்பேன். ஆகவே நான் குடிக்க முடியாது என்றாள். தந்தையைக் கூப்பிட்டு குடிக்கச் சொன்னார். அதற்கு அவர் கூறியதாவது:- சுவாமி, ஒன்பது மாதம் சுமந்து பெற்றவளே மறுக்கிறாள். எனக்கென்ன வந்தது, பெத்தமனம் பித்து என்பார்கள்; அவளே மறுக்கிறபோது நான் மறுப்பதில் என்ன தவறு இருக்க முடியும் என்றார். சகோதரர்களைக் கூப்பிட்டுச் சொன்னார். அதற்கு அவர்கள் கூறியதாவது:- சுவாமி, தம்பி இறந்தால் ஒரு பாகம் குறையும்; ஆகவே நாங்கள் குடிக்க மாட்டோம் என்று அறுவரும் கூறிவிட்டனர். பையனின் மனைவியைக் கூப்பிட்டுச் சொன்னார். அதற்கு அவள் சுவாமி, தாலி கட்டிக்கொண்ட நான் ஒரு பலனும் அடையவில்லை; அவர் குடும்பத்து ஜனங்களே மறுக்கிறார்கள்; நான் மறுப்பதில் என்ன தவறு இருக்கிறது; நான் என் தாய் வீட்டிற்குச் சென்று சந்தோஷமாக இருப்பேன் என்று சொன்னாள். சுவாமியார் சரி நீங்கள் யாரும் குடிக்கத் தயாராக இல்லை. ஆகவே என் வேறொரு சீடனைக் குடிக்கச் செய்யட்டுமா? என்று கேட்டார். அப்போது அவர்கள் எல்லோரும் கருணை வடிவே, தங்களுக்கு புண்ணியம் உண்டு, தாங்கள் அப்படியே செய்யுங்கள் என்றனர். சாமியார் பையன் கையை அசைத்துவிட்டு பாலை சீடனைக்கொண்டு குடிக்கச் செய்தார். பிறகு எழுந்து செல்லலானார். பையனும் எழுந்து அவருடன் தொடர்ந்தான் அனைவரும் அவன் கையைப் பிடித்து எங்கே போகிறாய் என்றனர். போதும் உங்கள் பாசமும், பற்றும், மாயையும், மோஹமும்; எனக்காகப் பாலைக்குடிக்க வைத்து என்னை எழுப்பியவர்

பின்னே செல்கிறேன் என்றான். பின்னர் குருவுடன் சென்று தீட்க்ஷை எடுத்து தபம் செய்து நற்கதியை அடைந்தான். ஆகையால் இதன் கருத்து என்னவெனில் ஒவ்வொருவரும் குடும்ப மாயை, மோகத்தில் இருந்து நீங்கி ஆத்ம கல்யாணம் செய்து நற்கதி அடைய முயல வேண்டும் என்பதாம். நிர்வாணமாகிய மோக்ஷ சுகத்திற்குக் காரணமாவன:-

* 5. மகாவிரதம், 5. சமிதி, 5. இந்திரிய நிக்ரஹம், 3. குப்தி, 6. ஆவச்யகிரியை, 6. காயஜீவரக்ஷா, 12 தபம், 5. ஆசாரம், 10. தர்மம், 22. பரீஷகம், 12. அனுப்ரேக்ஷா ஆகியவைகளாகும். ஆகவே ஒவ்வொருவரும் நிர்க்ரந்த முனிதீட்க்ஷையை எடுத்து இவைகளை அனுசரித்து முக்தி சுகத்தை அடைவீராக என்றார்.

> ''தவம்செய்வார் தம்கருமம் செய்வார்மற் றல்லார்
> அவம்செய்வார் ஆசையுட் பட்டு'' —குறள்

இதன் பொருள் :—தவம் செய்பவர் தம் உயிருக்கு நன்மை செய்தலாகிய கடமையைச் செய்பவராவார். ஏனையோர் ஆசைகளுக்கு உட்பட்டுத் தம் ஆன்மாவுக்குத் தீமைகளை வரவழைப்பவர்களாவர்.

* ஐந்து மகாவிரதங்களாவன : (1) அஹிம்ஸா, (2) சத்யம், (3) அசௌர்யம், (திருடாமை) (4) பிரம்மச்சரியம், (5) பரிக்ரக தியாகம் (பொருளாசை விடுதல்). மகாவிரதம் எனில் முழுமையாகப் பின்பற்றுதல்.

ஐந்து சமிதிகளாவன :—(1) ஈர்யா சமிதி (நான்கு முழம் பார்த்து நடத்து செல்லுதல்), (2) பாஷா சமிதி (சொல்லடக்கம்), (3) ஏக்ஷண சமிதி (தூய ஆகாரத்தை ஏற்றல்), (4) ஆதான நிக்ஷேபண சமிதி (பொருட்வைகளை க்கும்போதும் எடுக்கும்போதும் கவனம் செலுத்து

தல்). (5) வ்யுத்சர்க்க சமிதி (மலம், சிறுநீர் கழிக்கும் போது ஜீவ இம்சையில்லாதிருக்கும்படி கவனித்தல்).

**ஐந்து இந்திரிய நிக்ரஹம்:**—மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களையும் அடக்குதல்.

**மூன்று குப்தி:**—மனம், வசனம், காயம் ஆகிய மூன்றையும் அடக்குதல்.

**ஆறு ஆவஸ்யக கிரியை:**—(1) பிரதிக்ரமணம் (வருந்துதல்) (2) பிரத்யாக்யானம் (விடுதல்), (3) ஸ்துதி (தோத்திரம்), (4) வந்தனை (வணங்குதல்), (5) ஸாமாயிகம் (பற்றற்ற நிலையைப் பழக்குதல்), (6) காயோத் சர்க்கம் (உடற்பற்றை நீக்குதல்).

**ஆறுகாய ஜிவக்ஷா:**—(1) ப்ரத்வீ (2) அப் (நீர்) (3) தேஜஸ் (நெருப்பு) (4) வாயு (5) வநஸ்பதி (6) த்ரஸ (ஈரறிவு முதல் ஐயறிவு வரை).

**பன்னிரண்டு தபம்:**—பின்னால் விளக்கப்பட்டுள்ளது.

**ஐந்து ஆசாரம்:**—ஞானம், தர்சனம், வீர்யம், சாரித்ரம், தபம் ஆகிய ஐந்தையும் பின்பற்றி ஒழுகுதல்.

**பத்துவகை தர்மம்:**—(1) க்ஷமை (பொறுமை) (2) மார்த்தவம் (மிருது) (3) ஆர்ஜவம் (நேர்மை) (4) ஸத்யம் (5) சௌசம் (தூய்மை) (6) ஸம்யமம் (அடக்கம்) (7) தபம் (8) தியாகம் (9) ஆகிஞ்சின்யம் (பற்றில்லாமை) (10) பிரம்மச்சரியம் ஆகிய இவைகளோடு உத்தமம் சேர்த்தால், தூய்மை, முழுமை என்ற பொருள்படும்.

**22 பரீஷகம்:**—(1) க்ஷுத் (பசி) (2) பிபாஸா (நீர் வேட்கை) (3) சீதம் (குளிர்) (4) உஷ்ணம் (5) தம்சமசகம் (ஈ, கொசு) (6) நாக்யம் (பிறந்த மேனி)

7) அரதி (பிரியமின்மை) (8) ஸ்திரீ (9) சர்யா (நடத்தல்) (10) நிஷத்யா (ஆசனத்திலிருத்தல்) (11) சய்யா (படுக்கை) (12) ஆக்ரோஷம் (வைதல்) (13) வதம் (துன்புறுத்துதல்) (14) யாசநா (யாசகம்) (15) அலாபம் (கிடைக்காமை) (16) ரோகம் (நோய்) (17) திருணஸ்பர்சம் (புல் பூண்டுகள் குத்துதல்) (18) மலம் (அழுக்கு) (19) ஸத்கார புரஸ்காம் (வெகுமதி, பாராட்டு) (20) ப்ரஜ்ஞா (அறிவு) (21) அஞ்ஞானம் (அறிவின்மை) (22) அதர்சனம் ஆகியவைகளால் உண்டாகும் இடையூறுகளைப் பொறுத்தல்.

12 அனுப்ரேக்ஷா (சிந்தித்தல்) :—(1) அநித்யம் (நிலை இல்லாமை) (2) அசரணம் (பாதுகாப்பின்மை) (3) ஸம்ஸாரம் (உலகம்) (4) ஏத்வம் (தனிமை) (5) அன்யத்வம் (வேற்றுமை) (6) அசுசி (தூய்மையின்மை) (7) ஆஸ்ரவம் (வினை வந்தடைதல்) (8) ஸம்வரை (தடுத்தல்) (9) நிர்ஜரை (கழிதல்) (10) லோகம் (உலகம்) (11) போதி துர்லபம் (அறிவு பெறுதல் அரிது) (12) தர்மஸ்வாக்யாத தத்வம் (தரும சிந்தனை).

## கிரஹஸ்தன் கடமை

"மூவா முதலா உலகமொரு மூன்றுமேத்தத்
தாவாத இன்பம் தலையாயது தன்னினெய்தி
ஓவாது நின்றகுணத் தொண்ணிதிச் செல்வ
னென்ப
தேவாதி தேவனவன் சேவடி சேர்து மன்றே."

பவ்ய தர்ம சிரோமணிகளே! பகவான் அருகத்பரமேஷ்டி அகப்பற்று புறப்பற்று அனைத்தையும் நீக்கியவர். பசி, தாகம், பிறப்பு, மூப்பு, இறப்பு, அச்சம், கர்வம், மாயை, தூக்கம், வியர்வை, சந்தேகம், மோஹம், துவேஷம், ரோகம், விருப்பு, வெறுப்பு, ஆயாசம், துன்பம் ஆகிய 18 வித குற்றங்களற்றவர். முழுதுணர் ஞானமாகிய கேவலக்

ஞானத்தைப் பெற்றுள்ளார். அவரை அதோலோகம், மத்திமலோகம், ஊர்த்தவலோகம் ஆகிய மூன்று உலகத்து ஜீவன்களும், வணங்குகின்றன; துதிக்கின்றன. அப் பகவான் பவ்விய ஜீவன்களுக்கு தர்ம உபதேசம் செய் கிருர்.

''தேவ பூஜாகுரு பாஸ்தி ஸ்வாத்யாயம் சம்யமம் தப:
தானம் சேதி கிருஹஸ் தாளும் ஷட்கர்மாணி
தினே தினே''

தார்மீக தர்ம ப்ரேமி பந்துக்களே! ஸமந்த பத்ர ஆசாரியார் ரத்னகரண்ட ஸ்ராவகாசாரத்தில் கிரஹஸ்த னுக்கு ஆறு கடைமைகளை உபதேசித்திருக்கிருர். தின மும் அசி, மசி, கிருஷி, வாணிஜ்யம், சிற்பம், கலை என ஆறு விதமான தொழில் செய்கிறீர்கள். அதனுல் வரும் பாபங்கள் நீங்க, தேவ பூஜை, குருசேவை, ஸ்வாத்யாயம், சம்யமம் (புலனடக்கம்), தபம், தானம் இந்த ஆறு கிரியை களையும் நீங்கள் தினமும் செய்யவேண்டும்.

**1. தேவ பூஜை :—** காலையில் எழுந்து சரீர சுத்தம் செய்துகொண்டு அஷ்டவித அர்சனை திரவ்யத்துடன் ஆல யம் சென்று பகவானுக்கு அபிஷேகம் செய்து, அர்ச்சனை செய்தால் அஷ்ட கர்மங்கள் கெட்டு அஷ்டகுணம் அடைய வழி பிறக்கும். பகவானை நாம் தரிசனம் செய்தால் அவர் முகத்திலுள்ள அந்தரங்க பகிரங்க லக்ஷ்மி நம்மைப் பார்க் கிருள். அப்பொழுது நாம் எட்டு லக்ஷ்மிகளையும் பெறலாம்.

''ஸ்ரீமுகா லோகனுதேவ ஸ்ரீமுகா லோகனம் பவேத் |
ஆலோகன விஹீநஸ்ய தத்சுகா வாப்தய: குத: ||

இதன் பொருள் :—காலையில் ஜிந பகவானை நாம் தரிசிப்பதால், அவர் முகத்திலுள்ள அந்தரங்க, பகிரங்க (உள்-வெளி) லக்ஷ்மி நம் முகத்தை நோக்குகிருள். அப்

பொழுது எல்லா செல்வங்களும் நமக்கு உண்டாகின்றன. அதைச் செய்யாதவர்களுக்கு லக்ஷ்மீ கடாக்ஷம் ஏது? இல்லை என்பதாம்.

ஜிஹ்வாக்ரே சாஸ்த்ர லக்ஷ்மீ
கரதல கமலே தான பூஜாதி லக்ஷ்மீ
தோர் தண்டே வீர்ய லக்ஷ்மீ
ஹ்ரதய ஸரஜிதே சத்ய காருண்ய லக்ஷ்மீ
கட்காக்ரே சௌர்ய லக்ஷ்மீ
நயன கமலயோ: க்ஷேம சௌபாக்ய லக்ஷ்மீ
ஸர்வாங்கே ஸௌந்தர்ய லக்ஷ்மீ
ஸகல விஜயதே ஸர்வ சாம்ராஜ்ய லக்ஷ்மீ

இதன் பொருள் :—சொல்வன்மை, கொடை, வீரியம், வாய்மை, கருணை, திறமை, செல்வ நிறைவு, அழகு தீர்த்தங்கர பதவி ஆகிய எட்டு வகையான ஐஸ்வரியமும் பெறுதல் சிறப்புடையதாகும்.

இந்த எட்டு லக்ஷ்மீகளையும் பெற பகவான் தரிசனம், பூஜை அர்சனை, ஸ்தோத்திரம், ஆரதி முதலியன செய்தல் வேண்டும்.

௨. குருபாஸ்தி :—குருக்களுக்கு சேவை செய்வதால் நம்முடைய அஞ்ஞானமாகிய இருள் நீங்கி நல்ல ஞானம் பிறக்கிறது.

''அஜ்ஞான திமிராந்தாணும் ஞாணஞ்சன சலாகயா
சக்ஷுருந் மீதம்யேந தஸ்மை ஸ்ரீகுரவே நம:''

குரு அஞ்ஞானமாகிய மித்யாத்வத்தை நீக்கி ஸம்யக் ஞானத்தை உண்டாக்குகிறார். தீக்ஷை, சிக்ஷை கொடுத்து ஆத்மாவை சம்சாரத்திலிருந்து கரையேற்றுகிறார். அதாவது குருவுக்கு சேவை (வையா விருத்யம்) செய்தால் தீர்த்தங்கர பதவி கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். ஆதலால் குருசேவை செய்யவேண்டும்.

3. ஸ்வாத்யாயம்:—பகவானால் சொல்லப்பட்ட தத்துவங்களை ஆகமமாக ஆசாரியர்கள் எழுதி வைத்துள்ளனர். அதை சிரத்தையோடு படிக்கவேண்டும். படித்து அதில் கூறியுள்ளபடி நடக்கவேண்டும். 'ஸ்வாத்யாயம் பரமம் தப:' என்று கூறப்படுகிறது படிப்பது சிறந்த தபத்துக்கு ஒப்பாகும். படிக்கும்போது ஐம்பொறிகளும் ஒரு நிலைப்படுகின்றன.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக" —குறள்

கற்க வேண்டியதைத் திறம்படக் கற்கவேண்டும். கற்றபின் அதில் கூறியபடி நடக்கவேண்டும்.

"கல்வி கரையில கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்த்தமை வுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து".

சமுத்திரத்திற்கு கரை உண்டு கல்விக்கு கரை இல்லை. படிப்பதோ சிலநாள் தான். இளமை, தூக்கம், முதுமை, நோய் ஆகிய பலவழியில் நாள் கழிந்துவிடுகிறது ஆதலால் ஆராய்ந்து பார்த்தால், படிப்பது முக்கியம் என விளங்குகிறது. ஆகையால் அனைவரும் கல்வி நன்கு கற்க வேண்டும்.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு". —குறள்

இதன் பொருள்:—மணலில் தோண்டும் கிணற்றில் தோண்டிய அளவுக்கே நீர் ஊறும் ஆனால் அவரவர் முயன்று கற்றதன் அளவுக்கேற்ப அறிவு ஊறிச் சுரக்கும் (வளரும்).

4. சம்யமம்:- சம்யமம் இரண்டு வகைப்படும். ஒன்று இந்திரிய சம்யமம், மற்றது பிராணி சம்யமம். முதலில் புலன்களை அடக்கவேண்டும். பிறகு பிராணிகளிடத்தில் அன்பு, கருணை காட்டவேண்டும். இந்திரியத்தை அடக்க

உபவாசம், ஒரேவேளை உண்ணுதல், சுவை அற்ற உணவு ஏற்றல் முதலிய விரதம் ஏற்கவேண்டும். எந்த உயிரையும் கொல்லககூடாது. ஜீவன்களிடத்தில் கருணை (அன்பு) காட்டவேண்டும்.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்' —குறள்

அடக்கமாக இருந்தால் தேவர் உலகில் சேர்ந்து சுகம் எய்துவர். அடக்கமில்லாவிட்டால் இருள்நிறைந்த நரகத்தில் வேதனைப்படுவர். ஆதலால் (சம்யமமாக) அடக்கமாக இருத்தல் வேண்டும்.

5. தபம்:- தபம் செய்வதால் பூர்வஜென்ம கர்மம் நிர்ஜரை (கழிவு) யாகி ஆன்மா முக்தி அடைய வழிபிறக்கிறது பாஹியா (வெளி) தபம் 6. அப்யந்தர (உள்) தபம்6. என 12 வகை தபம் உள்ளது. 1 அனசனம்.—சதுர்வித (உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன) ஆகாரம் உண்ணாமை. 2 அவமோதர்யம்—தேவையைவிடக் குறைந்த உணவு உட்கொள்ளல் 3. விருத்தி பரிசங்யானம்—உணவு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ஒருவரையும் நொந்து கொள்ளாமை (வருந்தாமை). 4 ரஸபரி தியாகம்:—சுவையான பால், நெய், தயிர், இனிப்பு, உப்பு, பருப்பு போன்ற சத்துள்ள வஸ்துக்களை நீககல். 5 விவிக்தசய்யாசனம் — தனிமையான கோயில், சத்திரம் போன்ற இடத்தில் தியானம், ஸ்வாத்யாயம், உறக்கம் ஆகியவை செய்தல். 6 காயக்கிலேசம்—மழை, பனி, வெய்யில் இவைகளில் இருந்து தியானம் செய்தல். ஆகிய இவை ஆறும் புலன்களை அடக்குதற்குத் தேவையான பாஹிய (வெளி) தவமாகும்.

1 பிராயச்சித்தம்—செய்த குற்றத்திற்கு அடிக்கடி வருந்துதல். 2 விநயம்—பெரியோர்களிடம் வணக்கமாக இருத்தல். 3. வையாவிருத்யம்—குரு, தாய், தந்தை, பெரியோர்களுக்குக் கை, கால்களைப் பிடித்தல், சேவை

செய்தல். 4. ஸ்வாத்யாயம்—ஆன்ம அறிவையும் உலக அறிவையும் வளர்க்கும் நூல்களைப் படித்தல், அடிக்கடி சிந்தித்தல். 5. வ்யுத்ஸர்கம்—அகப்பற்று புறப்பற்றுகளைக் கால நிலைக்கு ஏற்ப நீக்குதல். 6 தியானம்—ஆர்ததியானம், ரௌத்ரதியானம் நீக்கி தர்மதியானம், சுக்கில தியானம் செய்தல். தசதர்மம், த்வாதசானுப் ரேக்ஷைகளைத் தியானித்தல், சிந்தித்தல் ஆகிய இவை உள் தபசு ஆகும். 'இச்சாநிரோதஸ்தப:' தததுவார்தசூத்ரம்; இச்சையை—ஆசையை நீக்குவது தபம் சக்திக்கு தக்க விரதம், தபம் செய்தல் வேண்டும்.

தானம்—தானம் நான்கு வகைப்படும். 1 ஆகார தானம்—உணவை சதுர்வித சங்கத்திற்குக் கொடுத்தல். 2. சாஸ்த்ர தானம்—முனிமகராஜிகளுக்கு ஆகமங்களைக் கொடுப்பது, ஏழை மாணவர்களுக்கு புத்தகம், பலகை வாங்கிக் கொடுத்தல். 3. ஔஷத தானம்—நோயாளிகளுக்கு மருந்து கொடுத்தல். 4. அபயதானம்—பயப்படுபவர்களுக்கு தைர்யம் சொல்லி இடம் கொடுத்து காப்பது. சிராவகர்கள் இந்த நான்குவித தானங்களையும் பிரதி தினமும் செய்யவேண்டும்.

ஓம் சாந்தி

## முனி சங்கம் கிராம விஜயம்

நீலகிரி மலையின் கீழ் உள்ள குந்த குந்த ஆஸ்ரமத்தில் சாதுர் மாஸம் மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது. கன்னட தேசத்தைச் சார்ந்த தும்கூரில் சாதுர் மாஸம் செய்து முடித்துவிட்டு ஸ்ரீ வீரசாகர முனிவர், ஸ்ரீ சாந்தி ஸாகர முனிவர், ஸ்ரீ குந்து ஸாகர சுல்லக் ஆகிய மூவரும் வந்து ஸ்ரீ ஆசாரிய நிர்மல ஸாகரர் சங்கத்தில் சேர்ந்தனர்.

14-12-1975 அன்று சாதுர் மாஸ கமிட்டியில் சேவை செய்தவர்களுக்கும், சாஸ்திரியார்களுக்கும், தமிழ் பண்டிதர்களுக்கும் சன்மானம் வழங்கப்பட்டது. பிறகு சங்கம்

பாதயாத்திரையாக புறப்பட்டு 4 மைல் தூரத்திலுள்ள திறக் கோயில் (மலைமேல் உள்ள) கோவிலை தரிசனம் செய்தது. இங்குள்ள ஆலயத்தின் மூலவர் ஆதிநாதர். ஒரு பாறையில் நான்குபுறமும் நான்குபிம்பங்கள் உள்ளன. அவை ஆதிநாதர், பார்ஸ்வ நாதர், மகாவீரர், பாகுபலி சுவாமி. இங்கு 5 ஜைனர் வீடுகள் உள்ளன. சங்கம் இங்கிருந்து புறப்பட்டு 1 மைலில் உள்ள தேசூர் ஜினாலயத்தைத் தரிசித்தது. இங்கு மூலவர் ஆதிநாதர். தாமிர பிம்பங்கள் நிறைய உள்ளன. பிரம்ம தேவர் உள்ளார். பலிபீடம் உள்ளது. 10 ஜைனர் வீடுகள் உள்ளன. இங்கிருந்து புறப்பட்டு சீயமங்கலம் மலையிலுள்ள ஜின பிம்பங்களைத் தரிசித்தோம். அங்கு ஒரு குகை உள்ளது. குகைக்கு மேலே பாறையில் பாகுபலி சுவாமி மல்லிநாதர், வர்த்தமானர் ஆகிய சிலைகள் உள்ளன. அருகர் பூண்டி கிராமம் கீழே உள்ளது. ஆனால் அங்கு ஜைனர் இல்லை. அது தேசூரில் இருந்து 1 மைல் தூரம். இங்கிருந்து 1 மைல் தூரத்தில் உள்ள மஞ்சப்பட்டு சென்று ஜினாலயத்தைத் தரிசித்தோம் மூலவர் மல்லிநாதர். தாமிர பிம்பங்கள் நிறைய உள்ளன. பலிபீடம் உள்ளது. 25 ஜைனர் வீடுகள் உள்ளன மஞ்சப்பட்டிலிருந்து புறப்பட்டு செஞ்சி தாலுக்காவில் உள்ள கள்ளப்புலியூர் சென்று ஜினாலயத்தைத் தரிசித்தோம். இங்கு மூலவர் பார்ஸ்வநாதர். தாமிர பிம்பங்கள் நிறைய உள்ளன. தர்மதேவி உள்ளது மானஸ்தம்பமும், பலிபீடமும் உள்ளன. 65 ஜைனர் வீடுகள் உள்ளன. இங்கு வர்த்தமான ஸாகரருக்கு கேசலோசம் நடந்தது. இங்கிருந்து புறப்பட்டு 5 மைலில் உள்ள வளத்தி சென்று ஜினாலயத்தைத் தரிசித்தோம். மூலவர் ஆதிநாதர். உலோக பிம்பங்கள் நிறைய உள்ளன. மானஸ்தம்பமும், பலிபீடமும் உள்ளன. இங்கு மலையில் குகை உள்ளது. குகை அருகில் பார்ஸ்வநாதர் கட்காசனத்தில் (நின்று) உள்ளார். இங்கிருந்து புறப்பட்டு 4 மைலில் உள்ள மேல் மலையனூர் சென்று ஜினாலயத்தைத் தரிசித்தோம். மூலவர் ஆதிநாதர். பலிபீடம் உள்ளது. 11 ஜைனர் வீடுகள் உள்ளன.

மற்ற ஊர்களின் விவரங்களாவன:-

| ஊர் பெயர் | கோயில் மூலவர் | மான ஸ்தம்பம் பலி பீடம் | மைல் * | ஜைனர் குடும்பம் |
|---|---|---|---|---|
| தாயனூர் | ஆதிநாதர் தாமிர பிம்பங்கள் உள்ளன. | பலிபீடம் உள்ளது | 1 | 25 |
| துரைப்பாடி | புஷ்பதந்தர் | பலிபீடம் உள்ளது | 1 | 10 |
| திருநாதர் குன்றம் | பாறையில் 24 தீர்தங்கரர்கள் பாரிஸ்வநாதர். பெரிய குகையும் உள்ளது | .......... | 10 | — |
| சக்ராபுரம் (செஞ்சி) | அனந்தநாதர் | பலிபீடம் உள்ளது | 1 | 12 |
| பெரும்புகை | மல்லிநாதர் மலையில் முனிவர் படுக்கைகள் உள்ளன | மானஸ்தம்பமும் பலி பீடமும் உள்ளன | 3 | 20 |
| மேல்சித்தாமூர் இங்கு பட்டாச்சாரியார் மடம் உள்ளது. இங்கு 10 நாள் பிரம்ம உற்சவம் நடக்கிறது. 7-ம் நாள் தேர் நடைபெறுகிறது. | மூன்று கோயில்கள் பார்சுநாதர், நேமிநாதர், மல்லிநாதர். தேவி கோவில்களும், தாமிர பிம்பங்களும் நிறைய உள்ளன. பெரிய கோவிலில் பெரியகோபுரம் உள்ளது. | மானஸ்தம்பமும் துஜஸ்தம்பமும் பலிபீடமும் உள்ளன. | 7 | 35 |

* ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு மைல் கணக்கு.

| ஊர் | கோயில் மூலவர் | மானஸ்தம்பம், பலி பீடம் எது உள்ளது | ஜைனர் வீடுகளின் எண்ணிக்கை | மைல் |
|---|---|---|---|---|
| பெருமண்டூர் | 2 கோயில்கள் உள்ளன. தாமிர பிம்பங்கள் நிறைய உள்ளன, தேவி கோயில் உள்ளது. நிர்மல சாகர் பாதம் குளக்கரையில் உள்ளது. | மானஸ்தம்பம் பலி பீடம் | 70 | 8 |
| விழுக்கம் | ஆதிநாதர், குளக்கரையில் குணசாகரர் பாதம் உள்ளது. | மானஸ்தம்பம், பலி பீடம் | 50 | 5 |
| இளமங்கலம் | அனந்தநாதர் | பலிபீடம் | 15 | 1 |
| வெள்ளிமேடு பேட்டை | அனந்தநாதர், பத்மாவதி கோயிலும் உள்ளது. | மானஸ்தம்பம், பலி பீடம் | 30 | 5 |
| ஏதாநெமிலி | நேமிநாதர் | பலிபீடம் | 25 | 3 |
| மேல் அத்திபாக்கம் | 2 கோயில்கள்; அனந்தநாதர் வர்த்தமானர், உலோக பிம்பங்கள் நிறைய உள்ளன. | மானஸதம்பம், பலி பீடம் | 30 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| வீரணமூர் | ஆதிநாதர் | மானஸ்தம்பம், பலி பீடம் | 35 | 2 |
| அகலூர் | ஆதிநாதர் | மானஸ்தம்பம், பலி பீடம் | 35 | 3 |
| தொண்டூர் மலையில் பெரியகுகைஉள்ளது: | பாரிஸ்வ நாதர் திருமேனியும் முனி படுக்கைகளும் உள்ளன. | ——— | — | 3 |
| தொண்டூர் | வர்த்தமானர் | பலிபீடம் | 20 | 1 |
| விடால்குகை மண்டபம் | கல்வெட்டுகள் உள்ளன. கனகவீர குரத்தியார் 500 மாணவிகள் கொண்ட பாடசாலை நடத்தினார். | ——— | — | 2 |
| சித்தருகாவூர் | ஆதிநாதர் | ,, | 4 | 3 |
| சோலை அருகாவூர் | வர்த்தமானர் | ,, | 30 | 4 |
| குளத்தூர் | வர்த்தமானர் | ,, | 12 | 1 |
| தென்னாத்தூர் | வர்த்தமானர் | ,, | 30 | 1 |
| ஜெங்கம்பூண்டி | ——— | ——— | 7 | 1 |

| ஊர் | கோயில் மூலவர் | மானஸ்தம்பம், பலி பீடம் எது உள்ளது | ஜைனர் வீடுகளின் எண்ணிக்கை | மைல் |
|---|---|---|---|---|
| பெரிய கொரக் கோட்டை | ஆதிநாதர், உலோக பிம்பங்கள் நிறைய உள்ளன. முனிவர் பாதம் உள்ளது. | மானஸ்தம்பம், பலி பீடம் | 50 | 3 |
| கூனம்பாடி | மல்லிநாதர், உலோக பிம்பங்கள் நிறைய உள்ளன. | பலிபீடம் | 25 | 2 |
| பொன்னூர் | ஆதிநாதர், தர்மதேவிகோயில், பிம்பங்கள் நிறைய உள்ளன. பத்மாவதி கோயில் உள்ளது. | மானஸ்தம்பம், பலி பீடம் | 75 | 5 |
| இளங்காடு | நேமிநாதர், சுவாமிகள் நிறைய உள்ளன. | பலிபீடம் | 20 | 1 |
| கீழ் சாத்தமங்களம் | சந்திர பிரபநாதர், மற்ற சுவாமிகள் நிறைய உள்ளன. இங்கு ஆசாரிய சங்கம் இருந்ததாக கல்வெட்டு உள்ளது. | மானஸ்தம்பம், பலி பீடம் | 60 | 2 |
| தென்னார் | ஆதிநாதர் | பலிபீடம் | 6 | 8 |

| | | | | |
|---|---|---|---|---|
| கூடலூர் | குந்துநாதர் | மானஸ்தம்பம் பலிபீடம் | 25 | 2 |
| முதலூர் | ஆதிநாதர் | ,, | 40 | 5 |
| நெல்லூர் | ஆதிநாதர், சமோசரண ஆலயம், தேவி கோயில் ஆகியவை உள்ளன. | ,, | 45 | 2 |
| எறமலூர் | கோவில் இல்லை. வர்த்தமான சுவாமி உள்ளது. | ——— | 5 | ½ |
| தெல்லியாங்குளம் | நேமிநாதர், பார்சுநாதர், நேமிநாதர், சித்ர வரலாறு மற்றும் சுவாமிகள் நிறைய உள்ளன. | பலிபீடம் | 35 | 3 |
| வில்லிவலம் | வர்த்தமானர் | ,, | 25 | 1½ |
| பிருதூர் | ஆதிநாதர், சுவாமிகள் நிறைய உள்ளன. | மானஸ்தம்பம் பலிபீடம் | 80 | 6 |
| வந்தவாசி தாலுக்கா | வர்த்தமானர் | ——— | 5 | 1 |
| வெண்குன்றம் | பாரிஸ்வநாதர், சுவாமிகள் நிறைய உள்ளன. | பலிபீடம் | 30 | 1½ |

| ஊர் | கோயில் மூலவர் | மானஸ்தம்பம், பலி பீடம் எது உள்ளது | ஜைனர் வீடுகளின் எண்ணிக்கை | மைல் |
|---|---|---|---|---|
| சேந்தமங்கலம் | பார்சுவநாதர் | பலிபிடம் | 17 | 3 |
| குந்தகுந்தர் மலே | ஆதிநாதர், பாகுபலி, பார்சுநாதர், வர்த்தமானர் ஆகிய பிம்பங்கள் உள்ளன. | கீர்த்தி ஸ்தம்பம் | — | 2 |
| எறும்பூர் | ஆதிநாதர் மற்றும் பிம்பங்கள் நிறைய உள்ளன. | பலிபீடம் | 40 | 2 |
| ஆயிலவாடி | வர்த்தமான சுவாமி | ,, | 20 | ½ |
| நாவல் | வாசு பூஜ்யநாதர் | ,, | 35 | 6 |
| கோவிலாம் பூண்டி | வர்த்தமானர் | ,, | — | 7 |
| மேலப்பந்தல் | ஆதிநாதர் | ,, | 30 | 1½ |
| வாழப் பந்தல் | வர்த்தமானர் | ,, | 7 | 3 |
| சத்திய விஜயநகரம் | வீட்டில் தாமிர பிம்பங்கள் | ——— | 6 | 7 |

| | | | | |
|---|---|---|---|---|
| நேத்ரபாக்கம் | இடிந்த கோயில், நேமிநாதர் | பலிபீடம் | — | [illegible] |
| ஆரணி பூண்டி | பொன்னிநாதர், பார்சுநாதர் கோயில்கள். | மானஸ்தம்பம், பலி பீடம் | — | 4 |
| சேஹூர் | ஆதிநாதர், பிம்பங்கள் நிறைய உள்ளன. | பலிபீடம் | 60 | 2 |
| ஆரணி | ஆதிநாதர், பிம்பங்கள் நிறைய உள்ளன. இங்கு ஆஷ்டானிகம் 8 நாள் தங்கினோம். | மானஸ்தம்பம், பலி பீடம் | 45 | 3 |
| சதுப்பேரி பாளையம் | ஆதிநாதர் | பலிபீடம் | 9 | 6 |
| திருமலை | நேமிநாதர் 17 அடி உயரம், பார்சுநாதர் பெரிய கோயில் பெரிய குகை, பாகுபலி, வர்த்த மானர், கூஷ்மாண்டி நீர்சுனை, கல்வெட்டு, விரஷபசேனர், வர தத்தர். ஸமந்த பத்ரர் பாதம் ஆகியவை உள்ளன. | ,, | 8 | 4 |

இங்கு குந்து சாகர சுல்லக்குக்கு முநிதீக்ஷை நடந்தது. இவர் கன்னட தேசத்தில் ஹுக்கேரி தாலுக்கா விழுவொளி கிராமத்தைச் சேர்ந்தவர். தந்தை பீமப்பா, தாய் பைநௌவ்வா ஆவர். பீமப்பாவுக்குப் 7 பிள்ளைகள். 1 பெண்; குந்துஸாகரருக்கு தந்தை வைத்த பேர் சாத்துகொண்டா. இவர் விவசாயம் செய்தார். இவருக்கு கல்யாணம் நடந்து ஒரு வருஷம் கழித்து வீரசாகர ஆசாரியரிடம் சுல்லக் தீக்ஷை எடுத்துக் கொண்டார். பின்னர் குந்து ஸாகரராகிய இவர் நிர்மல ஸாகர குருவிடம் திருமலையில் முனி தீட்சை எடுத்துக்கொண்டார். இவருக்கு ஸமந்த பத்ரஸாகரர் என மறுபெயர் சூட்டப்பட்டது.

| ஊர் | கோயில் மூலவர் | மானஸ்தம்பம், பலிபீடம் எது உள்ளது | ஜைனர் வீடுகளின் எண்ணிக்கை | மைல் |
|---|---|---|---|---|
| பரிகல்பட்டு | ——— | ——— | 10 | 10 |
| ஓதலவாடி | ஆதிநாதர், சுவாமிகள் நிறைய உள்ளன. | பலிபீடம் | 55 | 8 |
| தச்சூர் | ,, | ,, | 65 | 8 |
| கொழப்பலூர் | ,, | ,, | 70 | 5 |
| பெரணமல்லூர் | ,, | ,, | 30 | 6 |
| நாவல் | வாசு பூஜ்யநாதர் | ,, | 30 | 6 |
| வெள்ளை | ஆதிநாதர் | ,, | 7 | 4 |
| திருவத்திபுரம் செய்யார் | ——— | ——— | 5 | 4 |
| பெரியவேளிய நெல்லூர் | ஆதிநாதர் | பலிபீடம் | 20 | 6 |

| | | | | |
|---|---|---|---|---|
| கரந்தை | ஆதிநாதர், குந்துநாதர், வர்த்தமானர், பிரம்மதேவர், தர்மதேவி, அகளங்கர் பாதம் ஆகியவை உள்ளன. இங்கு ஆஷ்டானிகம் 10 நாள் உற்சவம் நடைபெறுகிறது. | துஜஸ்தம்பம், பலி பீடம் | 80 | 9 |
| திருப்பறம்பூர் | புஷ்பதந்த நாதர், தர்மசாகரர் சுதர்மசாகரர் பாதம் ஆகியவை உள்ளன. | மானஸ்தம்பம், பலி பீடம் | 40 | 1 பர் லாங் |
| வெண்பாக்கம் | மகாவீரர் உலோக பிம்பங்கள் நிறைய உள்ளன. தேவி கோயில் உள்ளது. | பலிபீடம் | 40 | 2 |
| திருப்பருத்திகுன்றம் | திரைலோக்கிய நாதர், மகாவீரர், பார்சுவநாதர், வாசுபூஜ்யர், தேவி கோயில், வாமன முனிவர், அர்ககீர்த்தி வாமனர், சந்திரகீர்த்தி வாமனர். புஷ்பதந்த வாமனர், மல்லிசேண வாமனர் ஆகியவர்களின் பாதங்கள் உள்ளன. சமந்தபத்ர குரு பாடசாலை நடந்தினர். வாமன முனி மேரு மந்தர புராணம் எழுதினர். கல்வெட்டுகள் நிறைய உள்ளன. | துஜஸ்தம்பம், பலி பீடம் | 8<br>2 | 7 |
| ஆர்பாக்கம் | ஆதிபட்டாரகர் | மானஸ்தம்பம் துஜஸ்தம்பம் | 2 | 8 |

## தங்கிய ஊர்கள், கோயில், பலிபீடம், ஜைனர் வீடுகள், மைல்கள்

வாலாஜாபாத் டவுன் மிஸ்ரிலால் வீட்டில் தங்கினோம். 10 சேட் வீடுகள். 6 மைல். குண்ணம், எத்துராஜி கர்ணம் வீட்டில் தங்கினோம்; 6 மைல். திருமங்கலம், ஜவார் நாயுடு வீட்டில் தங்கினோம்; 5 மைல். ஸ்ரீபெரும்புதூர், சேட் வீட்டில் தங்கினோம்; 4 சேட் வீடுகள். 6 மைல் கீழ் வில்லிவாக்கம், ஆரம்ப பாடசாலையில் தங்கினோம்; 5 மைல். அண்ணுநகர், ஆரணி ஸ்ரீபால் வீட்டில் தங்கினோம்; 1 ஜைனர் வீடு 6 மைல்.

சென்னை, சந்திரப்ரப பகவான் சேட் வீடுகள் நிறைய உள்ளன. 60 ஜைனர் வீடுகள், 4½ மைல்.

11-4-76 அன்று முனி சங்கத்தை வரவேற்று, விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

12-4-76 அன்று மகாவீர ஜெயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாலை ஜைன் பவனில் முன்னாள் ஜனாதிபதி வி. வி கிரி அவர்கள் மகாவீர ஜெயந்தியைப் பற்றி சிறப்பாகப் பேசி ஸ்ரீ நிர்மல ஸாகர முனிவரிடம் ஆசி பெற்று சென்றுர். 20 நாள் ஜைன்பவனில் தங்கி இருந்தோம். 23 நாள் ஜைன் ஹைஸ்கூலில் தங்கி இருந்தோம். 19 நாள் தேராபந்தி பவனில் தங்கி இருந்தோம். ஜுகராஜ் கல்யாண மண்டபத்தில் வர்தமான ஸாகர், ஸமந்த பத்ரஸாகர் ஆகியவர்களுக்கு கேசலோசம் நடந்தது. 15 நாள் சந்திர ப்ரப சுவாமி ஆலயத்தில் தங்கி இருந்தோம்.

10-7-76 அன்று கச்சுவாடியில் சாதுர் மாச விழா சிறப்பாக நடந்தது. சாதுர் மாச கமிட்டி தலைவர் சேட்

கன்னியாலால், உபதலைவர் அனந்த பத்மநாப ஜெயின், செயலாளர் சேட் சாந்திலால் ஜெயின் ஆவர். சாதுர் மாசத்தின் போது திருவறம் போதிக்கப்பட்டது. பெரு வாரியான மக்கள் விரதம் எடுத்தனர்.

2-10-76 அன்று தென்னுற்காட்டைச் சேர்ந்த திண்டி வனம் தாலுக்கா, பெரமண்டூர் கிராமத்தில் பிறந்த அஜித குமாருக்கு சுல்லக் தீட்சை நடைபெற்றது. மறுபெயர் அஜித ஸாகரர் என சூட்டப்பட்டது. இவர் தமிழ் கன்னடம், ஹிந்தி படித்தவர். திருமணம் செய்து கொள்ளாமல் தீக்ஷை எடுத்து கொண்டார்.

9-11-76 அன்று சாதுர் மாசம் முடிந்ததும் கச்சவாடியிலிருந்து புறப்பட்டு சந்திரப்ரப சுவாமியை தரிசனம் செய்துகொண்டு தாதாவாடி சென்று ஒரு மாதம் தங்கினோம்.

11-12-76 அன்று தமிழ்நாடு கவர்னர் திரு. மோகன் லால் சுகாதியா அவர்கள் தர்ம சக்கரத்தைத் துவக்கி வைத்தார். பகவான் மகாவீரரைப் பற்றி சிறப்பாகப் பேசினார். ஸ்ரீ ஆசார்ய நிர்மல ஸாகர முனிவரிடம் ஆசீர்வாதம் பெற்று சென்றார். இங்கிருந்து 4-12-76 அன்று சங்கம் புறப்பட்டது சங்கபதி அனந்த பத்மநாப ஜெயின். சங்கம் சென்ற மார்க்கத்தின் விவரமாவது :

## தங்கிய ஊர்கள், கோயில் மூலவர்கள் மானஸ்தாபம் பலிபீடங்கள், ஜைனர் வீடுகள், மைல்கள்

கேசர்வாடி (புழல்), ஆதிநாதர், பார்சுநாதர், பலிபீடம், 1 வாத்தியார் வீடு, சேட் வீடுகள் உள்ளன 7 மைல்.

அம்பத்தூர், கல்யாண மண்டபத்தில் தங்கினோம். சேட் வீடுகள் உள்ளன 6 மைல்.

ஆவலவாடி, கல்யாண மண்டபத்தில் தங்கினோம். இங்கு சேட் வீடுகள் உள்ளன. 6 மைல்.

பட்டாபிராம், சேட் வீட்டில் தங்கினோம். சேட் வீடுகள் உள்ளன. 5 மைல்.

தின்னனூர், சேட் வீட்டில் தங்கினோம். சேட் வீடுகள் உள்ளன. 6 மைல்.

செவ்வாபேட்டை-சத்திரத்தில் தங்கினோம். 5½ மைல்.

திருவள்ளூர்-மோதிலால் சேட் வீட்டில் தங்கினோம். சேட் வீடுகள் உள்ளன 6 மைல்.

பட்ர பெரும்புதூர், நெல் மிஷினில் தங்கினோம். 7 மைல்.

கனகம்மா சத்திரம்-சேட் வீட்டில் தங்கினோம் சேட் வீடுகள் உள்ளன. 6 மைல்.

ஆற்காடு-குப்பம் அனுமந்த சாமி ஆஸ்ரமத்தில் தங்கினோம். 6 மைல்.

அருங்குளம்-தர்மநாத பகவான், பலிபீடம், 1 வாத்தியார் வீடு. 5 மைல்.

திருத்தணி-சைவர் சத்திரத்தில் தங்கினோம் சேட் வீடுகள் உள்ளன. 7 மைல்.

அரக்கோணம்-கல்யாண மண்டபத்தில் தங்கினோம் சேட் வீடுகள் உள்ளன. 6 மைல்.

பரமேஸ்வர மங்கலம்-ஆரம்ப பாடசாலையில் தங்கினோம் 6½ மைல்.

ஊவேரி சத்திரம்-தனியார் சத்திரத்தில் தங்கினோம். 6 மைல்.

காஞ்சிபுரம் வர்த்தமான-பகவான், சேட்வீடுகள் உள்ளன. 40 ஜைனர் வீடுகள் உள்ளன. 7 மைல்.

திருப்பருத்திகுன்றம்-திரைலோக்ய நாதபகவான் துஜ ஸ்தம்பம், பலிபீடம். ஜைனர் வீடுகள் உள்ளன. 2½ மைல்.

அய்யங்கார்குளம்-கலெக்டர் பங்களாவில் தங்கினோம். 7 மைல்.

வெண்பாக்கம்-மகாவீரபகவான்,பலிபீடம். 40 ஜைனர் வீடுகள். 7 மைல்.

திருப்பறம்பூர்-புஷ்பதந்தநாதர், மானஸ்தம்பம் பலி பீடம். 40 ஜைனர் வீடுகள். 2½ மைல்.

கரந்தை-குந்துநாதர், ஆதிநாதர், மகாவீரர், பாகு பலி, தேவி கோயில், அகளங்கர் பாதம் ஆகியவை உள்ளன, துஜஸ்தம்பம், பலிபீடம். 35 ஜைனர் வீடுகள் 1 பர்லாங்.

குன்னத்தூர்-ஆரம்ப பாடசாலையில் தங்கினோம். 6 மைல்.

செய்யார்-வெள்ளை மணியகாரர் வீட்டில் தங்கினோம். 5 ஜைனர் வீடுகள். சேட் வீடுகள் உள்ளன. 5 மைல்.

புரிசை-ஹைஸ்கூலில் தங்கினோம். 6 மைல்

வந்தவாசி-மகாவீர பகவான், சேட் வீடுகளும். ஜைனர் வீடுகளும் உள்ளன. 7 மைல்.

நீலகிரி மலை-(பொன்னூர் மலை) சத்திரம், ஆதிநாதர், மகாவீரர், பாரிஸ்வநாதர், மலைமேல் குந்தகுந்தர் பாதம் இரண்டு குகை, 2 சத்திரம். 5 மைல்.

சாத்தமங்கலம்-சந்திரப்ரபநாதர், மானஸ்தம்பம் பலிபீடம் 60 ஜைனர் வீடுகள் 5 மைல்.

தெள்ளார்-மகாவீர பகவான், பலிபீடம் 7 ஜைனர் வீடுகள். 8 மைல்.

வெள்ளிமேடு பேட்டை-அனந்தநாத பகவான், பத்மாவதி தேவி கோயில் ஆகியவை. மானஸ்தம்பம், பலிபீடம் 35 ஜைனர் வீடுகள். 7 மைல்.

திண்டிவனம்-சந்திர ப்ரபநாத பகவான், சேட் வீடுகளும் 100 ஜைனர் வீடுகளும் உள்ளன. 8 மைல்.

வேம்பூண்டி-நேமிநாத பகவான், பலிபீடம் 11 ஜைனர் வீடுகள். 4 மைல்.

பெரமண்டூர்-சந்திரப்ரபநாத பகவான், ஆதிநாத பகவான், 2 கோயில்; மானஸ்தம்பம்; பலிபீடம், 60 ஜைனர் வீடுகள். 3 மைல்.

ஆல கிராமம்-ஆதிநாத பகவான், ஆஷாட ஆஷ்டானிகத்தில் 10 தினம் உற்சவம் நடைபெறுகிறது. துஜஸ்தம்பம், பலிபீடம். 40 ஜைனர் வீடுகள் 4 மைல்.

வயலாம்பூர்-ஆதிநாத பகவான், பலிபீடம் 6 ஜைனர் வீடுகள். 7 மைல்.

எண்ணாயிரம் மலை - பாரிஸ்வநாதர், குகை, முனிவர் படுக்கைகள். 2 மைல்.

பேரணி-பார்சுநாதர், பலிபீடம். 25 ஜைனர் வீடுகள். 6 மைல்.

செண்டியம்பாக்கம்-பார்சுநாதர், பலிபீடம். 7 ஜைனர் வீடுகள். 1 மைல்.

நெடிமோழியனூர்-பார்சுநாதர், பலிபீடம். 11 ஜைனர் வீடுகள். 1½ மைல்.

வீடூர்-ஆதிநாதர், ஸ்ரேயாம்ஸ நாதர், சுவாமிகள் நிறைய உள்ளன. மானஸ்தம்பம், பலிபீடம் 40 ஜைனர் வீடுகள். 8 மைல்.

கள்ள குளத்தூர்-ஆதிநாதர், நிர்வாண ஸாகர முனி பாதம் உள்ளது. மானஸ்தம்பம், பலிபீடம். 30 ஜைனர் வீடுகள். 7 மைல்.

எடையாளம்-ஆதிநாதர், மல்லிசேனர், விமலசேனர், வாமனசேனர் ஆகிய முனிவர்கள் பாதங்கள் உள்ளன. செயற்கை குகை உள்ளது. மானஸ்தம்பம், பலிபீடம். 10 ஜைனர் வீடுகள். 3 மைல்.

பேராவூர்-ஆதிநாதர், வர்த்தமானர், சுவாமிகள் நிறைய உள்ளன. மானஸ்தம்பம், பலிபீடம். 35 ஜைனர் வீடுகள். 8 மைல்.

உப்புவேலூர்-ஆதிநாத பகவான், சுவாமிகள் நிறைய உள்ளன. மானஸ்தம்பம், பலிபீடம். 40 ஜைனர் வீடுகள். 5 மைல்.

கிளியனூர்-ரெட்டியார் வீட்டில் தங்கினோம். 2 ஜைனர் வீடுகள். 5 மைல்.

சிற்றம்பலம்—கூட்டுரோடு மகாத்மா காந்தி ஆஸ்டலில் தங்கினோம். 8 மைல்.

பாண்டிச்சேரி-தக்ஷிணாமூர்த்தி கல்யாண மண்டபத்தில் தங்கினோம். 40 சேட் வீடுகள். 8 மைல்.

அரியாங்குப்பம்-முதலியார் கல்யாண மண்டபத்தில் தங்கினோம். 4 மைல்.

காட்டுகுப்பம்-சேட் துணி பேக்டரியில் தங்கினோம். 8 மைல்.

கடலூர் N T. தண்டபாணி செட்டியார் கல்யாண மண்டபத்தில் தங்கினோம். 20 சேட் வீடுகள். 4 மைல்.

கடலூர் O.T. ஆதிநாத பகவான், மகாவீர பகவான், சுவாமிகள் நிறைய உள்ளன. பலிபீடம். 7 ஜைனர் வீடுகள் 4 மைல்.

கொண்டையாங்குப்பம் நெல் மிஷினில் தங்கினோம் 6 மைல்.

புதுச் சத்திரத்தில் தங்கினோம். 7 மைல்.

ஆதிவிராக நல்லூர்-ஆரம்ப பாடசாலையில் தங்கினோம் 5 மைல்.

மணலூர்-சேட் பேக்டரியில் தங்கினோம். 7 மைல்.

சிதம்பரம்-தண்டபாணி முதலியார் மெத்தை வீட்டில் தங்கினோம். 15 சேட் வீடுகள். 2 மைல்.

கொள்ளிடம்-ஆற்றங்கரை பூங்காவனத்தில் பங்களாவில் தங்கினோம். 5 மைல்.

சீர்காழி-சேட் தியேட்டரில் முன் அறையில் தங்கினோம். 11 ஜைனர் விடுகள். 9 மைல்.

வைதீஸ்வரன் கோயில்-சத்திரத்தில் தங்கினோம் 4½ மைல்.

மாயவரம்-கல்யாண மண்டபத்தில் தங்கினோம். 16 ஜைனர் வீடுகள். 11 மைல்.

குத்தாலம்-கல்யாண மண்டபத்தில் தங்கினோம். 6 மைல்.

ஆடுதுரை-மாணவர் ஆஸ்டலில் தங்கினோம். 9 மைல்.

அம்மாசத்திரம் முதலியார் வீட்டில் தங்கினோம். 5 மைல்.

கும்பகோணம்-சந்திர ப்ரபநாதர் ஆலயம், பலிபீடம். 11 ஜைனர் வீடுகள். 15 சேட் வீடுகள். ½ மைல்.

நாச்சியார் கோவில்-ஜைன் வாடகை வீட்டில் தங்கினோம். 5 மைல்.

குப்ப சமுத்திரம்-ஜைன் வீட்டில் தங்கினோம். 1 ஜைனர் வீடு 5 மைல்.

மஞ்சக்குடி-தயாநந்த சுவாமி ஹைஸ்கூலில் தங்கினோம். 6 மைல்.

## தங்கிய ஊர்கள்

*தீபங்குடி:— ஆதிநாதர் பகவான் (தீபநாயகர்)* **பலி** *பீடம், 11* **ஜைனர் வீடுகள்,** *8 மைல்.* **கொரடாச்சேரி-** *பஞ்சாயத்து அலுவலகத்தில் தங்கினோம். 8 மைல்.* **மன்னார்குடி** *- மல்லிநாத பகவான் ஆலயம், பலிபீடம், 25.* **ஜைனர் வீடுகள்.** *11* **மைல். வடுவூர் - உதவி பதிவாளர்** *அலுவலகத்தில் தங்கினோம் 8 மைல்.* **வாண்டையார்-** *இருப்பு - பாடசாலையில் தங்கினோம். 7 மைல்* **தஞ்சாவூர்-** **ஆதிநாத பகவான் ஆலயம்,** *பலிபீடம் 17* **ஜைனர் வீடுகள்,** *10* **மைல். கோட்டை** *- சக்ரவர்த்தி* **ஜைன் வீட்டில்** *தங்கினோம். 5* **ஜைனர்கள் வீடுகள்,** *1* **மைல். காட்டவ**

ராயன்பட்டி - ஒரு விவசாயி தோப்பில் தங்கினோம். 16 மைல். அடுத்து மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகம், ஆதாகோட்டையில் தங்கினோம். 10 மைல். மாதங்குடி - குடியானவர் கட்டிடத்தில் தங்கினோம், 6 மைல். முள்ளூர் - கோனூர் நெல் மிஷினில் தங்கினோம் 7 மைல். புளிவலவனூர் - கூட்ரோட்டில் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் தங்கினோம். 12 மைல். பிள்ளை மங்கலம் செட்டியார் சத்திரத்தில் தங்கினோம். 9 மைல். திருப்பத்தூர்-கோவில் சத்திரத்தில் தங்கினோம். 8 மைல். எஸ். எஸ். கோட்டை (சத்ருசங்காரக்கோட்டை)-அன்ன சத்திரத்தில் தங்கினோம். 10 மைல். கீழ் வளைவுக்கு பக்கத்து ரோட்டிலிருந்து 1 பர்லாங்கில் பாண்டவர் மலை உள்ளது. (ஐவர் மலை)யில் தங்கினோம். இங்கு சாந்தி நாதர், குந்துநாதர், அரநாதர் உயரத்தில் உள்ளனர். விரஷபநாதர், மகாவீரர், பார்சுநாதர், பாகுபலி, சீதளநாதர் சிலைகள் செதுக்கப்பட்டு உள்ளன. பெரிய குகை ஒன்றும், முனிவர் படுக்கைகளும் அதிகம். கீழ் மலையில் குகைகள் ஒன்றும் முனிபடுக்கைகளும அதிகம் உள்ளன. 8 மைல். தெற்கு தெரு-கிராம அரசினர் பாடசாலையில் தங்கினோம். 10 மைல். மதுரை மாவட்டம் - காந்தி மியூசியத்தில் தங்கினோம், சேட் வீடுகள் உள்ளன. சேட் கோவில் உள்ளது. 10 மைல். 4 நாள் தங்கினோம். மதுரை - ஒரு சேட் வீட்டில் தங்கினோம், 1 மைல். திருப்பரங்குன்றம்-கல்யாண சத்திரத்தில் தங்கினோம், 7 மைல். திருமங்கலம்-அரசினர் பங்களாவில் தங்கினோம், 8 மைல். கள்ளிக்குடி - எவர்சில்வர் பேக்டரியில் தங்கினோம், 9 மைல். விருதுநகர்-ராமசாமி செட்டியார் சத்திரத்தில் தங்கினோம், 10 மைல். துலுக்கப்பட்டி - பாடசாலையில் தங்கினோம், 10 மைல். சாத்தூர் - ராமசாமி நாயுடு ஞாபகார்த்த கல்லூரியில் தங்கினோம், 11 மைல். கோவில் பட்டி - தீப்பெட்டி தொழிற்சாலையில் தங்கினோம், 12 மைல்.

இடைச் செவல் - கிராம பாடசாலையில் தங்கினோம், 8 மைல். கயத்தார் - கிராம பாடசாலையில் தங்கினோம், 10 மைல். சங்கர் நகர் - அஜந்தா பிஸ்கட் பேக்டரியில் தங்கினோம், 14 மைல்.

## திருநெல்வேலி மாவட்டம்

ஜெயின் கோவில் பக்கத்தில் தங்கினோம், 5 மைல். சேட் வீடுகள் உள்ளன. மூன்றையடுப்பு - பிராமணர் வீட்டில் தங்கினோம், 14 மைல். நான்கு நேரி - பொதுப் பணித்துறையாளர் பங்களாவில் தங்கினோம், 10 மைல். வள்ளியூர் - ஹைஸ்கூலில் தங்கினோம், 8 மைல்; வழுவூர்- ஆரம்ப பாடசாலையில் தங்கினோம், 12 மைல்.

கன்னியாகுமரி மாவட்டம் - லாட்ஜில் தங்கினோம், இங்கு ஸ்ரீ பாத பாறையில் பாதம் உள்ளது, இது சமண முனிவர் பாதம், 10 மைல். நாகர்கோவில்-அரசினர் உயர் நிலைப்பள்ளியில் தங்கினோம். நாகராஜர் கோவிலில்- பாரீஸ்வநாதர், மகாவீரர், பத்மாவதி தேவி ஆகியவை கல்கம்பங்களில் உள்ளன. இங்கு சமண பள்ளி நடந்தது என கல்வெட்டு கூறுகிறது. 12 மைல்.

புலியூர்குறிச்சி, அரசினர் பங்களாவில் தங்கினோம். 12 மைல். குழித்துறை - சாஸ்தா கோவில் சத்திரத்தில் தங்கினோம், 12 மைல். சிதரால் மலை - (திருசாரணத்து மலை)யில் தங்கினோம். இங்கு ஒரு பாறையில் 26 சுவாமிகள் உள்ளன. பெரிய கோவிலில் பாரீஸ்வநாதர், மகாவீரர், பத்மாவதி தேவி, உள்ளன. ஒரு கல்கம்பத்தில் பாரீஸ்வாநாதசுவாமி உள்ளது. பலி பீடம் உள்ளது. கல்வெட்டு இருக்கிறது. தர்மதேவி உள்ளது, 6 மைல். 2 நாள் தங்கினோம். இங்கு ஒரு கல்லூரி நடந்ததாக கல்வெட்டு கூறுகிறது. குழித்துறை- சாஸ்தா கோவில் சத்திரத்தில் தங்கினோம், 6 மைல். புளியூர்குறிச்சி - அரசினர் பங்களாவில் தங்கினோம், 12

மைல் நாகர்கோவில் - அரசினர் உயர்நிலைப்பள்ளியில் தங்கினோம், *12* மைல்; ஆரல்வாய்மொழி. அரசினர் பங்களாவில் தங்கினோம், *10* மைல் வள்ளியூர்-அரசினர் பங்களாவில் தங்கினோம், *11* மைல். நான்கு நேரி-இந்து கோயில் சத்திரத்தில் தங்கினோம், *10* மைல் மூன்றடுப்பு-பிராமணர் வீட்டில் தங்கினோம், *9* மைல்.

பாளையங்கோட்டை - ஒரு வாடகை வீட்டில் தங்கினோம் *1* ஜைன் வீடு உள்ளது. *10* மைல். கங்கைகொண்டான் - பிராமணர் வீட்டில் தங்கினோம். *15* மைல். செட்டிகுறிச்சி - இந்து நாட்டார் பள்ளியில் தங்கினோம். *15* மைல். கழுகுமலை - மதுரை செட்டியார் சத்திரத்தில் னோம். *8* மைல்; இரண்டு நாள் கழித்து முளகாபரதேசி மண்டபத்தில் *6* மாதம் தங்கினோம்.

*30-6-1977* ஆஷாட சுக்ல சதுர்த்தசி வருஷா யோகம், சாதுர் மாச நெறிமுறை, பகவானுக்குப் பூஜை செய்து பஞ்சவர்ண கொடியை பஞ்சாயத்து தலைவர் கணபதி ஏற்றி வைத்தார்.

சாதுர் மாஸ கமிட்டி தலைவர் பெங்களூர் M. C. அனந்தராஜய்யா திருநெல்வேலி, மதுரை, சேலம், பாண்டிச்சேரி, சென்னை, தமிழ்நாடு ஆகிய இடத்து சிராவகர்களும் கலந்துகொண்டு ஒத்துழைத்தனர். ஆனால் முழு பொறுப்பையும் தலைவர் ஏற்று நடத்தினார். ஸ்ரீ ஆசாரிய நிர்மல சாகர முனிமகராஜ் தினமும் தர்ம உபதேசம் செய்தார். ஜைனரல்லாதவர்கள் பெருவாரியாக வந்து தரிசித்து தர்மம் கேட்டு புலால், கள், தேன், இரவு உணவு ஆகியவை நீக்குதல், தண்ணீர் வடிகட்டி சாப்பிடுதல் பீடி, சிகரெட் குடிக்காதிருத்தல் ஆகிய விரதங்களை ஏற்று சென்றனர்.

## வாய்மையே வெல்லும்

கழுகுமலை - (சமணப் பள்ளி) 11. கல்வெட்டுகள், சமணச் சிற்பங்களை யார் யார் செதுக்கச் செய்தவர்கள் என்பதை இங்குள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. மலையில் சிறப்பாக வழிபாடு நடைபெற்ற சமணர் தெய்வத்துக்கு "அரைமலை ஆழ்வார்'' என்றும் மலைமேல் திருமலை ஆழ்வார் என்றும், திருமலை தேவர் என்றும் பெயர் வழங்கிற்று. இதன் அருகில் பலர் சமண உருவங்களைச் செய்திருக்கிறார்கள். கோட்டாறு, மிழலூர், வெண்பைக்குடி முதலிய 32 க்கும் மேற்பட்ட ஊர்களில் வாழ்ந்த சமணப் பெரியார்கள், இங்கு வந்து 162-க்கும் மேற்பட்ட சமண திருவுருவங்களைச் செய்திருக்கிறார்கள். இறந்த குறவர், சீடர், தந்தை, தாய், மகன், மகள் முதலியவர்களின் நினைவாக இவ்வுருவங்கள் செய்யப்பட்டுள்ளன. சமணத் துறவிகள் குறவர் என்றும் குறவடிகள் என்றும் அழைக்கப்பட்டனர். பெண் துறவிகள் குறத்தியர் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்களின் சீடர்கள் ஆணாக இருப்பின் மாணாக்கர் என்றும், பெண்ணாக இருப்பின் மாணாத்தியர் என்றும் அழைக்கப்பட்டனர். எட்டி, ஏனாதி, காவிதி முதலிய சிறந்த தமிழ்ப் பட்டங்களைப் பெற்றவர்கள் இச் சிற்பங்களைச் செய்வித்துள்ளனர். தச்சர், வேளாளர், குயவர், கொல்லர் முதலிய பல தொழில் புரிவோரும் இங்கு பணி புரிந்துள்ளனர். இங்கு சமண சித்தாந்தம் போதிக்கப்பட்டது. குணசாகர பட்டாரகர், அமிர்தசாகரர் என்ற சமணப் பெரியார்களும் இன்னும் பல வைராக்கியர்களும் இங்கு வாழ்ந்துள்ளனர். இச்சிற்பங்களில் சில பாண்டிய மன்னன் பராந்தக நெடுஞ்செழியன் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டவை.

தமிழ்நாடு அரசு தொல் பொருள்
ஆய்வுத்துறை.

திருநெல்வேலி ஜில்லா,

கழுகுமலையில் மூன்று கால தீர்த்தங்கரர்களின் திரு

உருவங்கள் மூன்று வரிசையாக செதுக்கப்பட்டுள்ளன. அதன் பக்கத்தில் மூன்று இடத்தில் சமண திருஉருவங்கள் உள்ளன. ஆதிநாதர் கோயில் குகையில் பாறையில் சாந்தி, குந்து, அரநாதர் திருஉருவங்கள் உள்ளன. மண்டபத்திற்கு மேலே 14 திருஉருவங்கள் இருக்கின்றன. கோவில் உள்ளே பிரம்மதேவர், பூரணை புஷ்கலை, பலி பூடம் ஆகியவை உள்ளன. மலைமேலே மகாவீர பகவான் உருவம் உள்ளது. பெரிய குகை உள்ளது. தர்ம தேவி, பத்மாவதி பாறையில் செதுக்கப்பட்டு இருக்கின்றன. வெட்டுவான் கோவில் ஒன்று இருக்கிறது. இது மகன் செய்ததாகவும் மகன் சிற்ப வேலையில் சிறந்தவனாகி விடுவான் என்று தந்தை வெட்டி விட்டதாகவும் அதனால் வெட்டுவான் கோவில் என்று அழைக்கப்பட்டதாக மக்கள் கூறுகின்றனர். உண்மையில் ஒரு பாறையை மூன்று பக்கம் வெட்டி எடுத்து நடுவில் உள்ள பாறையைக் குடைந்து கோவில் செய்யப்பட்டு இருப்பதினால் இதற்கு வெட்டுவான் கோவில் எனப் பெயர் வந்திருக்கவேண்டும் என்று சில ஆராய்ச்சி வல்லுனர் கூறுகின்றனர். இதுவும் சமணர் கோவிலாகும். இவ்விடத்தின் சிறப்பை அறிய ஒவ்வொரு ஜைன பெருமக்களும் சென்று பார்க்கவேண்டிய இடமாகும்.

ஆசாரிய நிர்மல ஸாகர சங்கம் கழுகுமலையில் சாதுர்மாஸ நெறிமுறைகளை முடித்தப்பின்னர் மேற்கொண்டு தமிழ்நாட்டில் விஜயம் செய்த இடங்களின் விவரங்களாவன :—

**1-12-77** வியாழன் அன்று கழுகுமலை பஞ்சாயத்து தலைவர் முதலாக நூற்றுக்கணக்கான கிராம பெருமக்கள் புடை சூழ வழியனுப்புவிழா நடைபெற்றது. சிறப்புமிக்க கழுகுமலையிலிருந்து சங்கம், சங்கரன் கோயில் சென்றது. மைல் 12.

சங்கரன் கோயிலிலிருந்து வீரசிகாமணி மைல் 15.

இவ்வூரிலுள்ள பாறையில் தாமரை மலர் மீது பண்டையகாலத் தவத்தோரின் பாதங்கள் பொறிக்கப் பட்டுள்ளன. பெரிய குகையும் உண்டு. வீரசிகாமணி யிலிருந்து சங்கம் இடைக்கால் என்ற ஊருக்குச் சென்றது; மைல் 8.

இடைக்காலிலிருந்து தமிழ்நாட்டின் புகழ்பெற்ற நீர்வீழ்ச்சியான குற்றாலத்திற்குச் சென்றது. இந்நீர் வீழ்ச்சியில் ஆண்கள் குளிக்கும் இடத்தில் கணதர பரமேஷ்டி சிலை உள்ளது.

அங்குள்ள கைலாசநாதர் கோயிலில் வடக்கு வாயிற் படியின் வெளியே சமணமுனிவரின் பாதங்கள் உள்ளன.

தெற்குமலை எஸ்டேட்டில் துறவிகளின் படுக்கைகள், தர்ம சக்கரம், கல்வெட்டு, பெரிய குகை ஆகியவை உள்ளன. மற்றும் நீர் ஓடையின் பக்கத்தில் சமண முனிவரின் பாதங்கள் இருக்கின்றன இங்கு ஆசாரிய நிர்மல சாகரருக்கும், வர்தமான ஸாகரருக்கும் கேசலோசம் சிறப்பாக நடைபெற்றது. குற்றாலத்தி லிருந்து சங்கம் இடைக்கால் என்ற ஊருக்குச் சென்றது. மைல் 7.

இடைக்காலிருந்து புண்ணியாபுரம் மைல் 9; புண்ணியாபுரத்திலிருந்து சிவகிரி மைல் 11; சிவகிரி யிலிருந்து இராஜபாளையம் மைல் 12; இராஜபாளையத் திலிருந்து கிருஷ்ணன் கோயில் மைல் 10; கிருஷ்ணன் கோயிலிலிருந்து அளகாபுரி மைல் 9; அளகாபுரியி லிருந்து திருமங்கலம் மைல் 10; திருமங்கலத்திலிருந்து திருப்பரங்குன்றம் மைல் 9; திருப்பரங்குன்றத்தின் மலை மேல் இரண்டு குகைகளும், முனிவர்களின் படுக்கைகளும், பாகுபலிசுவாமி, பார்ஸ்வநாதர் சிற்பங்களும் உள்ளன. மலையின் மேற்கு பக்கம் செயற்கை குகையில் சுவாமி,

சணதரர், தர்ம தேவி ஆகியவை உள்ளன. கல்வெட்டுகள் உள்ளன.

திருப்பரங்குன்றத்திலிருந்து சங்கம், புகழ் பெற்ற மதுரை நகருக்குச் சென்றது. மைல் 5. கூன்பாண்டியன் என்ற நெடுமாற மன்னன் காலத்தில் அங்கு எண்ணாயிரம் சமண முனிவர்கள் கழுகு ஏற்றப்பட்டார்கள் என்று சைவர்களின் பெரிய புராணம் கூறுகிறது. அத்தகைய இடத்திற்கு ஆசாரிய நிர்மல்ஸாகர சமண சங்கம் சென்றது என்பது வரலாற்றில் குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

மதுரையிலிருந்து சமணர் மலை மைல் 5. அம்மலையில் பெரிய குகையும், பகவான் மகாவீரர், சாந்திநாதர், குந்துநாதர், அனந்தநாதர் ஆகிய தீர்த்தங்கரர்களின் சிற்பங்களும் உள்ளன. தர்மதேவியின் சிற்பமும் உள்ளது. மலையின்மேல் பகவான் ஆதிநாதர், சாந்திநாதர், கோமடேஸ்வரர் ஆகிய திருவுருவங்கள் உள்ளன. ஒரு காலத்தில் இது சமணத் துறவிகள் வாசம் செய்த இடமாகும். நம் பண்டைய அறவோர்கள் வாழ்ந்த இப்புனிதமான இடத்தை தரிசிக்க வேண்டியது ஜைனர்களின் பொன்னான கடமையாகும் என்பதில் ஐயமில்லை.

மதுரையிலிருந்து 6 மைலிலுள்ள ஆனைமலையில் பாரீஸ்வரநாதர், பாகுபலிசுவாமி மற்றும் 5 சமண சிற்பங்கள், தர்மதேவி ஆகியவை உள்ளன. தனியாக ஒரு சமண சிற்பம் உள்ளது. பெரிய குகையொன்றும் உண்டு.

இங்கிருந்து சங்கம் கத்தம்பட்டி சென்றது. மைல் 2½. அங்குள்ள மீனாட்சிபுரம் மலையில் முனிவர் படுக்கையும், கல்வெட்டும் உள்ளன. அங்கிருந்து புறப்பட்டு மேலூர்

வழியாக 4 மைலிலுள்ள ஐவர் மலைக்குச் சென்றது. அங்கு 8 சமண சிற்பங்களும், பெரிய குகையும், ஏராளமான முனிவர் படுக்கைகளும், மலையில் முனிவர் படுக்கைகளும் உள்ளன. இவைகளைத் தரிசித்த பின்னர் சங்கம் மலம் பட்டி, ராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர், பிள்ளை மங்கலம், புலிவலம் வழியாக புதுக்கோட்டைக்கருகிலுள்ள சித்தன்னவாசலையடைந்தது.

அங்குள்ள மலையில் குடைகுகை கோயில் உள்ளே மூன்று சிற்பங்களும், வெளியே பாரீஸ்வ நாதர், மகா வீரர் சிற்பங்களும் அமர்ந்த நிலையில் முக்குடையுடன் உள்ளன. மேல் கூரையில் ஓவியங்கள் அழகாக எழுதப்பட்டுள்ளன. மலையின் மேல் பெரிய குகையும், முனிவர் படுக்கையும், கல்வெட்டுகளும் உள்ளன. இவைகள் அனைத்தும் மகேந்திர பல்லவ மன்னரால் உண்டாக்கப் பட்டதாக கல்வெட்டு சாஸனம் கூறுகிறது.

இங்கிருந்து புறப்பட்டு சங்கம் அன்னவாசல் சென்றது. அங்கு தென்னந் தோப்பில் இரண்டு சமண சிலைகள் சிறிதளவு பின்னமான நிலையில் உள்ளன. ஆனால் பெரியதாக உள்ள சிலையைத் தட்டினால் இனிய ஓசை கிளம்புகிறது. இங்கிருந்து சங்கம் நாரதமலைக்குச் சென்றது. அங்கு ஒரு குகைக் கோயிலில் இருந்த சமண சிலைகளை அகற்றிவிட்டு சிவலிங்கத்தை வைத்துள்ளனர். அங்கிருந்து ஆளுருட்டி மலைக்குச் சென்றது. அங்கு மேலே 2 சமண சிற்பங்களும், கீழே ஒரு சிற்பம் சிதைந்த நிலையிலும் உள்ளன. பெரிய குகையொன்றும் உண்டு, ஓர் இரவு சங்கம் அக்குகையில் தங்கியது. பல்லாயிரக் கணக்கான முனிவர்கள் தங்கி வாசம் செய்த குகையில் இச்சங்கத்திற்கும் தங்க சந்தர்ப்பம் கிடைத்தது பெரும் பாக்கியமாகும்.

அங்கிருந்து சங்கம் மண்டையூர் வழியாக திருச்சியை அடைந்து குஜராத்தி ஹாலில் தங்கியது. பின்னர்

கிருஷ்ணபுரம், அம்மையார்பட்டி, சேலம், ஓசூர், அத்திபெலே வழியாக 8-1-78 அன்று பெங்களூர் மாநகரிலுள்ள சிக்பேட் ஜிநாலயத்தைச் சென்றடைந்தது சில நாட்களுக்குப்பின் கன்னட நாட்டிலுள்ள மண்டையா, மைசூர், சிரவணபெள்குளா, ஆசன். ஹூப்ளி, பெல்காம் ஆகிய நகரங்களின் வழியாக பம்பாய் செல்ல திட்டமிட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் உள்ள ஜைன கிராமங்கள், கோயில்கள், மலை குகைகள் ஆகியவைகளின் விவரங்களாவன:-

## 1. சென்னை மாவட்டம்

*1.* மயிலாப்பூர்-இங்கு நேமிநாதர் ஆலயம் இருந்தது. தோமையார் கோவில் தோட்டத்தில் கிடைத்த சமணத் திருஉருவம் மயிலாப்பூர் பிஷப் வீட்டில் இருக்கிறதாம். வேறு இரண்டு சமணத் திருஉருவங்கள் சீனி வேங்கடசாமியின் நண்பர் வீட்டில் இருக்கிறதாம்.

*2.* சென்னை, *3.* செம்பாக்கம், *4.* புழல், *5.* விளாங்குடிபாக்கம், *6.* ஞாயர், *7.* மாமல்லபுரம் ஆகியவை.

## 2. செங்கற்பட்டு மாவட்டம்

*1.* உத்தரமேரூர்-இந்த ஊர் சுந்தர வரதப்ப பெருமாள் கோயிலில் ஆதிநாதர் திருஉருவம் இருக்கிறது.

*2* அனந்தமங்கலம்-ஒலக்கூர் இரயில் நிலயத்திலிருந்து *5* மைல் உள்ளது. இங்கு கற்பாறையில் சமணத் திருஉருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நடுவில் அனந்த தீர்த்தங்கரர் உருவம் உள்ளது. ஜினகிரிப் பள்ளி இருந்ததாக சாசனம் கூறுகிறது. குகை இருக்கிறது. சுற்றுபுர கிராம ஜைன பெருமக்கள் விசேஷ காலங்களில் பூஜை செய்து வருகின்றனர்.

3. பெரிய காஞ்சிபுரம்-இங்குள்ள ஒரு தோட்டத்தில் ஒரு சமண உருவம் உள்ளது. பெரிய காஞ்சிக்கு போகும் பாதையில் ஒரு சமண உருவம் உள்ளது. காமாக்ஷி அம் மன் கோவிலின் இரண்டாவது பிரகாரத்தில் சமண உரு வங்கள் இருப்பதாக கூறப்படுகிறது. யதோத்காரி பெரு மாள் கோயில் அருகில் ஒரு சமண உருவம் இருக்கிறது.

4. மாகறல்-இங்கு ஆதி பட்டாரகர் கோயில் உள் ளது. இது இப்போது சிதைந்து காணப்படுகிறது.

5 விஷார்-இங்கு சிதைந்த சமணத் திருஉருவம் காணப்படுகிறது.

6. வில்லிவாக்கம்- இவ்வூர் சென்னைக்கு அருகி லுள்ள ரயில் நிலையம். இவ்வூரின் தெருவில் அமர்ந்த நிலையில் ஒரு சமணத் திருஉருவம் இருக்கிறது.

7 சிறுவாகம், 8 ஆர்பாக்கம், 9. குண்ணத்தூர், 10. பெருநகர், 11. நரியப்புத்தூர், 12. காஞ்சிபுரம், 13. திருப்பருத்திக்குன்றம்.-காஞ்சிபுரத்திலிருந்து மேற்கில் இரண்டு மைல் தொலைவில் உள்ளது. இங்கு இரண்டு கோயில்கள் உள்ளன. 1. விரஷப தேவர் ஆலயம், 2. வர்த்தமானர் ஆலயம். இவ்விரு ஆலயங்களும் வாமனு சாரியார் மற்றும் மல்லி ஷேனுசாரியார் முயற்சியால் முதல் மகேந்திர பல்லவ மன்னரால் கட்டப்பட்டவை. இங்கு அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இங்குள்ள பகவானுக்கு திரைலோக்ய நாதர் என்று பெயர். இங்கு 17 கல்வெட்டுகள் உள்ளன. இவை 12-ம் 13-ம் நூற் ருண்டைச் சேர்ந்தவை. 14. விப்பேடு, 15 கீரைப்பாக் கம், 16. மாங்காடு. 17 அமணபாக்கம், 18. அருகத் துரை, 19 அத்தமணஞ்சேரி. 20. அம்மணபாக்கம், 21 பெரும்பாக்கம், 22. பூச்சிபாக்கம், 23. மருதம், 24. தாங்கி, 25. மாமண்டூர் ஆகியவை.

## 3. வட ஆற்காடு மாவட்டம்

1. கச்சூர்-இது காளஸ்தி ஜமீனைச் சேர்ந்தது திருவள்ளூருக்கு வடக்கே 12 மைலில் உள்ளது. கச்சூர் மாதரபாக்கம் என்பர். இங்கு சமணர் கோயில் உள்ளது.

2. காவனூர்-குடியாத்தம் தாலுக்காவிலிருந்து கிழக்கே 8 மைல். இந்த கிராமத்தில் சமணத் திருஉருவம் உள்ளது.

3. குகைநல்லூர்-குடியாத்தம் தாலுக்கா திருவலம் ரயில் நிலையத்துக்கு வடக்கே 3 மைலில் சமண உருவங்கள் உள்ளன.

4. கோழமூர் - குடியாத்தத்தி லிருந்து கிழக்கே மூன்று மைலில் விரிஞ்சிபுரம் ரயில் நிலயம், அதிலிருந்து தென்கிழக்கே 3 மைலில் சமண சிற்பங்கள் உள்ளன.

5. திருமணி-விரிஞ்சிபுரம் ரயில் நிலயத்துக்கு கிழக்கே நான்கு மைலில் சமண உருவங்கள் உள்ளன.

6. பெருங்கங்கி-வாலாஜாபேட்டைக்கு வடக்கே 9 மைல். அதன் ஏரிக்கரையிலும், கலங்கலிலும், ஒரு மரத்தடியிலும் சமணத் திருஉருவங்கள் உள்ளன.

7. நம்பாக்கம்-திருவள்ளூர் தாலுக்கா, 8. சென்னம்பட்டு-குடியாத்தம் தாலுக்கா, 9. திருவோத்தூருக்கு அருகிலுள்ள புனுவதி என்னும் கிராமத்தில் வெட்டவெளியில் 2 சமண உருவங்கள் காணப்படுகின்றன.

10. வள்ளிமலை-குடியாத்தம் தாலுக்காவில் மேல்பாடிக்கு அருகில் உள்ளது. இங்கு இயற்கை குகை, 2 சமண உருவங்கள் இருக்கின்றன. கல்வெட்டுகள் உள்ளன.

11. பஞ்சபாண்டவர் மலை:—ஆற்காடு நகரத்திற்குத் தென் மேற்கே நான்கு மைல் தொலைவில் உள்ளது இங்கு குகைகள் உள்ளன. ஒன்று இயற்கை மற்றொன்று செயற்கை. இங்கு கல் வெட்டுகளும் சிலைகளும் உள்ளன. கல் வெட்கள் 7-ம் 8-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. நீர் சுனையும் உள்ளது.

இங்கிருந்து சிறிது தூரத்திலுள்ள ஒரு மலையில் இயற்கையரன குகை ஒன்றுள்ளது. கல் வெட்டுகளும், ஜைன சிலைகளும் உள்ளன. இக்கல் வெட்டுகள் 9-ம் 10-ம் நூற்றாண்டைச் சார்ந்தவை எனக் கருதப்படுகின்றன.

## திருவண்ணாமலை தாலுக்கா

1. சோமாசபாடி, 2. மலப்பாம்பாடி, 3. காட்டுமலையனூர், 4. திருவண்ணாமலை, 5. நல்லவன்பாளையம், 6. ரெட்டியார்பாளையம், 7. பெண்ணாத்தூர், 8. சிறுகொற்கை 9. கொளத்தூர், 10. மலையனூர்.

## செங்கம் தாலுக்கா

1. செங்கம்,

## வந்தவாசி தாலுக்கா

1. வந்தவாசி, 2. சோலைஅருகாவூர், 3. புளிமாந்தாங்கல், 4. தென்னாந்தூர், 5. இலாகுளத்தூர், 6 மஞ்சப்பட்டு, 7. திருமால்பாடி, × 8. சீயமங்கலம், × 9. திருமணி, × 10. தேசூர், 11. ஜெங்கம்பூண்டி, 12. சித்தருகாவூர், 13. விடால்; 14 திறக்கோவில், 15 கீழ்புத்தூர், 16. கூனம்பாடி, 17. அகரகொரக்கோட்டை, 18. பெரிய கொரக்கோட்டை, 19. கூத்தவேடு, 20 கூடலூர், 21. தெள்ளார், 22 நல்லூர், 23. எறமலூர், 24 நெல்லியாங்குளம், 25. கீழ்வில்லிவனம் 26. முதலூர், 27. சேதராகுப்பம், 28. பிநதூர், 29 பொன்னூர், 30. இளங்காடு, 31. கீழ் சாத்தமங்கலம், 32. வங்காரம்,

33. பொன்னூர்மலை, 34. எறும்பூர், 35. சேந்தமங்கலம், 36. ஆலயவாடி, 37. பெரணமல்லூர், 38. இராமசமுத்திரம்,+ 39. சென்னந்தல்,+ 40. பழஞ்சூர், 41. வீரசேகரப் பெரும்பள்ளி,× 42 அலகாம்பூண்டி, 43. சிந்தகம்பூண்டி,×

+ இக் குறியுள்ள ஊர்களில் தற்சமயம் ஜைனர் வீடுகள் இல்லை.

### போளூர் தாலுக்கா

1. திருமலை, 2. தச்சாம்பாடி, 3. பரிக்கல்பட்டு, 4. காப்பலூர், 5. பில்லூர், 6. போளூர், 7. குண்ணத்தூர், 8. இரண்டேரிப்பட்டு. 9. மண்டல குளத்தூர்.

### ஆரணி தாலுக்கா

1. ஆரணி, 2. பூண்டி, 3. S. V. நகரம், 4. நேத்தரபாக்கம், 5. கல்பூண்டி, 6. மோட்டூர், 7. திருமலை சமுத்திரம், 8. ஆரணிபாளையம், 9. சேவூர், 10. புதுக்காம்பூர், 11. பேட்டூர், 12. அனந்தபுரம், 13. சதுப்பேரிபாளையம், 14. தச்சூர், 15. ஓதலவாடி, 16 முழகம்பூண்டி, 17. மேலப்பந்தை, 18. வாழப்பந்தை, 19. கோவிலாம்பூண்டி,× 20. கொழப்பலூர், 21. ராட்டினமங்கலம், 22. முள்ளிப்பட்டு, 23. அறையாளம்,× 24. நெல்லிபாளையம்,× 25. மெருகம்பூண்டி,+ 26. தண்டுகுண்ணத்தூர்,+ 27. அக்ராபாளையம், 28. ஒண்ணுபுரம்,+ 29. விதராகண்டம்,+ 30. மேட்டுப்பாளையம்.+

### செய்யாறு தாலுக்கா

1. செய்யாறு, 2. திருவத்திபுரம், 3. திருப்பரம்பூர், 4. கரந்தை, 5. வெண்பாக்கம், 6. நாவல், 7. வெள்ளை, 8. பேல்மின்னல்,+ 9. போரணம், 10. புனதாகை,+ 11. வேளியநல்லூர், 12. கீழ்கல்புல்லி,+ 13. பெருங்

கட்டூர்,+ *14*. நறுமாபள்ளம்,+ *15*. நெல்லி, *16*. பண பாக்கம்,+ *17*. சுரையூர், *18*. தின்னலூர்.×

+இக் குறியுள்ள ஊர்களில் தற்சமயம் ஜைனர் வீடு கள் இல்லே.

வேலூர் தாலுக்கா

*1*. ராயவேலூர்

## 4. தென்னர்காடு மாவட்டம்

1. *கீழ் குப்பம் (கீழருங்குணம்)*—கூடலூர், நெல்லிக் குப்பம் சாலேகள் சேருமிடத்தில் உள்ள இவ்வூரில் கிராம தேவதை அம்மன் கோவிலின் மேற்புரம் ஒரு சமண திரு உருவம் முக்குடை மற்றும் சாமரதாரியுடன் காணப்படுகிறது.

2. *திருவதிகை*—கடலூரில் இருந்து பண்ருட்டிக் குப்போகும் சாலேயில் பதினுலு மைலில் உள்ள இவ்வூரை திருவதி அல்லது திருவீதி என்று வழங்குவர். திரு வதிகை ஊரில் வயலில் 2 சமண உருவங்கள் கண்டெடுக் கப்பட்டன. ஒன்று 4½. அடி உயரமுள்ளதாய் அமர்ந்த உருவில் உள்ளது. இஃது இவ்வூர் சிவன் கோவிலில் வைக்கப்பட்டுள்ளது. மற்றென்று குமரப்ப நாயக்கன் பேட்டையில் உள்ள சத்திரத்தில் வைக்கப்பட்டுள்ளது. இது 3½ அடி உயரம் உள்ளது.

3. *திருப்பாதிரிப்புலியூர்-(பாடலிபுரம்)* இது திருப் பாப்புலியூர் எனவும் வழங்கப்படுகிறது. இங்கு சமணர் கோயில் இருந்தது என உறுதிப்படுத்த மஞ்சகுப்பம் சாலேயில் யாத்ரிகர் பங்களாவுக்கு அருகில் இன்றும் ஒரு சமணத் திருஉருவம் காணப்படுகிறது. இது நான்கு அடி உயரம் உள்ளது.

4 அரியாங்குப்பம்-இது புதுச்சேரிக்கு அருகில் உள்ள ஊர். இங்கு நான்கு அடி உயரமுள்ள சமண உருவம் உள்ளது. இதை ஒரு ஆண்டி 'பிரமா' என்னும் பெயரில் பூஜை செய்து வருகிறார். இவ்வூரின் பழைய பெயர் அருகன்குப்பம்.

5. பள்ளிச் சந்தல்-திருக்கோயிலூர் தாலுக்காவில் இருக்கிறது. இங்குள்ள சிறு குன்றின்மேல் சிதைந்து போன சென்னியம்மன் கோயில் என்னும் சமணர் கோயில் உள்ளது. இங்கு பாகுபலி சுவாமியின் சிலை ஒன்று உள்ளது.

6. சோழவாண்டிபுரம்-திருக்கோவிலூர் தாலுக்காவிலுள்ள கீரனூர் என்னும் கிராமத்தில் 'பஞ்சனும் பாறை' எனப்படும் கற்பாறையில் கோமதீஸ்வரர், பாஸ்வநாதர், திருஉருவங்களும், கற்படுக்கைகளும், கல்வெட்டும் உள்ளன. மலைப்பாறையில் கோமதீஸ்வரர், பாரிஸ்வநாதர், மகாவீரர், பத்மாவதி தேவி ஆகிய திருஉருவங்கள் உள்ளன. பத்மாவதி தேவியை காளி அம்மன் என இவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.

7. தேவியகரம்; 8. எலந்துரை-என்னும் ஊர்களில் பார்சுவநாதர் திருஉருவம் உள்ளது.

8. எள்ளானூர்-இவ்வூர் திருக்கோயிலூர் தாலுக்காவில் திருக்கோயிலூருக்கு தெற்கே 16½ மைலில் உள்ளது. ஒரு பழைய சமண கோயில் இங்கு உள்ளது.

10. திருநறுங்குன்றம் (திருநறுங்கொண்டை) திருக்கோவிலூர் தாலுக்காவில் உளுந்தூர் பேட்டையிலிருந்து சுமார் 10 மைல் தொலைவிலுள்ளது. இவ்வூர் கோவில் மலைமேல் இருக்கிறது. மலையில் பாரிஸ்வநாதர், (அப்பாண்டை நாதர்) திருஉருவம் உள்ளது பெரிய குகை, முனி படுக்கைகள் ஆகியவை உள்ளன. இங்கு வைகாசி மாதம் 7-ம் நாள் திருவிழா நடைபெறுகிறது.

*11.* கடலூர் O. T.; *12.* கடலூர் N. T; *13.* திருக்கோவிலூர்; *14.* வடமருதூர், *15.* ஆக்கனூர் +; *16.* கீழூர் +; *17.* வீரமடை; *18.* வீரசோழபுரம்; *19.* திருநாதர்குன்றம் +; *20.* தானவனூர்மலை +; *21.* வாலதிமலை +; *22.* எண்ணாயிரம்மலை +; *23.* பள்ளிச் சந்தம் +; *24.* அனந்தமங்கலம் +; *25.* ஆரமங்கலம் +; *26.* ஜின சிந்தாமணி நல்லூர் +; *27.* திருநெடும் பாறை +; *28.* திட்டைகுடி +; *29.* வாகையூர் +; *30.* அமணப்பட்டு +; *31.* சிதம்பரம் +; *32.* பெரிய கூடலூர் +.

## விழுப்புரம் தாலுக்கா

*1.* கரடிபாக்கம்; *2,* கொலியனூர் +; *3.* இருவேலி பட்டு +; *4.* பிடாகம்; *5.* விழுப்புரம்; *6.* முண்டியம் பாக்கம்; *7.* கப்பியாம்புலியூர்; *8.* பாவண்டூர் +; *9.* பாலப்பட்டு +; *10.* புதுப்பட்டு +; *11.* எழாய்கொல்லை + *12.* சிந்தாமணி +; *13.* மானமாமேவி +; *14.* வீரனூர் +; *15.* விளத்தை +; *16.* சாங்கியம் +; *17.* கூவம் +; *18.* முட்டத்தூர்.

## திண்டிவனம் தாலுக்கா

*1.* பேரணி; *2.* செண்டியம்பாக்கம்; *3.* மோழியனூர்; *4.* வீடூர்; *5.* மயிலம்; *6.* கள்ளக் கொளத்தூர்; *7.* பேராவூர்; *8.* கிளியனூர் +; *9.* உப்பு வேலூர்; *10.* கீழ் எடையாளம்; *11* ஆல கிராமம்; *12.* எண்ணாயிரம் பிரம்ம தேசம் +; *13.* பெரமண்டூர்; *14.* வேம்பூண்டி; *15.* திண்டிவனம்; *16.* கொள்ளார்; *17.* ஔவையார் குப்பம் +; *18.* வெள்ளிமேடு பேட்டை; *19.* இளமங்கலம்; *20.* விழுக்கம்; *21.* தாதாபுரம் +; *22.* ஒலக்கூர் +; *23.* அரமங்கலம் +; *24* இரட்டணை +; *25.* நெமிலி +; *26.* ஆத்திகுப்பம் +.

+ இக்குறியுள்ள ஊர்களில் தற்சமயம் ஜைனர்கள் இல்லை,

செஞ்சி தாலுக்கா

1. மேல் சித்தாமூர்; 2. பெரும்புகை; 3 பெரும் புகை மலை; 4. சக்ராபுரம்; 5. செஞ்சி; 6. திருநாதர் குன்றம்; 7. சிறுகடம்பூர் +; 8. அண்ணமங்கலம்; 9. கன்னலம்; 10. வளத்தி; 11, கொழியாங்குப்பம் +; 12. சீயப்பூண்டி +; 13. செவளாம்பாடி +; 14. உமையாந்தாங்கல் +; 15. அருகர்பூண்டி +; 16. வீரணாமநல்லூர் +; 17. அகரம் +; 18. எளமங்கலம் பெருமுகை +; 19. வடதரம் +; 20. வயலாமூர் +; 21. வளத்திமலை; 22. மேல் மலையனூர்; 23. தொரப்பாடி; 24, தாயனூர்; 25, சிண்டிப்பட்டு; 26. எய்யில்; 27. கள்ளப்புலியூர்; 28. தொண்டூர்; 29. தொண்டூர் மலை; 30. அகலூர்; 31. பென்னகரை; 32. வீரணாமூர்; 33. மேல் அத்திப்பாக்கம்; 34. ஏதாநெமிலி; 35. கீழ்வயலாமூர்; 36. முப்பத்தூர் +; 37. கோணமங்கலம் +; 38. பெருங்குணநல்லூர் +; 39 தூளி +; 40. நெற்குணம்; 41. கொசப்பட்டு +; 42. காட்டு சித்தாமூர்.

5. திருச்சிராப்பள்ளி மாவட்டம்

1. வெள்ளனூர்-திருச்சி மாவட்டத்திலுள்ள இந்த ஊர் வயலில் சமணத் திருஉருவச் சிலைகள் உள்ளன.

2. வீரப்பட்டி-திருச்சியிலிருந்து புதுக்கோட்டைக்குப் போகிற பாதையில் இடது புறத்தில் உள்ள இந்த ஊருக்கு அருகில் அன்னவாசல் என்னும் இடத்தில் ஒரு வயலில் சமணத் திருஉருவம் உள்ளது.

3. அம்பாபுரம்-(விக்கிரமம்) இவ்வூர் உடையார்புரம் தாலுக்கா உடையார் புரத்திலிருந்து தென்மேற்கில் 11 மைலில் உள்ளது. இங்கு சமண உருவங்கள் உள்ளன

4. ஜெயங்கொண்ட சோழபுரம் - உடையார்பாளையத்துக்கு வடமேற்கே 5 மைலில் உள்ளது. இங்கு ஏறிக்

கரையில் ஒரு சமண உருவமும் தெருவில் ஒரு சமண உருவமும் உள்ளன.

5. லால்குடி-திருச்சிக்கு வடக்கே 11 மைலில் இருக்கிறது. இவ்வூருக்கு அருகில் புள்ளம்பாடிக்கு போகிற சாலையில் இடது பக்கத்து வயலில் சமண உருவம் உள்ளது.

6. வண்ணம்-(உண்ணம்) உடையார்பாளையத்துக்கு தென்மேற்கே 19 மைலிலுள்ள கீழ்பளுருக்கு தெற்கே 2 மைலில் சமண உருவம் உள்ளது.

7. மகாதானபுரம்—குளித்தலை தாலுக்கா குளித்தலைக்கு மேற்கே 13 மைலில் உள்ளது. இங்கு சமணத் திருஉருவங்கள் உள்ளன.

8. சிவாயம்-குளித்தலைக்கு தெற்கே 5. மைலில் சமணத் திருஉருவம் உள்ளது.

9. சுண்டைக்காய்ப்பாறை-குளித்தலைக்கு தெற்கே 3 மைலில் இந்த கிராமத்தில் ஒரு பாறையில் சமண உருவங்கள் உள்ளன.

10. வெட்டுவாய்த்தலை - குளித்தலைக்கு வடமேற்கே 9 மைல். இங்கே மூன்று சமண உருவங்கள் உள்ளன.

11. திருஜினபள்ளி-(ஸ்ரீ ஜினபள்ளி); 12. புகழிமலை (கரூர்); 13. ஜம்புகேஸ்வரம்; 14. திருமலைவாடி; 15. பெரியம்மாபாளையம்; 16. குத்தாலம்; 17. பழைய செங்கடம்; 18. அமண்குடி; 19. புளிவலம்; 20. அமுதமொழிப் பள்ளி; 21. பழநாகப்பள்ளி; 22. உறையூர்; 23. ஏறுநாதர்மலை; 24. சீயாலம்; 25. வெங்கநல்லூர் பாறையில் மகாவீரர் திருஉருவம் உள்ளது.

## 6. புதுக்கோட்டை மாவட்டம்

1. அம்மா சமுத்திரம் - அம்மா சமுத்திரத்திற்கு மேற்கே பள்ளிகுளம். இக்குளத்திற்கு மேற்கே 25 அடி உயரமுள்ள பாறையில் சமண உருவம் உள்ளது.

2. ஆலருட்டீமலை-அம்மா சமுத்திரத்திற்கு அருகிலுள்ள இம்மலையில் சித்தன்னவாசலில் உள்ளதுபோல் இயற்கை குகைகள் உள்ளன. மலையில் செதுக்கப்பட்ட இரண்டு ஜைன சிலைகள் நன்ருகவும், சிறிது சிதைந்தும் உள்ளன. 11-ம் நூற்ருண்டைச் சார்ந்த மாரவர்ம சுந்தரபாண்டிய மன்னனின் கல்வெட்டும் உள்ளது.

அதன் அருகில் பொம்பு மலையும், தேரு திருபள்ளி மலையும் உள்ளன: இங்குள்ள மடத்திற்கு ஒரு கிராமத்தையே தானமாகக் கொடுத்ததாகக் கல்வெட்டு ஒன்று உள்ளது.

மேலாமலை - இங்கும் குகைகள் உள்ள.

3. சடையாபாறை - இங்கு சமண திருஉருவம் உள்ளது.

4. தேனிமலை-(தேனூர்மலை) இங்கு ஒரு இயற்கைக் குகை உள்ளது. இதை 'ஆந்தார் மடம்' என்கின்றனர். இதன் பொருள் - முக்கிய குருமடம் என்பதாம். இதில் 8-ம் நூற்ருண்டு கல்வெட்டு உள்ளது. இங்கும் பக்கத்தில் யக்ஷிகளின் சிலைகள் உள்ளன.

5. மலையக் கோயில்-கற்பாறையில் குடைந்து அமைக்கப்பட்ட இரண்டு கோயில்கள் உள்ளன. சமண உருவம் உள்ளது.

6. சித்தன்னவாசல்-இது புதுக்கோட்டையிலிருந்து 12 மைல் தொலைவில் இருக்கிறது. இவ்விடம் கி. மு. 3-ம் நூற்ருண்டு முதல் கி.பி. 12-ம் நூற்ருண்டுவரை ஜைன தருமத்தின் இருப்பிடமாக இருந்துவந்தது. இயற்கை குகைகள் உள்ளன. சிலைகள் உள்ளன. தமிழ் மற்றும் பிராமி கல்வெட்டுகள் உள்ளன. மலையின்மேல் இயற்கை குகை உள்ளது. 17 படுக்கைகள் உள்ளன. இங்கு அழகான ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

பி. வி. ஒ. தேசாய் குறிப்பிடுவதாவது.- இவ் ஓவியங்கள் அஜந்தா மற்றும் இலங்கையிலுள்ள 'சிகிரிய' ஓவியங்களோடு ஒப்புநோக்கத் தக்கவை. இவை நான்காம் நூற்றூண்டைச் சேர்ந்தவை. மிகப் பழமையானவை. மகேந்திர பல்லவனுல் ஆக்கப்பட்டவை எனக் கல்வெட்டு கூறுகிறது.

7. ஆலங்குடி தாலுக்கா, வளம்பட்டி அரசாங்க பாடசாலை அருகில் சமண உருவம் உள்ளது.

8. ஆலங்குடி தாலுக்கா, புந்தாம்பூரில் சமண உருவம் உள்ளது

9 ஆலங்குடி தாலுக்கா, செம்பாட்டூரில் சமண உருவம் உள்ளது.

10 திருமய்யம் தாலுக்கா, புலாலைக்குடியில் பாறையில் சிறு சமணர் கோயில் உண்டு.

11. தேவர்மலை-இங்கு சமணர் கோயில் உள்ளது.

12. குளத்தூர் தாலுக்கா, குன்னண்டார் குகைக் கோயில் சமணர் கோயிலாகும்.

13. குளத்தூர் தாலுக்கா, அன்னவாசல்பள்ளி ஊருணிக்கு மேற்கில் உள்ள தென்னந்தோப்பில் 2 சமண உருவங்கள் உள்ளன.

14. வீரக்குடிக்கு அருகில் சமணர் மேடு என்னும் இடத்தில் சமண உருவம் உள்ளது.

15. திருப்பூர்; 16. தேக்காட்டூர்; 17. கண்ணங்குடி; 18. விராலூர்; 19. கீழைத்தணியம்: 20. அம்மணக்குறிச்சி; 21. சமணர் திடல் ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

22. நாரட்டாமலை-இங்கு ஜைன சாதுக்கள் வசித்தனர். ஜைன தர்ம பிரசாரத்துக்காக மடமும் நிறுவியுள்ளனர். ஒருசமயம் இது ஜைன தருமத்தின் கேந்திரமாக விளங்கியது.

23. பள்ளிவாயல்.

24. செட்டிபட்டி-இங்கு ஜைன சின்னங்கள் காணப் படுகின்றன.

25. சமணர் குன்று-இங்கு இரண்டு கோயில்கள் இருக்கின்றன. சோழர்கள் காலத்தவை. தீர்த்தங்கரர் கள், யக்ஷயக்ஷிகளின் சிலைகள் உள்ளன. இவை முதல் இராஜ இராஜ சோழன் காலத்தவை. 10-ம் நூற்றாண் டைச் சார்ந்தவை.

## 7. தஞ்சாவூர் மாவட்டம்

1. திருநாகேச்வரம் - கும்பகோணம் தாலுக்கா இவ் வூர் அம்மன்கோயில் கல்தூணில் சமண உருவம் உள் ளது. இவ்வூர் வயலில் சமண உருவம் உள்ளது.

2. திருவலஞ்சுழி-கும்பகோணம் தாலுக்கா, இவ் வூர் சிவன் கோவில் அருகில் சமண உருவம் உள்ளது.

3. தஞ்சாவூர்; 4. கரந்தையாங்குடி; 5. திரு வாரூர்; 6. தீபங்குடி; 7. இராஜமன்னார்குடி, 8. நரிக் குடி; 9 குப்பசமுத்திரம்; 10. வேதாரண்யம்; 11. குட வாசல்; 12. செந்தலை; 13 கும்பகோணம்; 14. திரு நெடும்பாறை; 15. திருத்துறைப்பூண்டி; 16. பழை யாறை; 17. திருப்புகலூர் (வர்தமானீச்வரம்) 18. மருத் துவக் குடி; 19. அமண்குடி; 20. குகூர்; 21. கீழ் படுகை; 22. திருவையாறு; 23. தொழுவணங்குடி; 24. சிறுக்கும்பூர்; 25. ஆமூர்; 26. நாகப்பட்டணம்; 27. தோப்புத்துரை; 28. உரத்தநாடு. ஆகியவை குறிப் பிடத்தக்கவை.

## 8 இராமநாதபுர மாவட்டம்

1. இளையான்குடி-பரமக்குடி ரயில் நிலையத்துக்கு 7 மைலில் உள்ளது. இவ்வூர் சிவன் கோவிலுக்கு வெளியே சமண உருவம் உள்ளது. இவ்வூர் மக்கள் வணங்கி வருகின்றனர்.

2. மஞ்சக்குடி-இவ்வூர் ஏரிக்கரையில் சமண உருவம் உள்ளது. இதைச் செட்டி மக்கள் குலதெய்வமாக வணங்குகிறார்கள்.

3. ஜினேந்திரமங்கலம்-இங்கே சமணர் கோயில் உள்ளது. கோமடேஸ்வரர், இயக்கி முதலிய 4 செம்பு விக்கிரகங்கள் உள்ளன.

4. திருக்களாக்குடி-திருப்பத்தூருக்கு 17 மைல்சேய்மையில் மலையில் கோயில் உள்ளது. இது சைவ ஆலயமாக மாறி உள்ளது இக்கோயிலில் பாரீஸ்வநாதர், சிலை பணமுடியுடன் இருக்கிறது.

5. பெரியபட்டிணம்-இராமநாதபுரம் ரயில் நிலையத்துக்கு தென்கிழக்காக 10 மைலில் உள்ளது. கடற்கரை கிராமம்; இங்கு சமண உருவங்கள் உள்ளன.

6 கிடாரம்-இராமநாதபுரத்துக்கு தென்மேற்கே 14. மைலில் உள்ளது. இக்கிராமத்தின் தெற்கே சமணத் திருமேனி உள்ளது.

7. கோவில்குளம் - இராமநாதபுரத்துக்கு தென் மேற்கே 34 மைலில் உள்ளது. இங்கு இரண்டு சமணத் திருமேனிகள் உள்ளன.

8. மஞ்சியூர் - இராமநாதபுரத்துக்கு வட மேற்கே 15. மைலில் உள்ளது.

9. செல்வனூர் - இராமநாதபுரத்துக்கு தென் மேற்கே 23 மைலில் உள்ளது. இக்கிராமத்திற்கு மேற்கே குடிகள் அற்ற ஒரு கிராமத்தில் சமணத் திருஉருவம் உள்ளது.

10. பிள்ளையார்பட்டி, 11. பிரான்மலை, 12. சிவகாசி பக்கத்தில் அம்மையார் பட்டிமலை, 13. குன்றக்குடி, 14. கருங்கல்குடி, 15. திருவாதவூர், 16. கோவிலங்குளம், 17. இருப்பைக்குடி, 18. பள்ளிமடம், 19 அனுமந்தக்

குடி, 20. தேவிபட்டணம், 21. குலசேகர நல்லூர், 22. இரணியூர், 23. இளையாத்தங்குடி, 24. நடுவிக்கோட்டை.

ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

## 9 மதுரை மாவட்டம்

1. சமணர்மலை:- இது மதுரைக்கு மேற்கே சுமார் 5 மைல் தொலைவில் உள்ளது. இங்கு குகையும், கோயிலும் உள்ளன.

இம்மலையில் ஆங்காங்கே சமண உருவங்கள் உள்ளன. இக்குன்றுக்கு மேற்கே கற்படுக்கைகள் உள்ளன. செட்டி பொடவு என்னும் குகையில் 5 சமண உருவங்கள் உள்ளன. செட்டிபொடவுக்கு கிழக்கே பேச்சி பள்ளம் என்னும் இடத்தில் உள்ள குன்றின்மேல் வரிசையாக சமண உருவங்கள் உள்ளன.

2. அழகர்மலை:- இங்கு ஒரு பெரிய குகை உள்ளது; படுக்கைகள் உள்ளன; பிராமி கல்வெட்டுகள் உள்ளன; ஜைன சாது சிலை ஒன்றுள்ளது.

3 மதுரைக்கு அருகிலுள்ள நாகமலையும், பசுமலையும் குறிப்பிடத்தக்கவை.

4. உத்தமபாளையம்:- மதுரைக்கு வடமேற்கே மூன்று பர்லாங் தூரத்தில் பெரிய பாறையில் 21. சமணத் திருஉருவங்கள் உள்ளன

5. பஞ்சபாண்டவர் மலை (ஐவர்மலை) கீழ்வளைவுக்கு பக்கத்தில் மலை மேலே 3 சமண உருவங்களும், கை எட்டும் அளவில் 6 சமண உருவங்களும், பெரிய குகையில் 100-க்கு மேற்பட்ட கற்படுக்கைகளும் உள்ளன. கீழே இடது பக்கம் உள்ள பாறையில் குகையும் கற்படுக்கைகளும் உள்ளன.

6. திருப்பரங்குன்றம், 7. ஆந்தைமலை, 8. கொங்கர் புளியங்குளம். 9. ஆனைமலை:- இங்கு ஜைன சாதுக்கள் வசித்தனர். இயற்கைக் குகை உள்ளது. பாறையில் தீர்த்தங்கரர்களின் சிலைகளும் யக்ஷ - யக்ஷி சிலைகளும் உள்ளன. கல்வெட்டுகள் உள்ளன. 10. மாங்குளமலை (அரியட்டாபட்டி) 11. விக்கிரமங்கலம், 12. வரிக்கையூர், 13. மேட்டுபட்டிமலை (சித்தர்மலை), 14. முத்துப்பட்டிமலை, 15. கீழ்வளவு, 16. இடமகிரி, 17. கீழ்குயில்குடி, 18. 19 ஆலம்பட்டி ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

## 10. திருநெல்வேலி மாவட்டம்

1. எறுவாடி - நாங்குநேரி தாலுக்கா. இவ்வூரிலுள்ள இரட்டை பொத்தை பாறையில் சமணத் திருஉருவம் உள்ளது.

2. கொற்கை - இவ்வூர் அருகில் உள்ள சாயர்புரத்து சாலையின் ஓரத்தில் வர்த்தமானர் திருஉருவம் உள்ளது. மற்றும் இவ்வூர் வயலில் ஒரு சமண உருவம் உள்ளது.

3. கழுகுமலை - இது கோவில்பட்டி தாலுக்காவிலிருந்து 12 மைலில் உள்ளது. இங்கு 162 ஜினி பிம்பங்கள் ஒரே பாறையில் செதுக்கப்பட்டுள்ளன. அம்மன் உருவமும் உள்ளது. ஆதிநாதர் கோயில், உள்ளது. பெரிய குகையும் உள்ளே பாறையில் 3 சுவாமி உருவங்களும் உள்ளன. சிற்பக் கலை நிறைந்து உள்ளது. அவசியம் பார்க்கவேண்டிய இடம்.

4. வீர சிகாமணி - சங்கர நயினார் கோயிலுக்கு வடமேற்கே 9½. மைலில் உள்ளது. இங்குள்ள பாறையில் ஒரு குகையில் ஒரு வட்டத்தில் இரண்டு பாதங்கள் உள்ளன. இன்னொரு குகையில் சமணத் திருஉருவம் உள்ளது.

5. குளத்தூர் - ஒட்டபிடாரத்திலிருந்து வட கிழக்கே 14½ மைலில் உள்ளது. இவ்வூரில் சமண உருவம் உள்ளது. இதை இந்த ஊரார் வணங்கி வருகின்றனர்.

6. மந்திகுளம் (முந்திக்குளம்) ஒட்டபிடாரத்துக்கு வட கிழக்கே 17 மைலில் வைப்பாற்றங்கரையில் உள்ள இவ்விடத்தில் ஒரு சமணத் திருமேனி உள்ளது.

7. முரம்பன்-ஒட்டபிடாரத்திலிருந்து தென்மேற்கில் 5 மைலில் அஃதாவது ஒட்டபிடாரத்திலிருந்து கயத்தாற்றுக்கு போகிற சாலையின் வலது பக்கத்தில் ஒரு மரத்தின் கீழ் சமண உருவம் உள்ளது.

8. காயல்-தென்கரை தாலுக்கா, ஸ்ரீவைகுண்டத்திலிருந்து கிழக்கே 12 மைலில் உள்ளது தாமிரபரணி ஆற்றங்கரை அருகில் உள்ள இவ்விடத்தில் பல சமணத் திருவுருவங்கள் உள்ளன. இவற்றுள் ஒன்று துணி துவைக்கும் கல்லாக உபயோகிக்கப்படுகிறது.

9 ஸ்ரீவைகுண்டம்-தென்கரைத் தாலுக்கா, திருநெல்வேலிக்கு தென்கிழக்கே 12 மைலில் தாமிரபரணியின் வடகரையில் உள்ளது. இவ்வூருக்கு அருகிலுள்ள ஆதிச்சநல்லூர் என்னும் இடத்தில் ஒரு குன்றில் சமணத் திருமேனி உள்ளது.

10. பொதிகைமலை (குற்றாலம்)-இங்கு சமணத் திருஉருவம் உள்ளது.

11. மாறுகால்தலை; 12. நிகராகார பெரும்பள்ளி; 13. ஆதிநாதபுரம்; 14. அருகன்குளம்; 15. வள்ளியூர்; 16 நாகலாபுரம்; 17. திருநாடிக்கரை ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

## 11. கன்னியாகுமரி மாவட்டம்

*1.* ஸ்ரீபாதபாரை; *2.* திருக்குறண்டி; *3.* நாகர் கோயில்; *4.* சிதரால் (திருசாரணத்துமலை); *5.* திருக் கோட்டாறு; *6.* திருநந்திக்கரை ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

## 12. கொங்குநாடு, சேலம், கோயமுத்தூர் மாவட்டங்கள்

*1.* சேலம்-இவ்வூர் ஆற்றங்கரையில் ஒரு சமண உருவம் உள்ளது. இன்னொரு சமண உருவம் கலெக்டர் வீட்டுக்கும் மாதா கோவிலுக்கும் இடையிலுள்ள வழியில் இருக்கிறது.

*2.* அதமன் கோட்டை-தர்மபுரிக்கு மேற்கே *5* மைலில் உள்ளது. இவ்வூரில் *2* சமணர் கோயில்கள் உள்ளன. இங்கு சமணத் திருஉருவங்கள் உள்ளன.

*3.* தர்மபுரி-(தகடூர்) இங்கு மல்லிகார்சுனர் கோயில் இருக்கிறது. இதில் மல்லிநாதர் சிலை இருக்கிறது. இவ் வூர் ராமக்கா குளக்கரையில் சமண உருவம் உள்ளது.

*4.* பஸ்தீபுரம்-கொள்ளே காலுக்கு தெற்கில் *1* மைலில் உள்ளது. இப்போதும் ஒரு சமண உருவம் அம ணீசுவரர் என்னும் பெயருடன் இங்கு இருக்கிறது.

*5.* பெருந்துறை-(பூந்துறை) ஈரோடு நகரத்துக்கு தென்மேற்கே *10½* மைலில் உள்ளது. இடிந்த சமண கோயிலில் பாரிசுவநாதர் மற்றும் சில சமண உருவங்கள் உள்ளன.

*6.* விஜயமங்கலம்-ஈரோடு தாலுக்காவில் விஜயமங் கலம் ரயில் நிலையத்திலிருந்து வடக்கே *4* மைலில் உள்ள-

மேட்டுபுத்தூரில் ஒரு சமணக் கோவில் உண்டு. இது ஆதீஸ்வரர் கோயிலாகும். இங்கு சில சமண சிற்பங்கள் உள்ளன. விஜயமங்கலத்தில் சந்திர பிரபதீர்த்தங்கரர் ஆலயம் இப்போது நன்ருக இருக்கிறது.

7. ஆனைமலை-பொள்ளாச்சிக்கு தென்மேற்கே 7½ மைலில் உள்ளது இவ்வூருக்கு மேற்கே சமணக் கல் துர்க்கம் என்னும் ஒரு குன்று உண்டு. இங்குள்ள யானை மலைக்காடு என்னும் இடத்தில் ஒரு சமணக் கோயில் உண்டு.

8. வெள்ளோடு-மேலே குறிப்பிட்ட பூந்துறைக்கு 5 மைல் தூரத்தில் உள்ளது. ஆதிநாதர் என்னும் கோயில் உள்ளது.

9. திங்களூர்-ஈரோடு தாலுக்காவில் உள்ளது. இவ்வூரில் புஷ்பநாதர் என்னும் சமண தீர்த்தங்கரரின் கோயில் இருக்கிறது.

10. திருமூர்த்தி மலை-உடுமலை பேட்டையிலிருந்து கிழக்கே 11 மைலில் உள்ளது. இங்குள்ள ஒரு அருவியின் டக்கத்தில் ஒரு பாறையில் சமணத் திருஉருவமும் பரிவார தெய்வங்களும் உள்ளன.

11. மேட்டுப்புத்தூர் - ஈரோடு தாலுக்காவில் ஒரு சமண கோவில் உள்ளது.

12. திருச்செங்காடு: 13. சங்ககிரி; 14. தென்னங்குன்று (கவுண்ட பாளையம்); 15. நைனூர் மலை (ராசிபுரம்) 16. வைகா பொன்மலை; 17. சினபுரம்; 18. முடிகொண்டம்; 19. அரசலையூர்; 20. அமணசமுத்திரம்; 21. ஆனைமலை; 22. அரசண்ணைமலை ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

அருங்குளம்—இது திருத்தணித் தாலுக்காவிலிருக்கிறது. இங்கு மூன்று பிரகாரம் உள்ள பகவான் தர்மநாதருடைய ஆலயம் ஒன்றுள்ளது. இங்கு ஆண்டிற்கு ஒருமுறை பெரிய விழா நடைபெறுகிறது. மக்கள் கண்டு களிக்கின்றனர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | மாவட்டம், | கிராமம், | மலை— | 7 |
| 2. | செங்கல்பட்டு | ,, | ,, | ,, | — 25 |
| 3. | வடஆற்காடு | ,, | ,, | ,, | —115 |
| 4. | தென்னாற்காடு | ,, | ,, | ,, | —104 |
| 5. | திருச்சி | ,, | ,, | ,, | — 25 |
| 6. | புதுக்கோட்டை | ,, | ,, | ,, | — 23 |
| 7. | தஞ்சாவூர் | ,, | ,, | ,, | — 28 |
| 8. | இராமநாதபுரம் | ,, | ,, | ,, | — 24 |
| 9. | மதுரை | ,, | ,, | ,, | — 20 |
| 10. | திருநெல்வேலி | ,, | ,, | ,, | — 16 |
| 11. | கன்னியாகுமரி | ,, | ,, | ,, | — 6 |
| 12. | கொங்குநாடு, சேலம், கோயம்புத்தூர் மாவட்டம் | | | ,, | — 22 |

தமிழ் நாட்டில் மொத்த ஜைன கிராமம், மலைகள்- 415

ஆக்குவதே தெனில் அறத்தை ஆக்குக
போக்குவதே தெனில் வெகுளி போக்குக
நோக்குவதே தெனில் ஞானம் நோக்குக
காக்குவதே தெனில் விரதங் காக்கவே ''

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி.

## பட விளக்கம்

அட்டை முன்பக்கம்: பகவான் மகாவீரர்.

உள் பக்கம்: 108 ஆசாரிய நிர்மல ஸாகர முனி மகராஜ் அவர்கள் திரு. மோகன்லால் சுகாதியா (முன்னாள் ஆளுநர் சென்னை) அவர்களை ஆசீர்வதித்தல்.

★

அட்டை கடைசிப் பக்கம்: 108 ஆசார்ய நிர்மல ஸாகர முனி மகராஜ் அவர்கள் சங்கத்துடன் கன்னியா குமரி விஜயம்.

★

அட்டை உள் பக்கம்: 108 ஆசார்ய நிர்மல ஸாகர முனிமகராஜ் அவர்கள் சங்கத்துடன் கழுகுமலையில் சாதுர் மாச ஒழுக்க நெறிமுறை ஏற்றிருத்தல்.

★

இடையில்: குருவாகிய 108 ஆசாரிய விமல ஸாகர முனி மகராஜ் அவர்கள் 108 ஆசாரிய நிர்மல ஸாகர முனி மகராஜ் அவர்களுக்கு ஆசி வழங்குதல். பக்கம் 80.

இந்நூலை வெளியிட மனமுவந்து பெரிதும் உதவிய நன்கொடையாளர்களின் பெயர்கள்

ஸ்வஸ்தி ஸ்ரீ லக்ஷ்மி சேன பட்டாரக
பட்டாச்சார்ய வர்ய ஸ்வாமிகள்
மேல் சித்தாமூர் ரூ. 501 00

Sree Dharma Chand Jnana-
Chand ji Mutha
Yelanka, Banglore ரூ. 501 00

திரு. P. பார்சுவநாத ஜெயின் B.A.,
டெப்டி கலெக்டர், இராமநாதபுரம். ரூ. 101 00

திருமதி P. ஜிநதத்தையம்மாள்
மேல் சித்தாமூர் ரூ. 51 00

திரு. D. ஜெயகுமார் நைனார் சென்னை ரூ. 25 00

# இந்நூல் கிடைக்குமிடம்

மல்லிநாத் ஜெயின் சாஸ்திரி,
47, பிடாரியார் கோயில் தெரு, சென்னை-600001

குறிப்பு:—மேற்கண்ட நூல் வேண்டுவோர் தபால் செலவிற்காக ரூ. 1-00 அனுப்பி அஞ்சல் மூலம் பெறலாம்.





279



பாரி அச்சகம், 127, பிராட்வே, சென்னை—1.